818



விவேக போதினி

VIVEKA BODHINI

பொருளடக்கம்

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS. 10 NOV 1926

	பக்கம்
முருகன் வழிபாடு	201
கௌடல்ய அர்த்த சாஸ்திரம்	202
காரைக்காலம்மையார்	204
மாணிக்கவாசகர்	209
இரஞ்சிதம்—(நாவல்)	217
நமது சிறு கதை—நாடும் நகரமும்	226
சிறுத்தொண்டர்—(நாடகம்)	233
சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள் (5) ஸ்ரீ வாமனவதாரம் ...	235
வர்த்தமானக் குறிப்புகள்	240

சித்திரப் படங்கள்

யானையினின்று வள்ளி பயந்து ஓடல்.

JL
Tym211, N08VB
N26.18.6.
218379

விவேக போதினி சந்தாதாரர்க்கு ரூ. 1-8-0 விலையுள்ள புத்தகங்கள் இனாமாய்த் தரப்படும்.

என் கொழுப்புள்ள ஆகாரம்?

சரீரம் அல்லது மூளையினால் செய்யப்படும் ஒவ்வொரு காரியத்திலும் குறைகிற சக்தியை திரும்பவும் நாம் அடையவேண்டும். உடம்பில் நிரம்பவும் வியர்த்தால் வெளியில் போன ஜலத்திற்கு பதில் ஜலம் உள்ளே செலுத்தவேண்டும். அதுபோல நரம்புகளும் தசைகளும் தேய்ந்து போனால் அவைகளை சீர்படுத்த ஆகாரம் வேண்டும்.

உணவில் குணமேயன்றி அளவு முக்கியமல்ல

ஒரு கொதிப்பரை (பாய்லர் Boiler) தண்ணீர் காய்ச்ச உபயோகமற்ற கட்டைகளை ஏராளமாக எரித்தால் நெருப்பு திணியடைவதைத் தவிர, நீராவி நிரம்ப வருவது கிடையாது. அம்மாதிரிதான் உடம்பும். நிரம்ப உணவு சாப்பிடுவதால் உபயோகமற்ற சாமான்களை வெளியே தள்ள உடம்புக்குக் கஷ்டமுண்டாகி அதனுடைய சக்தியைக் குறைக்கிறது. பலத்தைக் கொடுக்கும் உணவைக் கொஞ்சம் உட்கொண்டாலும் உடம்புக்கு சிரமத்தைக் கொடுக்காததோடு விருத்தி செய்கிறது.

அதனால் தான் நெஸ்லேஸ் பால் ஆகாரம் (Nestle's Milk Food) உண்மையான பால் கஞ்சியாய் உடம்பினாலும், மூளையினாலும் வேலை செய்கிறவர்களுக்கு உபயோகப்படுகிறது. அதில் ஒருமித்திருக்கும் ஸத்து அவ்வளவும் சரீரத்தில் பரவி மனதிற்கும் விருத்தியடைய வேண்டியதற்கு இன்றியமையாத உத்ஸாகத்தையும் ஆரோக்கியத்தையும் கொடுக்கிறது.

பெரிய டின் 1-க்கு விலை ரூபா 1-6-0 (தான்.)

வலதுபுறத்தி லிருக்கும்
மேல் விலாசத்திற்கு
எந்த பாஷையில்
எழுதி விசாரித்
தாலும் பதில்
அனுப்பப்படும்.



கீழ்க்கண்ட விலாசத்தைக்
கிழித்து கவர் அல்லது
கார்ட் மேல் ஒட்டி
அனுப்பவும்.

NESTLÉ & ANGLO SWISS
CONDENSED MILK CO.,
POST BOX No. 396
CALCUTTA.

பெண்களுக்கு! ஆபரணமே அழகு!

ஜர்மனி தேசத்து "டைமன் எக்ஸ்ட்ரா" என்னும் கமலம்.

சீமைக் கமலம் போன்றது. "Diamond-extra" மிக்கப் பிரகாசமுடையது.

ஹூஸ் தனி கமலம் விலை :—சன்னம் காரட்டு ரூபா.	7	8	0	
,, ,, ,,	5	8	0	
ஷை உருசைஸ் காரட் விலை ரூபா.	4	0	0	
,, ,, ,,	2	8	0	

கம்மல் or தோடு சிறு ஜதை விலை	ரூ. 18	முதல்	ரூ. 22
ஷை நடுத்தரம் சைஸ்	ரூ. 25	...	ரூ. 30
ஷை பெரிய சைஸ்	ரூ. 32	...	ரூ. 40

3-கல்வைத்த பேசரி விலை ரூ.	6	0	0	கிளாவர் ஜதை கடுக்கன்	ரூ. 12
8-கல்வைத்த பேசரி விலை ரூ.	9	8	0	ஒத்தக்கல் கடுக்கன்	ரூ. 16
கிளாவர் மூக்குத்தி விலை ரூ.	5	0	0	புலாக்கு	ரூ. 12
மூக்கு முத்து விலை ரூ.	4	0	0	மூக்குத் திருகு	ரூ. 4, 5

நகைகள் பவுன் தங்கத்தில் கட்டியவை.

கேட்லாக் தமிழில் கிடைக்கும். இதர நகைகளும் ஆர்டர்மேல் செய்துகொடுக்கப்படும். மாட்டல், பில்லை, முகப்பு, அட்டிகை முதலியவைகள் இதே ஜர்மன் கமலத்தில் கட்டித் தரப்படும். அசல் சீமைக் கமலம்போலவே யிருக்கும்.

கிரந்தி. சுப்ரமண்யஞ் செட்டி & சன்,
69-நாராயண முதலி தெரு, சௌகார்பேட்டை, சென்னை.

திருப்புகழ்

பாராயணத் திருமுறை

"திருப்புகழ்ப் பாராயணத் திருமுறை" என்னும் இந்நூல், இத்தமிழ் நாடெங்கும் திருப்புகழ் என்னும் தேனை, மாரியாகப் பொழிபவரும், திருப்புகழடியார் திருவடிச் சென்னியார் என்னுங் காரணப் பெயர் வாய்ந்தவருமாகிய பிரம்மஸ்ரீ **வள்ளிமலை ஸ்வாமி சச்சிதாநந்தா** அவர்களால் தொகுக்கப்பட்ட தொன்றாகும். திருப்புகழ்த் தொகுப்புக்கள் பலவுளவே, இத்தொகும்பு ஏனோ எனின் திருப்புகழ் என்னும் அருட் பிரபந்தமானது ஸகல ஜீவர்களுக்கும் இம்மை மறுமை வீடுகளைத் தரும் கற்பக விருக்ஷமாகும். அதில் ஒவ்வொரு சந்தப்பாவும் ஒவ்வொரு மஹா மந்திரமாகும். ஆதலாற்றான் திருப்புகழ்படிப்பதை "பாராயணம்" என்று பெரியோர் வழங்குகிறார்கள். இப்பாராயணத்தினால் வீட்டின்ப மொன்றினையே நாடும் உத்தமாதிகாரிகளுக்கு இம்மைச் சுக முண்டாவதோடு, பல கோடி சமயப் பொதுக் கடவுளாகிய முருகப் பெருமானது அருளும், தரிசனமும், ஞானமும், அனுபவமும் உண்டாகும். இம்மை, மறுமைகளை நாடும் மத்திய அதிகாரிகளுக்கு இகத்தில் சகல செல்வ யோக மிக்க பெரு வாழ்வும், பரத்தில் வானவர் போற்றும் துறக்க வின்பமும் உண்டாகுமென்பது திண்ணம். இம்மைப் பயனொன்றையே நாடும் அதம அதிகாரிகளுக்குக் கல்விப் பெருக்கும், நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் இன்னவை பலவும் ஏற்படும், இதில் அணுவளவும் ஐயமின்று, 10-படங்களுடன், சாதா பைண்ட் ரூ. 1; கலிகோ ரூ. 1-4-0

A. (No. 963)

Aletris Cordial

அல்லெட்டரிஸ் கார்டியல்

ஸ்திரீகளின் பலஹீனத்தைத் தீர்க்கும் மருந்து

உலகெங்கும் வைத்தியர் யாவராலும் ஸ்திரீகளின் சகலவிதமான நோய்களுக்கு உபயோகிக்கப்படுவது. ருது அடையநிற்கும் சிறுமிகளுக்கும் இம்மருந்து மிகச் சிறந்தது.

அளவு:—தேயிலைக் கரண்டி மருந்தை, உண்டபின்னும், நித்திரைக்குப் போவதற்கு முன்னும் உட்கொள்ளவேண்டும். உஷ்ணமான ஜலத்துடன் கலந்துகொண்டால் விசேஷ குணம் உண்டு.

Celerina

ஸிலரீனு

பலமற்றவர்க்குக் கைகண்ட மருந்து

உண்பதற்கும், உறங்குவதற்கும் ஒரு மணி முன்பு ஒரு தேயிலைக் கரண்டியளவு, நாளுக்கு மும்முறை சாப்பிட்டால், மனத்தளர்ச்சி, அலட்டல், புரட்டல், தூக்கமில்லாமை, மூர்ச்சை, மயக்கம், நரம்புக்கேடா லாகும் அஜீர்ணம், பலஹீனம், குடிக்கேடால் விளையும் நோய்கள் இவை யாவும் ஒழிந்து உடம்பு புஷ்களமடையும். லாகிரி வஸ்துக்கள் கலவாது, மூளை வஸ்து விருத்தியடைய, கவனத்துடன் செய்யப்பட்டது.

இப்பிரசித்திபெற்ற மருந்துபோல் போலியாக இருக்கும் மருந்துகளைப் பார்த்து ஏமாறுமல்

RIO CHEMICAL COMPANY, NEW YORK CITY, U. S. A.

என்ற லேபிலைப் பார்த்து வாங்கவும். இது மருந்துக்கடைகளில் எங்கும் கிடைக்கும்.

(A. No. 2278)

பாலாஜி அண்டு கம்பெனி, காசி.

புதிய சரக்குகள்! உடனே எழுதுங்கள்!! சகாய விலைகள்!!!

புதுமாதிரி பட்டுப் புடவைகள்

இந்தப் புடவைகள் மெல்லிய பட்டினுல் பளபளப்பாகவும் அழுத்தமாகவும் நெசவு செய்யப்பட்டுள்ளது. சிவப்பு, பச்சை, ரோஜா, நீலம் முதலிய கலர்களில் விழிம்பு முந்திகளும் அழகான ஜரிகை வேலையும் செய்யப்பட்டுள்ளது. 8 கஜம் $2\frac{1}{2}$ முழம் அகலம், புடவை 1-க்கு விலை ரூ. 25, 30, 35-முதல் 45-வரை.

பட்டு ரவிக்கைகள்

உடல் சாதா விழிம்புக்கு அழகான ஜரிகைவேலை செய்யப்பட்டு பலவித புதுமாதிரி கலர்களில், ரவிக்கை 1-க்கு விலை ரூ. 3-முதல் ரூ. 5-வரை.

விளையாட்டுப் பாத்திரங்கள்

பித்தளை வெங்கலத்தால் செய்த 32-வித சாமான்கள் அடங்கியதும், குழந்தைகளுக்கு சந்தோஷத்தை உண்டுபண்ணக் கூடியதுமானவை:

1 நெ. பெரிய செட் 1-க்கு	ரூ.	5 0 0
2 நெ. மத்திம செட் 1-க்கு	ரூ.	3 0 0
3 நெ. சிறிய செட் 1-க்கு	ரூ.	2 8 0

அன்னபூர்ணி அம்மன் ஸ்தோத்திரம் இனும்.

Balajee & Co., Silk Merchants,

Benares City

218377.

உ, வேலுமயிலுந் துணை

ஷண்முக விஜயம்

திருப்புகழ் விருத்தியுரை

படங்களுடன் விலை அணா 12

முதல் தொகுதி : : 6-படை வீடுகள்

டேமி அளவில், 64-பக்கங்கள்கொண்ட 12-சஞ்சிகைகளாக வெளிவருகிறது. கிளேஸ் காகிதத்தில் ஒரு பதிப்பும், பேதர்வேயிட் எனும் விலையுயர்ந்த காகிதத்தில் ஒரு பதிப்பும், ஆக இரண்டு பதிப்புகள் வெளிவருகின்றன.

வருஷ சந்தா (தபாற் செலவுடன்)

கிளேஸ் காகிதப் பதிப்புக்கு ரூ.	4 12	கிளேஸ் தனிச்சஞ்சிகை அணா	7
பெதர்வெயிட் காகிதப்பதிப்பு „	6 0	பெதர்வெயிட் ஷை „	9

பத்திரிகை அபிப்பிராயங்கள்

சுதேசமித்திரன்.— * * நமக்குக் கிடைத்துள்ள விருத்தி உரை, முதனூலின் அழகிற் கியைந்ததா யிருக்கிறது. முருகன் அழகன், திருப்புகழ் அழகியது. இந்தப் புத்தகமும் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. * சில பாடல்களின் உரை, மிக்க விசேஷமானதென்று அறிவிக்கப்பட்டோம். ஆனல் ஒவ்வொரு பாட்டின் உரையும் அப்படியேதான் இருக்கிறது.

லோகோபகாரி.— * * இது கண்ணுக்கும் கருத்துக்கும் இன்பம் விளைக்கிறது. அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழின் பெருமையை நாம் சொல்லவல்லோ மல்லேம். அதனைத் தமிழ் மறை என்பார் அறிஞர். பண்டிதரும் பாமரரும் போற்றும் திருப்புகழுக்கு உரையில்லாத குறை நெடுநாளாக இருந்து வந்தது. அந்தக் குறை முருகன் அருளால் இப்பொழுது நீங்கிவிட்டது. * * இதனைப் படிப்போர் திருப்புகழின் உட்கருத்தைத் தெளிவாக அறிந்துகொள்ளலாம். * * முருகன் அடியார்களும் திருப்புகழ் விருப்புடையார்களுமான தமிழர்கள் இதனை ஆதரிக்கவேண்டு மென்பதை நாம் சொல்வது மிகையாம். * * இந்த நன்முயற்சியைத் தமிழர்கள் போற்றுவார்களாக.

ஸ்வராஜ்யா.— * * பெயர் மாத்திரையில் விருத்தியுரையாய் இராமல், உட்பொருளையும் பலரும் அறியக்கூறும் விருத்தியுரையாய் உளதென்பதைக் குறிப்பிடவேண்டும். பொருள் விளங்காது திருப்புகழைப் பாடவும் படிக்கவும் பேரவாக் கொண்டிருப்போர், இவ்விருத்தியுரை கண்டு இதயம் கனிவரெனக் கருதுகிறோம்.

தமிழன்.— * * அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் போன்ற நூல்களுக்கு நல்ல பதிப்புகள் வெளியிடப் பெறுவதும் ஓர் ஆனந்தமே யாகும். இத்தகைய ஆவல் அல்லயன்ஸ் கம்பெனியாருக்கு எற்பட்டதைப்பற்றி நாம் மகிழ் வெய்துகிறோம். * * தமிழைப் புதிதாகக் கற்கும் மாணவருக்கும் திருப்புகழ் படிப்பதில் துணை செய்வதாகும். பொதுவாகத் தமிழ் மக்களும், சிறப்பாக முருகக் கடவுளது அடியார்களும் திருப்புகழுக்கு விருத்தியுரை காணும் நன்முயற்சியினை ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

இந்து சாதனம்:—* * உரை மிக நுட்பமாகவும் விரிவாகவும் பல தக்க பிரமாண சகிதமாகவும் இனிது எழுதப்பட்டுள்ளது. பிரதி, கண்டோர் கண்கவரும் வனப்பினதாய் அழகுற அச்சிடப்பட்டிருக்கின்றது. சிவபெருமானுக்குக் குமாரக் கடவுள் பிரணவப் பொருளை ஓதிச் சிவகுருமூர்த்தமான திருவுருவப் படம் திருவருள் விலாஸத்தோடு கூடியனவாய் எவ்வகைக் கன்னெஞ்சினரையும் கண்ட மாத்திரத்தே உருகச்செய்யும் பான்மையனவாய் அமைக்கப்பட்டுள்ளது.

ஸமரஸ போதினி:—* * * திருப்புகழுக்கு இதுவரை, நமக்குத் தெரிந்தமட்டில், இத்தகை உரை இலது. இவ்வுரை மிகவும் அழகிய நடையில், பொருள் நுட்பங்களை மழுப்பிவிடாது நன்குவிளக்கி எழுதப்பட்டிருக்கின்றது. பொதுவாகவே இஃது புலவர் விருந்தாகத்தக்கதே என நாம் கூறுவோம்.

விலாஸம்:— அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

கந்தபுராணச்சுருக்கம்

மூலமும் பொழிப்புரையும் விருத்தியும்

இந்நூல் ஸ்ரீமத் - சம்பந்தசரணாலய சுவாமிகளால் சொற்சுவை, பொருட்சுவை, சந்தச்சுவை முதலியன ததும்ப 1000 பாடல்களாகப் பாடப்பட்டது. கடல்போல் பரந்து கிடக்கும் பெரிய கந்தபுராணக் கதையை இனிது விளக்குவது. மூலத்திற்கேற்ற பொழிப்புரையும், விருத்தியும் பலநூற் பிரமாணங்களுடன் எழுதப்பட்டுள்ளன. டிம்மி 8-பக்கம் அளவில் நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டது. 496 பக்கங்கொண்டது.

காலிகோ பயிண்டு விலை ரூ. **3**

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்	...	0	12	0
குசலோபாக்கியானம் மூலமும் அரும்பதவிளக்கமும்	...	0	12	0
உத்தியோகம் (நாடகம்) ...	...	0	6	0

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

பாதி விலை ! **ஒரு மாதம் வரை** பாதி விலை !!



அசல் விலை ரூ. **14**.

பாதி விலை ரூ. 7.

22 காரட்ரோல்டு கோல்டு கைக்கெடியாரம் 5-வருஷம் உத்திரவாதம். பார்வைக்கு அழகாயிருக்கும். இக்கெடியாரங்களில் எம்மாதிரி ஷேப் ஆனபோதிலும் அனுப்பி வைக்கப்படும். பாதி விலை ரூ. 7.

ஒவ்வொரு கடியாரமும் ஒரு பட்டுப் பட்டையுடன் அனுப்பி வைக்கப்படும்.

ஸ்வான் ஹவுஸ்,

தபால் பெட்டி 508,

பி. டி. மதராஸ்.

A. (No. 2700)

ஷண்முகம்

மூக்குத்தூள்

70-வருஷ காலமாக குணத்தில் உயர்ந்ததாயும், மணத்தில் இதர பொடியைவிட மேன்மையாயுமிருந்து, இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய இடங்களில் ஏராளமாய் விற்பனையாய் வருகிறது.

4 பலம் **13** அணா. **5** பலம் **15** அணா.

ஆர். கே. பரிமள மூக்குத்தூள் 1புட்டி அணா 4.

(போஸ்டேஜ் உள்பட)

மறந்துவிடுமுன் எழுதவும்

ஷண்முகம் ஸ்னப் கம்பெனி, லிமிடெட்.

தபாற்பெட்டி நெ. 140, சென்னை.

பெரிய கம்பெனி! பெரிய கம்பெனி!!

பட்டு பீதாம்பர கம்பெனி, ஸ்ரீகாசி

நாணயமான சரக்குகள்.

சுத்தமான பட்டு! சகாய விலை!!

உயர்தரமான

பட்டு பீதாம்பர சேலைகள் ரவிக்கைகள்

துப்பட்டாக்கள், வெண்பட்டு வேஷ்டிகள், அங்கவஸ்திரங்கள், உருமால்கள் முதலிய எல்லாத் தினுசுகளும், சிவப்பு, ரோஸ், ஊதா, பச்சை, மஞ்சள், மேகவர்ணம், வெள்ளை, சிலேட் கலர், ஆரஞ்சு, கத்தரிப்பூக் கலர், கிரிம்ஸன் முதலிய எல்லா இங்கிலீஷ் கலர்களிலும் மிகவும் சரச விலைக்குக் கிடைக்கும்.

பட்டு பீதாம்பர கேட்லாக் இனாம்.

உடனே எழுதுங்கள்.

Address.—Manager, (A. No. 2914)

Silk Pitamber Co., *Benares City.*

விலாஸம்:—மானேஜர்,

பட்டு பீதாம்பர கம்பெனி, ஸ்ரீகாசி.

குணப்படுத்துவதற்கு மாத்திரமல்ல

(இன்னும்)

வியாதிகள் அணுகாவண்ணம் தடுப்பதற்கும்

எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

பேரும் புகழும் பெற்றிருக்கின்றன!

அஜீரணம், பலஹீனம், மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, மூளைக்கொதிப்பு இன்னும் இவைபோன்ற மற்ற வியாதிகளை குணப்படுத்தி அவைகளை அணுகாதபடி செய்யும்.

32-மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூபாய் 1.

விவரம் வேண்டுவோர்

கீழ்க்கண்டவருக்கு எழுதவும்:—

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

26-பிராட்வே, மதராஸ்.

இனாம் ! இனாம் !! முற்றிலும் இனாம் !!!

'C' ரிஜிஸ்டர் டைம்பீஸ் இனாம்



'C' Regd. டைம்பீஸ் இனாம்

எங்களின் "தாராலீவர் 18 காரட்டு ரோல்டு கோல்டு, பின்புறம் சித்திரவேலை செய்யப்பட்ட பாக்கட் கடியாரம் வாங்குகிறவர்களுக்கு "C" டைம்பீஸ் இனாமாக அனுப்பப்படும். விலை பாக்கட் கடியாரம் 1-க்கு இனாமுடன் ரூ. 5. இக்கடியாரத்தில் உள்ள டயலின்பேரில் ஐந்து வருஷம் உத்திரவாதம் என்று அச்சிடப்பட்டிருக்கிறது, முந்துங்கள்.

காப்டன் வாட்ச் கம்பெனி,
தபால் பெட்டி நெ. 265, மதராஸ்.

லோகோபகாரி

முப்பத்திரண்டு ஆண்டுகளாய் நிலவும்

வாரப் பத்திரிகை.

பத்திராதிபர்:—பரலி - சு. நெல்லியப்ப பிள்ளை.

தமிழர்கள் புத்துயிரும் புதுவாழ்வும் பெறுவதற்காகப் பாடுபட்டு வரும் வாரப் பத்திரிகை. உலகத்தில் அந்தந்த வாரத்தில் நடக்கும் செய்திக ளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளிவரும். சிறந்த பாடல்களும், சித்திரப் படங்களும் அவ்வப்போது வெளிவரும். பாரத தேசம் சகல துறைகளிலும் சுயராஜ்யம் பெற்று, லோக மெல்லாம் க்ஷேமம் அடைய வேண்டுமென்பதே லோகோபகாரியின் நோக்கம். உலகத்தில் அற நெறியும் அன்பு நெறியும் வளர்ந்து இன்பம் நிலவுமாறு லோகோபகாரி நெடுங்காலமாக உழைத்து வருகிறது. இதனைத் தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும்.

வருஷ சந்தா ரூபாய். 4—0—0 வெளி நாட்டுக்கு ரூபாய். 6—0—0.
மாதிரிப் பிரதி இனாம்.

லோகோபகாரி பத்திரிகாலயம்,
கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

குறிப்பு :—முன்பணம் அனுப்பவேண்டுவதில்லை. புத்தகம் வேண்டுவோர், தங்கள் பெயரை மாத்திரம் பதிவு செய்துகொண்டால் போதுமானது. தங்கள் பெயரைப் பதிவு செய்துகொண்டவர்க்கே புத்தக விலையில் எட்டணு குறைவு செய்யப்படும்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திராவிட வேதத்திரட்டு.

பன்னிருதிருமுறை, திருப்புகழ், திருவகுப்பு, ஸ்தலமான்மியச் சுருக்கம் முதலியன அடங்கியது

மூன்ரும் பதிப்பு விரைவில் வெளிவரும்

சிவரஹஸ்யப் பதிப்பாசிரியர் க. சதாசிவ செட்டியார், பீ. ஏ., அவர்களால் திரட்டிய **இத்திரட்டு**, தலைமுறைக் கிரமத்தில், பாடல்பெற்ற **274** - தலங்கட்கும், தேவாரத் திருப்பதிகங்களும், பொதுத் திருப்பதிகங்களும், பின்னர் திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பதினேராந் திருமுறை, திருத்தொண்டர் புராணம் என்னும் ஐந்து திருமுறைகளில் பாராயணத்திற்கு இன்றியமையாத திருப்பாசுரங்களும் சற்றேறக்குறைய **3,000** திருப்பாட்டுகள் உளவாகத் திரட்டப்பெற்று, முதல் முதல் 1907-ம்வருஷம் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டது. பிறகு இரண்டா முறையாகத் தலமான்மியச் சுருக்கம், செல்லும் வழி முதலிய குறிப்புகளுடன் சேர்த்து 1917-ம்வருஷம் பிரசுரிக்கப்பட்டது. இப்புத்தகம் தலயாத்திரிகர்களுக்கும் சபைப் பாராயணர்களுக்கும், தேவாரப் பிரசாரகர்களான ஓதுவா மூர்த்திகளுக்கும் மிக்க உபயோகமாகக் கண்டு விரைவில் செலவழிந்து போயிற்று. பின்னர் ஆசிரியர் மூன்ரும் பதிப்புக்காக, பல பதிகங்களைச் சேர்த்தும், செய்யுட்களை அதிகப்படுத்தியும், தல மான்மியத்தில் பல கூட்டியும், வழி முதலியவற்றைத் திருத்தியும் செப்பம் செய்து வைத்திருந்தும், பல காரணங்களால் வெளிவராது காலங்கழிந்தது எனினும், புத்தகத்தினது தேவை பல இடங்களிலும் மிகுதியும் காணப்படுகின்றமையின், அதனை மூன்ரும் பதிப்பாக பாராயணத்திற்குப் போதுமான வளவு திருப்புகழ் திருவகுப்புத் திரட்டுகளும் சேர்த்து அச்சிடத் தொடங்கி யுள்ளோம். டெமி அளவில் கனத்த வழவழப்புத் தாளில், தெளிவான அச்சில் பதிப்பிக்கப்படுகின்றது. முன்னிலும் அதிக விஷயம் சேர்ந்து புத்தகம் பெரிதாக வெளிவரும். நல்ல பூஜைக்கேற்ற கட்டிடம் செய்யப்படும். சுமார் **60**-பாரம் அளவையுடையதாகும். இதில் சைவ சமயாசிரியர்களின் படமும், ஆர்ட் பேபரில் அழகாய் அச்சிட்டுச் சேர்க்கப்படுகிறது.

இவ் அரிய நூல், எவ்விதத்திலும் மனேகரமா யிருக்கும். கொஞ்சம் பிரதிகளே அச்சிடப் படுவதால், இப்போதே தங்கள் பெயரை ரிஜிஸ்டர் செய்து கொள்வோர்க்கு மாத்திரம் புத்தக விலையில் **8** அணு குறைவு செய்து அனுப்பப்படும். முன் பணம் அனுப்ப வேண்டியதில்லை.

விலாசம்:— மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

(A. No 1819) THE MOST CHARMING PERFUME

OTTO DILBAHAR (Registered.)

எல்லோருடைய மனதையும் அதியுற்சாகப்படுத்தும் சுகந்தம்

ஆடோ தில்பஹாார் (ரேஜிஸ்டார்ட்.)

நீடித்திருக்கக் கூடியதும், நிகரில்லாத உன்னத வாசனையுடையதும், மனதிற்கு சந்தோஷ முண்டாக்கக் கூடியது. ஆல்கஹால், சாராயம் முதலிய சம்பந்தமில்லாத பொறுக்கான சில சுகந்த புஷ்பங்களிலிருந்து இறக்கிய சத்தினல் சேர்க்கப்பட்டது. உம்முடைய கைகுட்டையில் சில துளிகள்விட, புஷ்பத்தோட்டத்தின் மத்தியிலிருந்து அனுபவிக்கக்கூடும் வாசனையை தரக்கூடியது. விவாக காலங்களிலும், பூஜாகாலங்களிலும், இன்னும் மற்ற செண்டுகள் அத்தர்களைவிட இத்த ஆடோ டில்பஹாார் அதிக இன்பத்தைக் கொடுக்கும்.

அடியில் வருமாறு அளவு புட்டிகளில் நிறப்பி விற்கப்படுகிறது.

பெரிய புட்டி 1-க்கு		(4-டிராம் அல்லது $\frac{1}{2}$-அவுன்ஸ்)	விலை ரூ.	2—0—0
வேறு	,,	(2-டிராம்)	,,	1—4—0
நடுத்தரம்	,,	(1-டிராம்)	,,	0-12—0
சிறிய புட்டி	,,	($\frac{1}{2}$-டிராம்)	,,	0—8—0
மாதிரி	,,		,,	0—2—0
வாசனைக் கார்ட் 1-க்கு			,,	0—1—0

பிரசித்தமான எல்லா வியாபாரிகளாலும் விற்கப்படுகிறது. இதே மாதிரி அநேக பெயர்கள் மார்க்கட்டில் இருப்பதால், வாங்கும்போது புட்டிகள் பேரில் ஆடோ டில்பஹாார் என்னும் பெயர் இருக்கிறதா என்று கவனித்துப் பார்த்து ஜாக்கிரதையுடன் வாங்கிக்கொள்ளவும்.

சோல் ஏஜண்டுகள் :—

ஆங்கிலோ இண்டியன் டிரக் அண்டு கெமிகல் கம்பெனி,

155, ஜும்மா மஸீத், மார்க்கட்.,பம்பாய்



யானையினின்று வள்ளி பயந்து ஓடல்

விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி 18 } அக்ஷயஹு ஆனிமீ :: 1926-ஹு ஜூன்மீ } பகுதி 6

முருகன் வழிபாடு

WORSHIP OF LORD MURUGA

திடமிலிசற் குணமிலிநற் றிறமிலியற் புதமான
செயலிலிமெய்த் தவமிலிநற் செபமிலிசொர்க்
கமுமீதே
இடமிலிகைக் கொடையிலிசொற் கியல்பிலிநற்
றமிழ்பாட
இருபதமுற் றிருவினையற் றியல்கதியைப்
பெறவேணும்!
கெடுமதியுற் றிடுமசுரக் கிளைமடியப் பொரும்வேலா!
கிரணகுறைப் பிறையறுகக் கிதழ்மலர்கொக்
கிறகோடே!
படர்சடையிற் புனைநடனப் பரமர்தமக் கொருபாலா!
பலவயலிற் றரளநிரைப் பழநிமலைப் பெருமாளே!

(ப-ரை) கெடுமதி உற்றிடும் - தங்களுக்குக்கேட்டை விளைக்கத் தக்க மனோ நி[illegible]மையை யடைந்த, அசுர கிளை மடிய - அசுர குலமானது அழியும் வண்ணம், பொரும் வேலா - போர்செய்த வேலாயுதனே, கிரண குறை பிறை - ஒளிவீசும் பிறைச்சந்திரனையும், அறுகு - அறுகம் புல்லையும், அக்கு - உருத்திராட்சத்தையும், இதழ் மலர் - கொன்றை மலரையும், கொக்கு இறகோடு (ஏ - அசை) - அழகு செய்யும் பக்ஷியின் இறகுகளோடு, படர் சடையில் புனை - விரிந்த சடாமுடியில் அணிந்துகொண்டு, நடன பரமர் தமக்கு — (உலகங்களை எல்லாம் ஆட்டுவிக்குமாறு தில்லையில்) நிர்த்தனம் செய்யும் பரமேசுவரருக்கு, ஒரு பாலா — ஒப்புயர்வற்ற பாலனாகத் தோன்றியவனே!, பல வயவில் தரள நிரை - அநேக வயல்களில் முத்துக்கள் கூட்டங் கூட்டமாய்க் காணப்படும், பழநிமலை பெருமாளே - பழநிமலை என்னும் திருத்தலத்தில் எழுந்தருளி யிருக்கும் பெரியோனே! (அடியேன்), திடம் இலி - மனவுறுதி யில்லாதவன், சற்குணம் இலி - நற்குணம் வாய்க்கப் பெறாதவன், நல் திறம் இலி - நல்ல கருமங்களைச் செய்யும் திறமையற்றவன், அற்புதமான செயல் இலி - ஞானத்தோடு ஒரு செய்கையும் செய்தறியாதவன், மெய் தவம் இலி - உண்மையான தவத்தைச் செய்தறியாதவன், நல் செபம் இலி - நல்ல மந்திரங்களைச் செபித்தறியாதவன், சொர்க்கப் (உம் - அசை) மீது (ஏ - அசை) இடம் இலி - முத்தி வீட்டில் இடம்பெறத் தகைமையில்லாதவன், கை கொடை இலி-கையினால் எவர்க்கும்தானங் கொடுத்து அறியாதவன், நல் தமிழ் பாட - நல்ல தமிழ் மொழியினால் உன்னைப் பாடுவதற்கு, சொற்கு இயல்பு இலி - சொல் திறமை இல்லாதவன்; (இப்படிப்பட்ட அடியேன்), இரு பதம் உற்று - நினது இரு பாதமலர்களை வந்தடைந்து, இரு வினை யற்று - நல்வினை தீவினையென்று சொல்லப்படும் இருவினைகளையும் ஒழித்து, இயல் கதியை பெறவேணும் - சிவ ஆகமங்களில் கூறப்பட்டுள்ள நற்கதியான சிவஞான முத்தியைப் பெறவேண்டும்.

(வி - ரை) திடம் - உறுதி; உலக வாழ்க்கைத் துயரத்தை யகற்றிக் கொள்ளும் வழி யாதென்று நிச்சயிப்பது. அற்புதம் - ஞானம்; அற்புதமான செயல் - ஞானத்துடன் செய்யும் கருமம். முருகப் பெருமான் "யார் வேண்டினாலுங் கேட்ட பொருளீயும் த்யாகாங்க சீலம்" உடையவராதலாலும் "வேண்டிய போதடியர் வேண்டிய போகமது வேண்டவெறாதுதவு"ம் பெருமாளாதலாலும், சுவாமிகள் முத்தியடையும் தகைமை தமக்குச் சிறிதளவும் இல்லையே யாயினும், தமக்கு முத்திவீட்டைத் தந்தருளும்படி முருகப்பெருமானை இப்பாடலில் பிரார்த்திக்கிறார்.

திருப்புகழ் விருத்தியுரை
6-படை வீடுகள் :: 450-பாட்டுகள்
12-சஞ்சிகைகளாக வெளிவருகிறது. கிளேஸ் காகிதப் பதிப்பு, பெதர் வெயிட் காகிதப் பதிப்பு ஆகிய 2-பதிப்புகள் பிரசுரிக்கப்படுகின்றன. வருஷ சந்தா, (தபால் செலவுடன்) ரூ. 4-12-0 :: ரூ. 6-0-0.
அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

விவேக போதினி

தொ. 18] அக்ஷய௵ ஆனி௴ [ப. 6

கௌடல்ய அர்த்தசாஸ்திரம்

KAUTALYA'S ARTHA SASTRA

5-வது ப்ரகரணம்

மந்திரி புரோஹிதர்களின் விபரம்

அமாத்யர்களுள் முக்கியனான மந்திரியானவன் செழிப்பான ராஜ்யத்தில் பிறந்தவனாயும் நற்குலத்தில் உதித்தவனாயும் உத்தம பந்துக்கள் உடையவனாயும் யுத்தத்துக்குச் சாதனமான யானையேற்றம், குதிரையேற்றம், சஸ்திரவித்தை முதலியவற்றை நன்கு அப்யஸித்தவனாயும் அர்த்த சாஸ்திரத்தில் தேர்ந்தவனாயும், புத்திக் கூர்மையுள்ளவனாயும் இருக்கவேண்டும். இனிமையாயும், சமயத்துக் கேற்றவாறும் வார்த்தை சொல்லக்கூடியவனாயும், திடமான ஞாபகசக்தியுள்ளவனாயும், காரியங்களைச் சுறுசுறுப்பாய்ச் செய்பவனாயும், உயர்ந்த ஸ்வபாவமுள்ளவனாயு மிருக்கவேண்டும்; சமயத்திற்குத் தக்கவாறு பதில்கூறவும், பிரதிகாரியம் செய்யவும் சாமர்த்தியம் இருக்கவேண்டும்; உற்சாகம் கைக்கொண்டு நடக்கவேண்டும்; கஷ்ட துக்கங்களைச் சகித்து, எல்லோரிடமும் இனிமை வார்த்தையாடி, அரசனிடம் அசஞ்சலமான திடபக்தியுள்ளவனா யிருக்கவேண்டும். நன்னடத்தை, தேகபலம், ஆரோக்கியம், தைரியம் இவைகள் பொருந்தியவனாயும், கர்வம் மனச்சாஞ்சல்யம் இவை ஒழிந்தவனாயும், ஸ்திரீ, பூமி முதலிய விஷயமாய் உண்டாகக் கூடிய வைரங்களை நீக்கவல்லவனாயு மிருக்கவேண்டும். இவ்வித லக்ஷணங்களெல்லாம் பொருந்தியவன் உத்தம மந்திரி எனத் தகுவான். இக்குணங்களில் காற்பங்கு குறைந்துள்ளவன் மத்தியமன், பாதி குறைந்தவன் அதம மந்திரி எனத் தகுவான்.

அரசன் தண்ட நீதியை யனுஸரித்து ராஜ்ய விவகாரங்கள் நடத்துவதில் பிரத்தியக்ஷம், பரோபதிஷ்டம், அனுமேயம் என மூவித பிரமாணங்கள் உள:—தானே நேரில் கண்டு அறிந்துகொள்ளப்படுவது பிரத்தியக்ஷமாகும்; ஆப்தர்கள் சொல்லும் உபதேசம் பரோபதிஷ்டம் எனப்படும்! நடந்தகாரியத்தைக்கொண்டு நடக்கவேண்டியதை ஊகித்து அறிவது அனுமேயமாம். அரசன் ஏக காலத்தில் தன் இராஜ்யத்தில் பல இடங்களில் கவனிக்க வேண்டிய காரியங்கள் பல இருக்குமாதலால், எல்லாவற்றையும் அவன் தானே நேரில் கண்டறிந்து நடத்துவது அசாத்தியம்; ஆதலால், பிரத்தியக்ஷமாய்க் கவனிக்கவேண்டியவற்றின் பெரும் பாகத்தையும் அமாத்யர்களைக் கொண்டு நடத்தவேண்டும். இவ்விஷயத்தில், நற்குணம் பொருந்தி,காரியத்தைச்சரிவர நிர்வகிக்கக் கூடியவர்களே அமாத்தியர்களாகத் தேர்ந்தெடுக்கப் படவேண்டும். ஆதலால் மேற்கூறியவாறு குலம், சீலம், புத்தி முதலியவற்றை நன்கறிந்து பார்த்து, அவர்களை நியமிக்கவேண்டும்.

மந்திரிபோல், ராஜ்யவிவகாரம் செலுத்துவதில் புரோகிதனும் பெரும் ஸகாயமுள்ளவன். நற்குலம், உயர்குணம், ஆறு அங்கங்களோடு கூடிய வேதங்களில் தேர்ச்சி! ஜோதிஷம் தண்டநீதி இவற்றில் நல்லஞானம்; தைவீகமாயும், மனுஷ்ய சம்பந்தமாயுள்ள ஆபத்துக்களிலிருந்து மந்திரம் முதலிய சாதகங்களால் அரசனைக் காக்கவல்லமை இவை பொருந்தியவன் புரோகிதனாகத் தகுவான்; குருவைச் சிஷ்யன்போலும், பிதாவைப் புத்திரன் போலும், எஜமானனை ஸேவகன்போலும், இவ்வித புரோகிதனை அரசன் அனுசரித்து நடக்கக்கடவன்.

> ‘பிராம்மணேனைதிதம் க்ஷத்ரம், மந்திரிபந்த்ராபிவர்த்திதம் |
> ஜயத்யஜிதமத்யந்தம் சாஸ்த்ரானுகமசஸ்த்ரிதம் ||’’

மேற்கூறிய புரோகிதனால் விருத்தி செய்யப்பட்டதும், முன்சொன்ன நற்குணமுள்ள மந்திரியின் உபதேச ஸகாயம் பெற்றுள்ளதும், சாஸ்திர மார்க்கத்தை அனுசரித்து நடக்கும் க்ஷத்திரிய வம்சமானது, யுத்தமில்லாமலே, அடைவதற்கரிதான ஐசுவரியத்தைப் பெறக்கூடும்!’’

ப்ரகரணம் 6 :—இரகசியமான உபாயங்களைக்

குன்றன்னார் குன்ற மதிப்பிற் குடியொடு நின்றன்னார் மாய்வர் நிலத்து.

கொண்டு, அமாத்யர்களின் மனசுத்தியைப் பரிசோதித்து அறிதல் :—

இது விஷயத்தில் அர்த்தசாஸ்திர பூர்வாசிரியர்களின் அபிப்பிராயங்களும் கௌடல்யனது மதமும் கூறப்படுகின்றன.

மந்திரி, புரோகிதன் இவர்களின் ஸகாயமடைந்துள்ள அரசன், அமாத்தியர்களை ஸாமான்ய பதவிகளுக்கு நியமித்து, அவர்களது மனோபாவத்தை ரகசியமான உபாயங்களால் பரிசோதித்து அறியவேண்டும். இந்த விஷயத்தில் நான்கு வித உபாயங்கள் உள என்று பூர்வாசிரியர்கள் கூறுகிறார்கள் :—

(1) தர்மவியாஜம்:— புரோகிதனை செய்யத்தகாத காரியத்தில் ஏவி, அவர் அதைச் செய்ய இணங்காததால், அவரை அவமதித்ததாக ஒரு வியாஜம் ஏற்படுத்தவேண்டும்; அவர் சில சார புருஷர்களை ஸகாயமாய்க்கொண்டு, அமாத்யன் ஒவ்வொருவனையும் தனித்தனியே கண்டு அடியிற் வருமாறு வஞ்சனை வார்த்தைகளால் பரிசோதிக்கவேண்டும் :—'இவ்வரசன் அதர்மிஷ்டன்; இவனது புத்திராதிகளைக் காவலிலிட்டு, நற்குலத்திலுதித்துள்ள வேறொருவனை அரசனாகச் செய்வோம். இது மற்றைய அமாத்தியர்களுக்குச் சம்மதமே. உமது அபிப்பிராயமென்ன? இதைக் கேட்டு, அமாத்தியன் இதை நிராகரித்தால், அவனது மனப்பாங்கு சுத்தமானது என்று அறியவேண்டும்.

(2) அர்த்தோபாயம்:—ஸேனாதிபதியானவன் மரியாதை செய்யத்தகாதவனுக்கு மரியாதை செய்யும்படி அரசன் தன்னை நிர்ப்பந்தித்து அவமதித்தாகச் சொல்லிக்கொண்டு, சாரர்களைக் கொண்டு அமாத்தியர்களுக்கு ஏராளமான தனங்கள் அளிப்பதாய் அவர்களை உற்சாகப்படுத்தி, இந்த அரசனை அழித்தொழிப்பதில் திருப்தியுள்ளவர்களாயிருக்கிறார்களா என்று சோதிக்கவேண்டும்:— "இவ்வேந்தன் கெட்டவழியில் செல்லும் தன்மையுள்ளவன். வேறொருவனையோ, அல்லது சிறையிடப்பட்டுள்ள இவனது வம்சத்தினருள் ஒருவனை அரசனாக நியமிக்க ஏற்பாடு செய்வோம். இது மற்றைய அமாத்தியர்களுக்கு ஸர்வ ஸம்மதம். உமது எண்ணம் என்னே?" இவ்வித தந்திரமான வார்த்தையிற் சிக்கி, அதற்கிணங்குவோனை மனச்சுத்தியற்றவன் என அறிந்துகொள்ளவேண்டும்.

(3) காமோபாயம்:—தவப் பெண்கள் உருக்கொண்டு, பிக்ஷையெடுப்பவர் போல் நடித்து வரும் அந்தரங்க ஸ்திரீகளைக்கொண்டு, அமாத்தியர் ஒவ்வொருவரையும் சோதிக்கவேண்டும் :— 'அமாத்யரே, நான் ராஜமகிஷியின் அந்தரங்கமறிந்தவள். அவளுக்கு உம்மீதுள்ள காதலுக்கு அளவே இல்லை. உமக்குச் சம்மதமானால் உம்மை சந்திப்பதற்கு வேண்டிய உபாயமும் அவள் தேடியிருக்கிறாள். நீர் அதற்கு இணங்கினால், உமக்கு மேன்மேல் உந்நத பதவியும், பரம ஐசுவரியமும் ஏற்படும்' என்று சார ஸ்திரீ இவ்வாறு கூறுவதைக்கேட்டு மகிழும் அமாத்தியனை அசுத்தன் எனக் கருதவேண்டும்.

(4) பயோபாயம் :— ஏதாவது ஒரு அமாத்தியனைக்கொண்டு, விநோதார்த்தமாக விருந்து சாப்பாட்டுக்கு மற்றைய அமாத்தியர்களை அழைக்கச் செய்யவேண்டும். இதைக்கண்ட அரசன் பரபரப்புடன் அவர்களைச் சிறையிடவேண்டும். அச்சமயம், முன்னரே காவலிடப்பட்டுள்ள அரசனது அந்தரங்கமான சாரபுருஷன் அவர்களைத் தனித்தனியேகண்டு, அவர்களுக்கு ஏற்பட்டுள்ள மானஹானி, அர்த்தநஷ்டம் இவற்றைப்பற்றி வற்புறுத்திக்கூறி, அவர் மனதைக் கலைக்கவேண்டும்:— "இவ்வரசன் மிகக் கெட்டவழியில் செல்பவன். இவனைக் கொன்று, வேறொருவனை அரசனாக்க நாம் ஏற்பாடு செய்யவேண்டும். உமது அபிப்பிராயமென்ன ? மற்றவர்கள் இதை மனப்பூர்வமாய் ஆமோதிக்கிறார்கள்." இவ்வாறு கூறப்படுவதை நிராகரிப்பவன் அரசனிடம் சுத்தமான மனப்பாங்குள்ளவன்.

இவ்வாறு பரிசோதித்து அறியப்பட்ட அமாத்தியர்களை, அவரவரது மனோசுத்திக்கு ஏற்றவாறு அதிகார பதவிகளில் நியமிக்கவேண்டும் :—தர்மோபாயத்தால் பரிசோதித்துத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை, நியாயஸ்தலங்களுக்கும் தர்மஸம்பந்தமான காரியங்களை நிர்வகிப்பதற்கும் நியமிக்கவேண்டும். அர்த்தோபாயத்தில் தேர்ந்தவர்களை தன ஸம்பாதனம், ரக்ஷணம் முதலிய ராஜாங்க காரியங்களுக்கு ஏற்படுத்தவேண்டும். காமோபாயத்தால் பரிசோதித்தறியப்பட்டவர்களை, அரண்மனையிலும் வெளியிலுமுள்ள சிருங்காரவனங்கள் முதலிய விஹார ஸ்தானங்களுக்கு அதிகாரிகளாக்கவேண்டும். பயோபாயத்தில் தேர்ந்தவர்களை, அரசனுக்குச் சமீபத்திலிருந்து 'அவனது தேக ரக்ஷணத்துக்குரிய பதவிகளுக்கு நியமிக்கவேண்டும். மேற்கூறிய நான்கு உபாயங்களாலும் பரி

ஏந்திய கொள்கையார் சீறி னிடைமுரிந்து வேந்தனும் வேந்து கெடும்,

சோதிக்கப்பட்டு, மனச்சுத்த மறியப்பட்டுள்ளவர்களைத்தான் மந்திரிகளாக நியமிக்கவேண்டும்.

அமாத்தியர்களின் மனோபாவத்தைக் கண்டறிவதற்கான மேற்கூறிய நால்வகை உபாயங்களும் பூர்வீக அர்த்தசாஸ்திர வித்துவான்களால் கூறப்பட்டுள்ளவை. இதைக் கௌடல்யன் முழுவதும் அங்கீகரிக்கவில்லை. அமாத்தியர்களைப் பரிசோதிப்பதற்குரிய வழிகளில், அரசன் தன்னையோ, தனது மகிஷியையோ லக்ஷ்யமாக வைத்துப் பரீக்ஷை செய்யக்கூடாது என்பது அவரது அபிப்பிராயம் :—

(1) "ந தூஷணம துஷ்டஸ்ய
 விசேணேவாம்பஸ:சரேத்,
கதாசித்தி ப்ரதுஷ்டஸ்ய
 நாதிகம்யேத பேஷஜம் ||

(2) க்ருதாச கலுஷா புத்திருப |
 தாபி: சதுர்விதா |
நாகத்வாந்தம் நிவர்த்தேத
 ஸ்திதா ஸத்வவதாம் த்ருதௌ ||

(3) தஸ்மாத் பாஹ்யமதிஷ்டானம்
 க்ருத்வாசார்யே சதுர்விதே |
சௌசாசௌ சமமாத்யானும்
 ராஜா மார்க்கேத ஸத்ரிபி: ||

(1) தோஷமற்ற ஸ்வபாவமுடைய அமாத்தியர்களை ஏதாவது உபாயத்தால் வஞ்சித்தறிவது, சுத்தஜலத்தை விஷம் போட்டுப் பரீக்ஷிப்பது போல், உசிதமில்லை: சுத்தமான மனதானது, ஒருக்கால் வெகுவாறு கலக்கப்பட்டு அசுத்தமானால் அதை எவ்வித சிகித்ஸையாலும் மாற்ற முடியாமற் போய்விடும். இதனால் அனர்த்தந்தான் விளையும் என்பது கருத்து. (2) மேற்கூறிய உபாயங்களால் கலக்கப்பட்டு விகாரத்தையடைந்தால் பெருந்தன்மையுடைய தீரர்களின் மனமும் நிலைபற்று அஸ்திரமாகிவிடும் (3) ஆகையால் மேற்கூறிய உபாயங்களைப் பிரயோகிப்பதில் அரசன் தன்னை லட்சியமாக்காமல் தோஷமாக்கக் கூடிய விஷயங்களைக் குறியாக வைத்து சாரர்களின் மூலமாய் அமாத்தியர்களின் மனோசுத்தி, அசுத்தி இவற்றைக் கண்டறியவேண்டும்."

இவ்வித அபிப்பிராயத்தால் கௌடல்யனது ராஜ்யதந்திர சாமர்த்தியமும், உலகநீதி ஞானமும் நன்கு விளங்கும்.

காரைக்காலம்மையார்

KARAIKKAL AMMAI

(174-ம் பக்கத் தொடர்ச்சி.)

பிறகு பரமதத்தன் சுத்தமான ஆடையையுடுத்திக்கொண்டு, சிவபூசைமுடித்து, போசன அறையிலே புகுந்து முன்னரே இட்டிருந்த பீடத்தில் அமர்ந்தான். இனிய மொழிகளைச் சொல்லிக்கொண்டே தங்காதலனை உண்பிக்கும் பழக்கமுடைய புனிதவதியார், இனிய அன்னத்தைக் கறிவகைகளோடு முறைமைப்படி படைத்து மிகுதியாக விருந்த மாங்கனி யொன்றையுங் கொண்டு வந்து வைத்து உண்பிப்பாராயினர். அப்போது பரமதத்தன் மாம்பழத்தை உண்டு அதனுடைய இனிய சுவையைக்கண்டு, "நான் அனுப்பிய பழங்கள் இரண்டனுள் மிகுதியாயுள்ள இன்னொரு பழத்தினையுங் கொண்டுவந்து வை ; இதுமிகவும் சுவையுடையதா யிருக்கிறது" என்று புனிதவதியாரை நோக்கிக் கூறினன். பரமதத்தனுடைய இச்செய்கையாவருடைய கவனத்தையும் கவருகிறது. ஒரு ஆண் மகனிடத்தில் கட்டுப்பட்டுக் கிடக்கும் அன்பானது, முதன் முதல் தன்னோடு ஒத்த உரிமையுடைய மனைவியினிடத்திலேயே செல்லுகிறதென்று சொல்லப்படுகிறது. அவ்வாறிருக்க, பரமதத்தன் தான் கொடுத்தனுப்பிய கனிகள் இரண்டனுள் தனக்கொன்றும் மனைவிக்கு மற்றொன்றுமாக விருக்க, தான் ஒன்றை உண்டதன்பின், அது சுவையா யிருக்கின்றதென்னும் காரணத்தால் மற்றொன்றையும் கேட்டல் அன்புடைமையாகாது. பரமதத்தன் அன்புடையவனன்றோ ? இதுகாறும் அன்புடையவனாயிருந்த அவன், இப்போது அவ்வாறு கேட்டது ஆண்டவன் செய்கையென்றே எண்ணவேண்டும். புனிதவதியம்மையாருடைய பேரன்பை உலகத்தாருக்கு அறிவுறுத்தவே இறைவன் அவ்வாறு செய்தனன் போலும். பரமதத்தன் மற்றொரு பழத்தைக் கேட்டபோது புனிதவதியார் அது சிவனடியவர் ஒருவருக்கு வைக்கப்பட்டதென்று தெரிவிக்கவில்லை. புனிதவதியார் கணவன் திருப்தியடைந்தால் தானுந் திருப்தியடைந்ததாகப் பாவிப்பவர்; கணவனுக்குத் திருப்தியுண்டாகுமாறு அவனை உண்பிக்கவேண்டுமே என்னுங் கருத்துடையவர். ஆகலின் இன்னொரு பழத்தையுங் கொண்டுவருபவரைப்போல அவ்விடம் விட்டு அப்புறம் சென்றார். அங்கே அம்மையார் வேறொரு பழத்துக்கு

இறந்தமைந்த சார்புடையா ராயினு முய்யார் சிறந்தமைந்த சீரார் செறின்.

என்னசெய்வார்? 'அகதிக்கு ஆண்டவனே துணை' என்பதுபோல, இத்தகைய காலங்களில் துணை செய்வார் இறைவனைத் தவிர வேறொருவரின் மையின், அம்மையார் மெய்ம்மறந்து நின்று சிவ பெருமானைத் தியானித்தார். ஆபத்து நேரிட்ட விடத்துத் தம்மை நினைத்தால் அப்போதே அனுக்கிரகஞ் செய்யும் பெருமான் அம்மையா ருடைய திருக்கரத்தில் அதிக மதுரமாகிய ஒரு மாம்பழத்தைச் சேர்ப்பித்தார். அம்மையார் உடனே மகிழ்ந்து அப்பழத்தைக் கொண்டுவந்து தங் கணவனுடைய கலத்தில் இட்டார். பரமதத் தன் அதனையும் உண்டான். அது சிவனருளால் வந்ததாதலின் தேவாமுதத்தைப் பார்க்கினும் அதிக சுவையுள்ளதாக விருந்தது. ஆதலின், அவன் அம்மையாரை நோக்கி இரண்டாவதாக எனக்கிட்ட பழம் நான் அனுப்பிய பழமன்று; அது மூவுலகங்களிலும் பெறுதற்கு அருமையா னது. அதனை நீ எங்கே பெற்றாய் என்று கேட் டான். அதைக்கேட்ட புனிதவதியார் உண்மையை உரைக்கக் கூடாமலும், உண்மையின் மேம்பட்ட அறம் வேறின்மையால் உண்மைகூறுதலை விட மாட்டாதவருமாய் இருதலைக்கொள்ளி எறும்பு போலத் திகைத்தார். உண்மையை ஏன் உரைத் தல் கூடாதெனின், கடவுள் இரகசியத்திற்கே பிரியப்படுகிறார்; அவர் அடியார்களுக்குச் செய்யுந் திருவருட்செயல்களை அவ்வடியவர் கள் தாமாக வெளியிடுதல் தகுதியன்று; அவைகளை வெளியிடுதல் பெருமை பாராட்டுவ தாகுமென்று சொல்லப்படுகிறது. ஆனால் இப்போது பரமதத்தன் கேட்ட கேள்விக்கு விடை கூறவேண்டுவது அம்மையாருடைய கடமை. ஆதலின் அவர் பொய்மைக்கு அஞ்சி னார். நிகழ்ந்ததைத் தெரிவிப்பதே முறையென்று நினைத்தார்; பிறகு சிவபெருமானுடைய திருவடி களை மனத்தில் பொருந்தும்படி வணங்கி அடிய வர் அமுதுண்ண வந்ததுமுதல் நிகழ்ந்த யாவை யுந் தெரிவித்தார். பரமதத்தனுக்கு அச்செய்தி புதியதாயிருந்ததால் அவன் அதை நம்பவில்லை. ஆகையால் அவன் புனிதவதியாரைப் பார்த்து, "நீ இப்போது கொண்டுவந்து வைத்த பழம் சிவபெருமானருளால் கிடைத்ததானால் அதனை உறுதிப்படுத்த இன்னொரு பழத்தைக் கொண் டுவா பார்க்கலாம்" என்றான். அம்மையார் ஆண் றாங் தோன்றாதவராய் அவ்விடத்தினின்றும் பெயர்ந்துபோய்த் தனிமையாக நின்று, கடவுளை நோக்கி, "எம்பெருமானே! தேவரீர், முன்னர் அருளியதுபோல இன்னொரு மாங்கனியைக் கொடுத்தருளவேண்டும். இல்லையேல் அடியேன் சொன்ன வார்த்தை பொய்யாய்விடும்" என்று பிரார்த்தித்தார். அப்போது ஆண்டவன் திருவரு ளால் ஒரு பழம் புனிதவதியார் கையில் வந்தது. உடனே அம்மையார் ஆனந்தங்கொண்டு அப் பழத்தைக் கொண்டுபோய்ப் பரமதத்தனுடைய கையில் கொடுத்தார். பரமதத்தன் மிகுந்த ஆச்ச ரியத்தோடு அதனை வாங்கியதும் அது மறைந் தது. அப்போது, முன்னர் பழத்தைக் கண்டு ஆச்சரியமுற்ற பரமதத்தன் அதனைக் காணாத போது அச்சமுற்றான்; அவ்வச்சத்தால் உளந் தடுமாறினான்; புனிதவதியாரை ஒரு தெய்வப் பெண்ணென்று கருதினான்; அவரைவிட்டு நீங்க எண்ணினான்; அவ்வாறே துணிந் தான்; அத்துணிவைப் பிறர்க்குஞ் சொல்ல வில்லை; புனிதவதியம்மையாருக்கும் அறிவிக்க வில்லை. இன்னும் அத்துணிவை நிறைவேற்றுங் காலம் நேரும்வரை திருநீலகண்ட நாயனாரைப் போல் அம்மையாரோடு தொடர்பின்றி வாழ்ந்து வந்தான். பிறகு பரமதத்தனுக்கு அம்மையாரை விட்டுப் பிரியவேண்டுமென்னும் எண்ணம் நாளுக்கு நாள் மிகுந்தது; அவன் அயல் நாடுக ளுக்குச் சென்று வாணிபஞ் செய்து அளவிறந்த பொருள்களைக் கொண்டு வரவிரும்புவதாக யாவர்க்கும் அறிவித்தான். உடனே அவனுடைய சுற்றத்தார்கள் ஒரு நல்ல மரக்கலத்தைச் செய்து அதனைச் செலுத்துவதற்கு வேண்டிய ஆட்களை யும் அமைத்தார்கள். உள்ளொன்றும் புற மொன்றுமாகவுள்ள பரமதத்தன் மகிழ்ந்து, அயல் நாடுகளிலே விற்பதற்கு வேண்டிய அரும் பண்டங்களை யெல்லாம் ஏற்றிக்கொண்டு நல்ல நாளிலே கப்பலேறிக் காரைக்காலை விட்டுச் சென் றான்.

பிறகு பரமதத்தன் தான் விரும்பிய ஊர்களுக் கெல்லாஞ் சென்று வியாபாரஞ் செய்தான்; தான் கொண்டுபோன சரக்குகளை யெல்லாம் மாற்றி அவற்றிற்குப் பதிலாக வேறு பண்டங்களை வாங்கிக் கொண்டு கடைசியாகப் பாண்டி நாட்டிலுள்ள ஒரு நல்ல நகரத்தை யடைந் தான். பரமதத்தன் அந்த நகரத்திலே வியாபா ரஞ் செய்து பொருளீட்டி அதைப் பலவாறாகப் பெருகச் செய்துகொண்டிருந்தான். அப்போது அந்த நகரத்திலிருப்பவர்கள் பரமதத்தன் தனி

மையாயிருப்பதைக் கண்டு இல்லற வாழ்க்கைக்குரிய ஒரு பெண்ணை மணந்துகொண்டு வாழச் சொன்னார்கள். அவ்வூரிலே புகழ்பெற்று விளங்கிய ஒருவனும் தன்னுடைய கன்னிகையைப் பரமதத்தனுக்குக் கொடுக்க இசைந்தான். பரமதத்தனும் தன்னுடைய முன்வரலாற்றினை ஒருவருக்கும் உரைக்காமல் அக்கன்னிகையை மணந்துகொண்டான். பிறகு பரமதத்தன் இரண்டாவது மனைவியோடு இனிமையாக வாழும்போது பொருட் செல்வத்திலே குபேரன் என்று யாவரும் போற்றும்படியாக விளங்கினான். அப்போது அவன் ஒளி வீசுகின்ற விளக்கைப்போல ஒரு பெண் குழந்தையைப் பெற்று அருமையாக வளர்த்தான. அவன் அக்குழந்தையைப் பார்க்கும்போதெல்லாம் புனிதவதியம்மையாரை நினைத்துக் கொண்டான். புனிதவதியார் தன்னுடைய மனையாளென்னும் தொடர்ச்சியை அறவே நீக்கிக்கொண்ட பரமதத்தன், அவ்வம்மையாரைத் தெய்வமென்றே நினைத்தான்; தான் பெற்ற பெண்ணுக்கு அந்த அம்மையாருடைய திருநாமத்தையே இட்டு அகமகிழ்ந்து வாழ்ந்துகொண்டிருந்தான். நிற்க.

காரைக்காலிலேயுள்ள தனதத்தனுடைய அருமைப் புதல்வியாராகிய புனிதவதியம்மையார் கப்பலேறிச் சென்ற கணவனை எதிர்பார்த்துக்கொண்டு நிலைபெற்ற கற்போடு இல்லறத்தை வழுவாமல் நடத்திக்கொண்டிருந்தார். பரமதத்தன் பல ஆண்டுகளாக வராமலிருப்பதற்காக அம்மையார் வருந்தினார். அப்போது, 'பரமதத்தன் பாண்டி நாட்டிலுள்ள ஒரு பெரிய நகரத்திலே இருக்கின்றான்; அங்கே கலியாணஞ் செய்துகொண்டு ஒரு பெண் குழந்தையையும் பெற்று வாழ்கின்றான்'' என்னும் செய்தி எட்டியது. அதுகேட்ட அம்மையாருடைய பெற்றோர் மனக்கலக்க முற்றார்கள்; தம்முடைய சுற்றத்தாருள் சிலரை யனுப்பிப் பரமதத்தனுடைய நிலைமையை உணர்ந்து கொண்டார்கள். பிறகு, அவர்கள் தங்கள் உறவினரோடு யோசித்து, பரமதத்தனிருக்குமிடத்திற்குப் புனிதவதியம்மையாரை அழைத்துக் கொண்டுபோய் விடவேண்டுமென்று நிச்சயித்தார்கள்; திருமகளைப்போன்ற அம்மையாரை, அழகிய சிவிகையிலே ஏற்றிக்கொண்டு சுற்றத்தாரும் பிறரும் சூழச் செந்தமிழ் வழங்கும் பாண்டிநாட்டை நோக்கிச் சென்றார்கள்.

அவர்கள் சில நாட்களில் பாண்டிநாட்டிலே பரமதத்தன் வசிக்கும் பெரிய நகரத்தை யணுகினார்கள்; பரமதத்தனுடைய கருத்தையறியாமல் அவனுடைய அகத்திற்குப்போக அஞ்சி, ஓரிடத்திலே தங்கி, தாங்கள் புனிதவதியம்மையாரை அழைத்துக்கொண்டு வந்த தன்மையை அவனுக்குத் தெரிவிக்கும்படியாகச் சொல்லியனுப்பினார்கள். அப்போது புனிதவதியம்மையார் தமது ஆருயிர்க்காதலனை எப்போது காண்பதென்று மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்.

புனிதவதியம்மையாரைத் தெய்வமாகக் கருதி வழிபட்டு வாழ்ந்து கொண்டிருந்த பரமதத்தன் அந்த அம்மையார் வந்து சேர்ந்தாரென்னும் செய்தியைக்கேட்டான்; உடனே மனதில் அச்சங்கொண்டான்; இளைய மனைவியையும், தான் அவளிடமாகப் பெற்ற பெண்குழந்தையையும் அழைத்துக்கொண்டு அம்மையார் இருக்குமிடத்தையடைந்தான். அவ்வாறு வந்த பரமதத்தன் அம்மையாரைக் கண்டவுடனே தானுந் தன்னுடைய இளையமனைவியும் குழந்தையுமாக அவருடையதிருவடிகளில் வீழ்ந்து வணங்கி எழுந்து "அம்மையே! அடியேன் உம்முடைய கருணையினால் வாழ்கின்றேன். இந்த இளங்குழந்தைக்கும் உம்முடைய திருநாமத்தையே தரித்திருக்கின்றேன்'' "என்று கூறினான். நாயகி நாயகனை வணங்கவேண்டிய முறைமைக்கு மாறாக நாயகனாகிய பரமதத்தன் தம்மை வணங்கப்பார்த்த புனிதவதியம்மையார், மிகுந்த அச்சமுற்று ஒன்றுந் தோன்றாமல் திகைத்துத் தம்மோடு கூட வந்த சுற்றத்தாரோடு ஒதுங்கிநின்றார். அப்போது அறிவுள்ள சுற்றத்தாரும் பரமதத்தன் செய்த செய்கையைப் பார்த்து நாயகன் இவ்வாறும் செய்யலாமா வென்னும் ஆச்சரியத்தையும், இதனால் தங்கள் குடிக்குப் பழி வருமேயென்றெண்ணுவதனாலுண்டாகிய வெட்கத்தையும் அடைந்தார்கள். பிறகு அவர்கள் பரமதத்தனை நேரே விசாரித்து உண்மையை அறிந்து கொள்ள நிச்சயித்து, அவனை நோக்கி, 'நீ உன் மனைவியை வணங்கவேண்டியதென்ன ?'' என்று கேட்டார்கள். அதற்கு அவன், "இவர் மானுடப் பெண்ணல்லர்; தெய்வப் பெண்ணாயிருத்தலை நான் தெரிந்துகொண்ட பின்னரே இவரை விட்டு நீங்கினேன்; இப்போது இரண்டாவது கலியாணஞ் செய்துகொண்டு பெற்ற இப் பெண் குழந்தைக்கு இவர் திருப்பெயரையே வைத்

திருக்கின்றேன்; ஆகையால் இவருடைய திருவடிகளை வணங்கினேன்; நீங்களும் இவரைத் தெய்வமாக நினைத்து வணங்குங்கள்'' என்று சொன்னான். இவ்வாறு பரமதத்தன் சொன்னதைக் கேட்ட சுற்றத்தார், அவன் புனிதவதியாரைத் தெய்வமென்று கூறிய உண்மை அறியப் பெறாமல் மருண்ட மனத்தோடு நின்றார்கள். புனிதவதியம்மையார் திருவருளைப் பெறுங்காலம் நெருங்கி விட்டபடியால், அவர் அங்கிருந்தவர்களிடத்தில் ஒன்றும் பேசாமல் ஆண்டவனை நோக்கி, "எம்பெருமானே! இவர் கொண்ட கொள்கை இவ்வாறிருக்கின்றது. இவ்வுடலோ இவர் பொருட்டுச் சுமந்திருந்த மாமிசப் பொதியாகும். இப்பொதியைத் தேவரீர் இப்போதே ஒழித்தருளி, கயிலாயத்திலே தேவரீரைச் சூழ்ந்துள்ள சிவ கணங்களெல்லாம் போற்றும் பேய்க்கணங்களுடைய வடிவத்தைத் தந்தருள வேண்டும்'' என்று முறையிட்டார். அப்போது பெருமானருளால் அம்மையாருக்கு மேலான முத்தி நெறியை யடைதற் கேதுவாகிய உணர்ச்சி உண்டாயிற்று. உடனே அவர் தமது திருமேனியிலிருந்த மாமிசப்பொதியை உதறினார். மாமிச உடம்பு மறைந்தது. எற்புடம்பு வந்தது. எல்லா உலகங்களும் வணங்குதற்குரிய பேய் வடிவத்தைப் பெற்றார். இந்நிகழ்ச்சி இறைவனுடைய அளவிறந்த திருவருட் பிரபாவங்களுள் என்றும் நிகழப் பெறாத ஓர் அற்புதமாதலின் தேவர்கள் மலர்மாரி பொழிந்தார்கள். தேவதுந்துபியின் ஒலியானது எங்கும் கேட்டது. அம்மையாரோடு வந்த உறவினர்களெல்லாரும் அவ்வாறே அஞ்சி அவரை வணங்கிப் பரமதத்தன் சொன்னது "உண்மை, உண்மை" என்று சொல்லிக்கொண்டே போய்விட்டார்கள்.

அழகெலாந் திரண்டு நின்ற அம்மையார் பேயுருவத்தைக் கொண்டாரென்றால் எவரே அஞ்சமாட்டார்கள்? அம்மையாரைப் பார்த்தவர்களெல்லாம் அதிசயித்து அச்சமடைந்து பேய் பேய் என்று கூவிக்கொண்டு ஓடினார்கள். அது கேட்ட அம்மையார், "தேவர்கள் நாயகராகிய சிவபெருமான் அடியேனைத் தமது அடிமையென்று அறிந்து கொள்வாராகில் அதுவே அடியேன் பெறவிரும்பிய பேற்றைப் பெற்றதாகும்; கடவுளுக்கு அடிமையாகின்ற தன்மையின் பெருமையை யறியாத மனிதர்களுக்கு அடியேன் இப்பேயுருவல்லாமல் வேறு எவ்வுருவடைந்தாலும் என்ன பயன்?'' என்று கூறி இறைவனைத் துதித்தவாறாக நின்றார். அப்போது, அம்மையார் திருவருளால் கைவரப்பெற்ற சிவஞானத்தால் சிவபெருமானுக்குச் செந்தமிழ்ப்பாமாலை சாற்றும் சக்தியைப்பெற்றார்; அற்புதத் திருவந்தாதியையும், திரு இரட்டைமணி மாலையையும் அப்போதே, சாற்றியருளினார்.

பிறகு, சிவபெருமானுடைய திருவடித் தாமரைகளைத் துதிக்கின்ற நல்ல அடியார் திருக்கூட்டத்திலேயே நானும் ஒன்றானேனென்று பாடி மகிழ்ந்த அம்மையார், சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற கைலாயத்தை அடைய வேண்டுமென்று எண்ணிப் புறப்பட்டார். அம்மையாருடைய எண்ணப்படி அவருக்குத் திருவருளுந் துணையாக நின்றது; அவர் மனோவேகத்தினும் அதிவேகமாக நடந்து கயிலை வெற்பின் பாங்கர் அணைந்தார்; இனி, திருக்கயிலாய மலையில் ஏறிச் செல்லவேண்டும்; அதைக் காலால் நடந்து ஏற அம்மையாருக்கு மனமில்லை. ஆ! என்ன பக்தி! என்ன அன்பு! என்ன ஆர்வம்! அம்மையார் என்ன செய்தார்? தலை கீழுங் கால்கள் மேலுமாக நின்று, கைகளால் தாவிச் சென்றார். அம்மையார் பேயாராயினமையின் அவர் ஒருவருக்கே அது சாத்தியமாயிற்று. திருக்கண்ணப்பர் திருக்காளத்தி மலையிலே ஏறியபோது அவருடைய அன்பு முன்னும், அவர் பின்னுமாகச் சென்றது போல அம்மையாரும் மிகுந்த வேட்கையால் விழுங்கப்பட்டு வெள்ளிமால் வரையின் மீது ஏறினார். அப்போது சிவபெருமானுடைய இடப்பாகத்தில்வீற்றிருந்தருளும் உமாதேவியாருடைய திருக்கண்ணோக்கத்திற்குக் காரைக்காலம்மையார் காலால் நடவாது தலையினால் நடந்து சென்ற காட்சி காணப்பட்டது. உடனே அம்பிகையெம்பெருமாட்டியார் அதிசயமடைந்து, தம் பெருமானை நோக்கி "எம்பெருமானே! இங்கே தலையினால் ஏறிவரும் என்புடலையுடையவரது அன்பின் பெருமை யாது!'' என்று கேட்டார். அதற்குச் சிவபெருமான், "உமையே! இங்கே வருகின்ற இவள் நம்மைத் துதிக்கும் அம்மை. இந்தப் பெருமை பொருந்திய வடிவத்தையும் தானே வேண்டிப்பெற்றாள்'' என்றார். பின்னர் காரைக்கால் பேயார் கடவுளுடைய சந்நிதியைச் சமீபித்ததும் கண்ணுதற் கடவுள் அவரைத் திருநோக்கஞ் செய்து உலகமெல்லாம் உய்யும்படி

யாக "அம்மையே" என்று திருவாய் மலர்ந்து அழைத்தார். அன்பினால் என்பாய அம்மையாரும் அதற்குப் பதிலுத்தரமாக "அப்பா" என்று சொல்லிக்கொண்டு அருகே சென்று, அவருடைய அழகிய திருவடிகளில் விழுந்து பணிந்து எழுந்து நின்றார். பெருமான் பேயாரைப் பார்த்து, "உனக்கு வேண்டுவது என்னை ?" என்று கேட்டார். பெறுதற்கரிய பேறுபெற்ற அம்மையார் வணங்கி நின்று, "தரும சொரூபியே ! அடியேனுக்கு அழியாத பேரின்பமாகிய அன்புவேண்டும் ; இனிமேல் இவ்வுலகத்தில் பிறவாதிருத்தல் வேண்டும் ; மீண்டும் பிறப்புண்டேல் தேவரீரை என்றும் மறவாதிருத்தல் வேண்டும் ; இன்னும் தேவரீர் திருத்தாண்டவஞ் செய்யும்போது அடியேன் மனமகிழ்ந்து பாடிக்கொண்டு தேவரீர் திருவடியின் கீழிருக்கவேண்டும்" என்று வேண்டினார். சிவபெருமான் அம்மையார் கேட்ட வரங்களை அவ்வாறே பெறும்படியாகக் கிருபை செய்தார் ; பின்னும் அவரை நோக்கி, "தென்திசையிலுள்ள திருவாலங்காட்டில் நமது நடனத்தைத் தரிசித்துப் பேரானந்தமடைந்து நம்மைப் பாடிக்கொண்டிரு" என்றார். அதுகேட்ட அம்மையார் ஆனந்தங்கொண்டு ஆண்டவனைப் பலமுறையும் வணங்கினார் ; விடைபெற்றுக் கொண்டார்; திரும்பவுந் தலையினாலே நடந்து திருவாலங்காடென்னுந் திருப்பதியை அடைந்தார். அங்கே, சிவபெருமான் அண்டத்தை அளாவும்படி திருவடியைத் தூக்கித் தாண்டவஞ் செய்தருளுகின்ற திருக்கோலத்தைத் தரிசித்தார் ; அதிசயித்தார் ; பேரன்போடு பெருமானைப் பணிந்தார் ; ஆண்டவனைப் பாடவேண்டுமென்று எழுந்த ஆசை மிகுதியால் இனிய இசையோடு கூடிய பாடல்களைப் பாடினார். பின்பு காரைக்காலம்மையார் கடவுளுடைய திருவடி நிழற்கீழ் என்றுஞ் சிவானந்தத்தை அனுபவிக்கும் பெரும் பேற்றை ஆலங்காட்டிலிருந்தே அடைந்தார்.

நம்பன் திருமலை நான்மிதி யேனென்று தாளிரண்டும்
உம்பர் மிசைத்தலை யானடந் தேற வுமைநகலுஞ்
செம்பொன் னுருவனென் னம்மை யென்புபெற்
[றவள் செழுந்தேன்
கொம்பி னுதுகாரைக் காலினின் மேய குலதனமே.
—திருவந்தாதி.

தங்குபுகழ்க் காரைக்கால் வணிகன் மிக்க
தனதத்தன் றரும்புனித வதியார் மாவின்
செங்கனிகள் திருவருளா லழைப்பக் கண்டு
திகழ்கணவ னதிசயித்துத் தேச நீங்க
அங்கவுட லிழந்துமுடி நடையா லேறி
அம்மையே யெனநாத னப்பா வென்று
பொங்குவட கயிலைபணிந் தாலங் காட்டிற்
புனிதனட மனவரதம் போற்றினாரே.
—புராணசாரம்.

பேயார் அருளிய பாடற்றிரட்டு

அற்புதத் திருவந்தாதி

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்— நிறந்திகழு
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர். (1)

இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படருநெறி பணியா ரேனுஞ்—சுடருருவில்
என்பறாக் கோலத் தெரியாடு மெம்மானார்க்
கன்பறா தென்னெஞ் சவர்க்கு. (2)

இறையவனே யெவ்வுயிருந் தோற்றுவிப்பான்
[றோன்றி
இறையவனே யீண்டிரக்கஞ் செய்வான்-இறையவனே
எந்தா யெனவிரங்கு மெங்கண்மேல் வெந்துயரம்
வந்தா லதுமாற் றுவான். (3)

அருளே உலகெலா மாள்விப்ப தீசன்
அருளே பிறப்பறுப்ப தானால்—அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையே
[னெஞ்ஞான்றும்
எப்பொருளு மாவ தெனக்கு. (4)

எனக்கினிய வெம்மானை யீசனை யானென்றும்
மனக்கினிய வைப்பாக வைத்தேன்—எனக்கவனைக்
கொண்டேன் பிரானாகக் கொள்வதுமே யின்புற்றேன்
உண்டே யெனக்கரிய தொன்று. (5)

ஒன்றே நினைந்திருந்தே னொன்றே துணிந்
தொழிந்தேன்
ஒன்றேயென் னுள்ளத்தி னுள்ளடைத்தேன் —
ஒன்றேகாண்
கங்கையான் திங்கட் கதிர்முடியான் பொங்கொளி
சேர்
அங்கையாற் காளா மது (6)

இனியோநா முய்ந்தோம் இறைவனருள் சேர்ந்தோம்
இனியோ ரிடரில்லோ நெஞ்சே—இனியோர்
வினைக்கடலை யாக்குவிக்கு மீளாப் பிறவிக்
கனைக்கடலை நீந்தினோங் காண். (7)

அறிவானுந் தானே அறிவிப்பான் தானே
அறிவா யறிகின்றான் தானே—அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பா ராகாயம்
அப்பொருளுந் தானே யவன். (8)

மனையாளை யஞ்சு மறுமையி லாளன் வினையாண்மை வீறெய்த லின்று.

அவனே யிருசுடர்தீ யாகாய மாவான்
அவனே புவிபுனல்காற் றாவான்—அவனே
இயமான னாயட்ட மூர்த்தியுமாய் ஞான
மயனாகி நின்றானும் வந்து. (9)
பிறையும் புனலும் அனலரவுஞ் சூடும்
இறைவர் எமக்கிரங்கா ரேனுங்—கறைமிடற்ற
எந்தையார்க் காட்பட்டே மென்றென் றிருக்குமே
எந்தையா வுள்ளம் இது. (10)
நூலறிவு பேசி நுழைவிலா தார்திரிக
நீல மணிமிடற்றா னீர்மையே—மேலுலகத்
தெக்கோலத் தெவ்வுருவா யெத்தவங்கள் செய்வார்க்கும்
அக் கோலத் திவ்வுருவே யாம். (11)
காலனையும் வென்றோம் கடுநரகங் கைகழன்றோம்
மேலை யிருவினையும் வேரறுத்தோம்—கோல
அரணார வித்தழிய வெந்தீயம் பெய்தான்
சரணார விந்தங்கள் சார்ந்து. (12)
பெறினும் பிறிதியாதும் வேண்டேம் நமக்கீ
தறினும் உறுதொழியு மேனுஞ்—சிறிதுணர்த்தி
மற்றொருக ணெற்றிமேல் வைத்தான்றன் பேயாய
நற்கணத்தி லொன்றாய நாம். (13)

திரு இரட்டைமணிமாலை

ஈச னவனல்ல தில்லை யெனநினைந்து
கூசி மனத்தகத்துக் கொண்டிருந்து—பேசி
மறவாது வாழ்வாரை மண்ணுலகத் தென்றும்
பிறவாது காக்கும் பிரான். (14)
பிரானென்றுதன் னைப்பன்னாள் பரவித்தொழுவா ரிடர்கண்
டிரானென்ன நிற்கின்ற வீசன் கண்டிரின வண்டு கிண்டிப்
பொராநின்ற கொன்றைப் பொதும் பர்க்கிடந்து பொம்மென் றூரவாய்
அரா நின்றிரைக்குஞ் சடைச் செம்பொனீண் முடி யந்தணனே (15)
வேதியனை வேதப் பொருளானை வேதத்துக்
காதியனை யாதிரைநன் னாளானைச்—சோதிப்பான்
வல்லேன மாய்ப்புக்கு மாலவனு மாட்டாது
நில்லேன மாவென்றான் கீழ். (16)
கழற்கொண்ட சேவடி காணலுற்றார் தம்மைப் பேணலுற்றார்
நிழற்கண்ட போழ்தத் துல்லாவினை நிகரேதுமின்றித்
தழற்கொண்ட சோதிச் செம்மேனி யெம்மானைக் கைம்மா மலர்தூய்த்
தொழக்கண்டு நிற்குமோ துன்னி நம்மடுந் தொல் [வினையே.
தொல்லை வினைவந்து சூழாமுன் றொழாமே
ஒல்லை வணங்கி யுமையென்னு—மெல்லியலோர்
கூற்றானைக் கூற்றுருவங் காய்ந்தானை வாய்ந்திலங்கு
நீற்றானை நெஞ்சே நினை. (18)

மாணிக்கவாசகர்

MANIKKAVACHAKAR

மாணிக்கவாசகர் பாண்டி நாட்டிலே வாதவூரிலே பிறந்தார். அவருடைய தாய் தந்தையர் அவருக்கு **'வாதவூரன்'** என்று பெயரிட்டார்கள். வாதவூரர் வாழை இளங்குருத்துப் போல விரைவாக வளர்ந்து வந்தார். பெற்றோர் அவருக்கு வித்தியாரம்பம் உபநயனம் முதலிய சடங்குகளைச் சிறப்பாகச் செய்து வைத்தார்கள். அவர் மிகுந்த தவமுடையவர்கள் வயிற்றிலே பிறந்தபடியால், வேத முதலிய எல்லாக் கலைகளையும் சீக்கிரத்தில் கற்றுக்கொண்டார்.

அறிவுடைய வாதவூரரிடத்தில் சிவ பக்தி, சீவகாருண்யம், பொறுமை, அன்பு, ஒழுக்கம், ஊக்கம் இவைகள் நிறைந்திருந்தன. ஆகையால் யாவரும் அவரை நல்லவரென்று புகழ்ந்தார்கள். கற்றவர்களெல்லாம் அவருடைய கல்வியை எதிர் பார்த்தார்கள். மந்திரிகளெல்லாம் ஒரு நாள் அவர் தங்களுக்குத் தலைவராவாரென்று எண்ணினார்கள். தவமுடையவர்களெல்லாம் அவருடைய தன்மையை மெச்சினார்கள். ஏறக்குறைய அந்த நாட்டிலிருந்த மக்கள் யாவரும் அவரை முன் மாதிரியாகக்கொண்டே நடந்தார்கள். இவ்வாறு திருவாதவூரருடைய புகழ் பதினாறு வயதிலேயே எங்கும் பரவியது.

அப்போது பாண்டி நாட்டரசன் வாதவூரருடைய கல்வி, கேள்வி, அறிவு முதலியவற்றை நேரே கண்டு அவரைத் தமக்கு முதன் மந்திரியாக்கிக் கொண்டான். வாதவூரர் மந்திரித் தொழிலை மிகுந்த திறமையாக நடத்தினார்; ஆகையால் அரசனுடைய புகழ் மேன்மேலும் அதிகரித்தது. குடிகளெல்லாம் துன்பம் ஒரு சிறிதும் இல்லாமல் மகிழ்ந்து இருந்தார்கள். சில ஆண்டிற்குள் அரசன் மிகமகிழ்ந்து அவருக்குத் **'தென்னவன் பிரமராயன்'** என்னும் பட்டப் பெயர் ஒன்றையுங் கொடுத்தான்.

தென்னவன் பிரமராயர் ஞானசாத்திரங்களையெல்லாம் நன்றாக ஆராய்ந்து கற்றிருந்தார். ஆகையால் இவ்வுலக இன்பம் அழியக்கூடியதென்றும் அழியாத இன்பம் சிவ பெருமானுடைய திருவடி இன்பமே யென்றும் அவருக்குத் தோற்றியது. சிவபெருமானுடைய திருவடிகளை அடையவேண்டும் என்னும் எண்ணமே அவருடைய உள்ளத்தில் குடிகொண்டது. அவ

இல்லாளை யஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்று நல்லார்க்கு நல்ல செயல்.

ரும் அதற்கு வேண்டிய முயற்சியிலேயே கண்ணுங் கருத்துமா யிருந்தார். ஆனால் அவர் 'கடவுளைக் கல்வி கேள்வியாற் காணமுடியாது; ஞானத்தையடைந்த ஒரு குருவின் மூலமாகவே கடவுளை அடையவேண்டும்; கடவுளை அடைவதற்கு முக்கியமாகவேண்டியது அன்பே' யென்பதைக் கடைசியாய் அறிந்து கொண்டார். அது முதல் வாதவூரார் தகுந்த ஆசிரியரைத் தேடிக் கொண்டிருந்தார்; அதற்காகவே நாட்டிற்கு வெளியே போய்ச் செய்யவேண்டிய இராஜகாரியங்களையுந் தாமே ஏற்றுக்கொண்டார்.

ஒருநாள் பாண்டியன் மந்திரிமாரோடும் மற்றவர்களோடும் இராஜசபையில் அமர்ந்திருந்தான். அப்போது அவனுடைய குதிரைக்காரர்கள் அங்கே வந்து வணங்கி நின்று, "மகாராஜா! நம்முடைய குதிரைகளுள் சில இறந்தன; சில நோயாயுள்ளன; இன்னுஞ் சில கிழமாயின; சிறந்த குதிரைகள் ஒன்றுமில்லை; சோழநாட்டைச் சேர்ந்த கீழ்க்கடற் கரையிலே மேலான குதிரைகள் பல வந்திருப்பதாகக் கேள்விப்படுகிறோம்" என்று கூறினார்கள்.

அரசன், உடனே சபையிலிருந்த முதல் மந்திரியைப் பார்த்து, 'பிரமராயரே! இன்று நீர் நமது நிதியிலிருந்து வேண்டிய பொருளை எடுத்துக் கொண்டுபோய்ச் சிறந்த குதிரைகளை வாங்கி வாருங்கள்" என்றான். ஞானகுருவைத் தேடுவதற்காக வெளியே போக விரும்பியிருந்த வாதவூரார் மிகவும் மகிழ்ச்சியை யடைந்தார்; ஞானாசாரியன் கிடைக்குங்காலம் கிட்டியதோ என்று எண்ணினர்; அரசன் கட்டளைப்படி அளவிறந்த பணத்தை யெடுத்துக்கொண்டு புறப்பட்டார். ஏவலாளர் பலர் அவரோடு புறப்பட்டார்கள். வாதவூரர் அப்போது மதுரைமா நகரிலுள்ள சுந்தரேசப் பெருமானுடைய ஆலயத்திற்குச் சென்று, 'ஆண்டவனே! அடியேன் உமக்கும் உம்முடைய அன்பர்க்கும் பணிசெய்ய அருள் செய்ய வேண்டும்" என்று எண்ணித் தொழுதார். அத்தருணத்தில் கோயில் குருக்கள் ஒருவர் வந்து திருநீறு தந்தார். வாதவூரர் அதனை மகிழ்ந்து அணிந்து அஃது ஒரு நல்ல சகுனம் என்று எண்ணிப் பணிந்து சென்றார். ஏவலாளர்கள் பலர் சூழச் சென்ற திருவாதவூரர் வழியிலுள்ள சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டே போய்த் திருப்பெருந்துறையை அடைந்தார்.

கடவுள் கருணையும் நீதியும் உடையவர். அவர் நம்முடைய செய்கைக்குத் தக்கவாறு நாம் விரும்புவதைச் செய்கிறார். இப்போது திருவாதவூரடிகளுடைய அன்பையும் அவருடைய விருப்பத்தையும் அறிந்த சிவபெருமான் அவருக்குத் தாமே ஞானகுருவாக வரத் திருவுளங் கொண்டார். ஆகலின் அவர் ஓர் அந்தணர் வடிவத்தோடு அடியவர்கள் பலர்சூழத் திருப்பெருந்துறையிலே கோயிலுக்கு அருகிலுள்ள குருந்தமரத்தடியிலே எழுந்தருளியிருந்தார். திருப்பெருந்துறையை அடைந்த திருவாதவூரர் சிவபெருமானைத் தரிசிக்கக் கோயிலுக்குச் சென்றார். அவர் ஆனந்தக் கண்ணீர் சிந்தச் சிவபெருமானுடைய அடிகளில் விழுந்து பணிந்து எழுந்து, அழகிய கைகள் சிரசின்மீது பொருந்த ஆலயத்தை வலமாக வந்தார்.

வாதவூரர் ஆலயத்தை வலம் வரும்போது சிவபெருமான் குருவாகக் குருந்தமரத்தடியிலே அடியவர்களோடு வீற்றிருப்பதைப் பார்த்தார்; உடனே தாய்ப் பசுவைக் கண்ட கன்று துள்ளி ஓடுவதுபோல் விரைந்து ஓடி, வெட்டிய மரம்போல் கீழே விழுந்து வணங்கி நின்றார். அங்கே அந்தணர் கோலத்தோடு வீற்றிருப்பவர் சிவபெருமானென்று அறியாத பிரமராயர், அந்தப் பெரியாரையே குருவாகக் கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தார். இதுவரையில் காணக்கிடைக்காத ஒரு ஆசிரியர் கருணையுள்ள கடவுளாலேயே இப்போது கிடைத்ததாக நினைத்தார். பிறகு வாதவூரர் அப்பெரியாரை வலம் வந்து அவர் அருகே ஆனந்தத்தோடு சென்று, நின்று, "சுவாமி! அடியேனைத் தேவரீருடைய அடியவர்களுள் ஒருவனைச் சேர்த்துக்கொண்டு அருள் செய்யவேண்டும்" என்று பிரார்த்தித்தார். திருவாதவூரரை அடிமையாக்கிக் கொள்ளவே வந்த ஆண்டவன் அப்போதே அவருடைய குற்றமெல்லாம் போகும்படியாக அருட்கண்ணால் பார்த்து, அவரை அருகே அழைத்து, ஞானத்தைப் போதிக்கக் கூடிய உபதேசத்தையுஞ் செய்தருளினர். சிவபெருமானுடைய பார்வை அவரைப் பரிசுத்தப் படுத்தியது; அவர் உபதேசஞ் செய்த அருண்மொழி அவருடைய மனிதத் தன்மையைப் போக்கிச் சிவத் தன்மையைக் கொடுத்தது. அப்போது பிரமராயர் பேரின்பத்துள் மூழ்கித் தம்மை மறந்து நின்றார். பிறகு, கடவுளருளால் ஒருவாறு தெளிந்து, தேகம் சிலிர்ப்ப, கண்ணீர் சொரிய, பல முறை வலம் வந்து வணங்கி,

கை கூப்பி நின்று, வாய் குழற "ஐயனே! அடியேனை அடிமைகொண்ட மெய்யனே! அடியேன் மனதை உருக்கிய மாணிக்கமே! அடியேன் தேடிக்கண்ட அழியாத செல்வமே!" என்று துதித்துத் தம்முடைய ஆடை ஆபரணங்களைக் களைந்து பாண்டியன் கொடுத்த பொன்னோடு சேர்த்துப் பெருமான் எதிரிலே வைத்து விட்டுக் கோவணத்தோடு நின்றார்.

அப்போது வாதவூராருக்குத் தம்மையறியாமலே ஆண்டவனைப்பாடவேண்டுமென்னும் எண்ணம் எழுந்தது. அவர் உடனே இனிமையான பாடல்களைப் பாடினார். அன்பு என்னுந் தேன் கலந்த அப்பாடல்களைப் பரமன் கேட்டு மகிழ்ந்து "மாணிக்கவாசக! நீ இவ்விடத்திலேயே சிலநாள் இருந்து திருப்பணிசெய்" என்று கட்டளையிட்டு அடியவரோடு மறைந்தருளினார். திருப்பெருந்துறையில் எழுந்தருளியுள்ள ஈசன் வாதவூராருடைய மணிவார்த்தையை இன்னுஞ் சிலநாள் கேட்கவும் அவர் பெருமையைப் பாண்டிய நாட்டரசனுக்கு அறிவிக்கவுமே அவரை அங்கு இருக்கச் செய்தானென்று தெரியவருகிறது.

ஈசனால் மாணிக்கவாசகனென்று அழைக்கப்பட்ட வாதவூரர், பெருமான் மறைந்ததைக்கண்டு கீழேவிழுந்து, புரண்டு புரண்டு, தாய்ப்பசுவைப் பிரிந்த கன்றைப்போல் அழுது, ஒருவாறு தெளிந்து அமர்ந்தார். அப்போது, அரசனுடைய வேலைக்காரர்கள் அருகேவந்து வணங்கி "ஐயனே நாம் வந்து நாளாயிற்றே. உடனே குதிரைகளை வாங்கிக்கொண்டு போகவேண்டாமா? தாமதிக்கின்றீர்களே. எழுந்து வாருங்கள்" என்றழைத்தார்கள். அதற்கு மணிவாசகர் "நீங்கள்போய்க் குதிரைகள் ஒரு மாதத்திற்குள் வருமென்று அரசனுக்குச் சொல்லுங்கள்" என்று சொன்னார். அவர்களும் அவ்வாறே சென்று மந்திரியடைந்த நிலைமையையும் அவர் சொல்லி அனுப்பிய செய்தியையும் மன்னனுக்குச் சொன்னார்கள். அரசன் அதுகேட்டு மிகுந்த கோபங் கொண்டு வாதவூரர் சொல்லியனுப்பிய நாளை எதிர்பார்த்திருந்தான்.

மாணிக்கவாசகர் குதிரைவாங்கக் கொண்டு வந்த பொருளையெல்லாம் திருப்பெருந்துறையிலே திருப்பணி செய்தும், திருவிழா செய்தும், அடியவர்க்கு அமுதூட்டியும் செலவழித்துவிட்டார். ஒரு மாதமானதும் பாண்டியன் குதிரைகள் வாராதது கண்டு ஓர் ஓலை யெழுதி அனுப்பினான். தூதர்கள் அந்த ஓலையைக் கொண்டுவந்து மாணிக்கவாசக சுவாமிகளுக்குக் கொடுத்தார்கள். அவ்வோலையிலே,

"தென்னவன் பிரமராயருக்கு,

குதிரை வாங்க அளவற்ற பொருளோடு சென்ற நீர் அவ்வாறு குதிரை வாங்காமல் திருப்பெருந்துறையிலே இருக்கிறீரென்று கேள்விப் படுகிறேன். எல்லாம் அறிந்த நீர் இப்படியுஞ் செய்யலாமோ? நீர் சொல்லி யனுப்பிய நாளும் கடந்து விட்டதே. நமது வேலைகளெல்லாம் தாமதமாகின்றமையினால் இவ்வோலையைக் கண்டதும் தூதர்களோடு மதுரைக்கு வரவேண்டும்.

இங்ஙனம்,
பாண்டியன்."

என்று எழுதி யிருந்தது. உடனே வாதவூரர் கோயிலுக்குள்ளே போய் ஈசனைத்துதித்து "அப்பனே? பாண்டியன் பொருளெல்லாம் ஆலயப் பணிக்கும், அடியார்க்கும் செலவழித்துவிட்டேனே. அடியேன் எப்பொருளைக் கொண்டு பரி வாங்குவேன்?" என்று விண்ணப்பஞ் செய்தார்.

ஈசன் அன்றிரவு வாதவூராருடைய கனவில், முன் மரத்தடியிலிருந்து மறைந்து சென்ற கோலத்தோடு வந்து "நாம் ஆவணி மாதம் மூல நாளிலே நல்ல குதிரைகளைக் கொண்டு வருகின்றோம். நீ முன்னர்ச் சென்று இந்த மாணிக்கக் கல்லை மன்னனுக்குக் கொடு" என்று கூறிக் கையில் மாணிக்கத்தை வைத்து மறைந்தார். மணிவாசகர் உடனே எழுந்து கையிலே கல்லைக் கண்டு மகிழ்ந்து இறைவனைப் பிரிந்து மதுரைக்குப்போக வருந்தியிருந்தார். பொழுது விடிந்ததும், அவர் கடவுள் கட்டளைப்படி மந்திரியின் உடையை உடுத்திக்கொண்டு தூதர்களோடு புறப்பட்டார்.

சுவாமிகள் மதுரையை யடைந்து மன்னனைப் போய்ப் பார்த்து மாணிக்கக் கல்லைக் கொடுத்து நின்றார். அரசன் மாணிக்கத்தைப் பெற்று மகிழ்ந்து "நீர் செய்த காரியம் என்ன?" என்று கேட்டான். பிரமராயர் "அரசே! நான் நல்ல குதிரைகளை வாங்கினேன். ஆவணி மூலமே நல்ல நாளாகலின் அவைகள் அன்று வரும். தங்கள் ஓலையால் யான் முன்னே வந்தேன்" என்றார். அரசனும் "யான் பிறர் சொல்லைக் கேட்டு எழுதிய ஓலைக்கு வருந்தவேண்டாம்" என்று சொல்லி அநேக வெகுமதிகளைக் கொடுத்தான். திருவாத

ஊரார் அவைகளைப் பெற்றுக்கொண்டு தம்முடைய வீட்டிற்குப் போனார்.

அப்போது அவரைப் பார்க்கவந்த சுற்றத்தாரும் மற்றோரும் அவரைச் சூழ்ந்துகொண்டு, "ஐயா! அரசர்க்கு ஊழியஞ்செய்வது அந்தணர்க்கு அழகன்று. அவ்வாறு அத்தொழிலை ஏற்றுக்கொண்டபின் அதற்கு மாறாகச் செய்தலும் அழகன்று. யாவும் அறிந்த தங்களுக்கு யாங்கள் என்ன சொல்வது? அரசனிடத்தில் அசுவங்கள் வருமென்று சொல்லிவிட்டீர். இனி என்ன செய்யப் போகிறீர்?" என்றார்கள். சுவாமிகள் உடனே நகைத்து, "அன்பர்களே! ஆண்டவன் தன்னுடைய அழகிய கோலத்தைக்காட்டி அடியேனை ஆண்டுகொண்டான். இனி எனக்கு ஒன்றுமில்லை. ஈசனே எனக்கு எல்லாம் ஆவன். அடியேன் ஒருவருக்கும் அஞ்சவேண்டியதில்லை" என்றார்.

மணிவாசகர் ஆண்டவன் சொற்படி ஆவணி மூலநாளை எதிர்பார்த்திருந்தார். அவருடைய உடல் மதுரையிலும் உயிர் பெருந்துறையிலும் இருந்தது. அப்போது மந்திரிகளுள் ஒருவர் மன்னனிடஞ் சென்று பிரமராயர் புகன்றவைபொய்யென்றும் அவர் பொருளையெல்லாம் ஆலயத்திற்கும் அடியார்க்குஞ் செலவழித்துவிட்டாரென்றுஞ் சொன்னார். உடனே பாண்டியன் குதிரைகள் திருப்பெருந்துறையி லுள்ளனவாவென்று பார்த்து வரும்படி ஏவலாளரை அனுப்பினான். அவர்கள் திரும்பி வந்து "குதிரைகள் அங்கே இல்லை" என்று கூறினார்கள். உடனே அரசன் கோபித்துத் தண்டஞ் செய்பவர்களை அழைத்து, வாதவூரார் எடுத்துக்கொண்டு போன பொருளை எப்படியாவது வாங்கும்படி கட்டளையிட்டான். அவர்கள் உடனே மாணிக்கவாசகரிடம் வந்து அரசன் கட்டளையை அறிவித்தார்கள். அதற்கு அவர் ஒன்றும் பேசாது மௌனமாயிருந்தார். பின்பு தண்டனை புரிவோர் அரசனுடைய கட்டளையை நிறைவேற்றுவதற்காக வாதவூரரை அழைத்துக் கொண்டுபோய்ச் சிறையில் வைத்தார்கள்; வெய்யிலில் நிறுத்தினார்கள்; பெரிய கல்லை முதுகின்மேல் ஏற்றினார்கள் சுவாமிகள் சிவபெருமானுடைய திருவடிகளைத் தியானித்துக்கொண்டு தம்மை மறந்திருந்தார். ஏவலாளர் வேறு பலகொடிய தண்டனைகளையும் விதித்து மாலைக்காலம் வந்ததும் மறுபடியும் சிறையிலே வைத்தார்கள். வாதவூரார் சிறையிலிருக்கும்போது சிவபெருமானைச் சிந்தித்துத் தொழுது, "ஐயனே! அடியார்க்கு மெய்யனே! தேவரீர் குதிரைகளைக் கொண்டுவருவதாகச் சொன்னது பொய்யோ? அடியேன் படும் வருத்தத்தைத் தேவரீர் அறியவில்லையோ? தேவரீரிடத்தில் அடைக்கலம் புகுந்த அடிமையை இப்படியும் நழுவவிடலாமோ? அடியேனுக்கு வேறு யார் துணை?" என்று அழுதார். எங்கும் நிறைந்த சிவபெருமான் வாதவூரர் சொன்னதைக் கேட்டருளி இரக்கமுற்று அவரைச் சிறையினின்றும் நீக்கத் திருவுளங்கொண்டார்.

சிவபெருமான் நினைத்த மாத்திரத்திலே எவற்றையும் முடிக்கவல்லவராகலின் நரிகள் குதிரைகளாக வேண்டுமென்றும் தம்முடைய கணநாதர்கள் குதிரை வீரர்களாக வேண்டுமென்றும் நினைத்தார். அப்படியே நரிகள் குதிரைகளாய் எதிரில் வந்துநின்றன; கணநாதர்கள் குதிரை வீரரானார்கள். சிவபெருமான் குதிரை வர்த்தகனைப்போல் வேடந்தாங்கி வெண்மைநிறம் பொருந்திய வேதக் குதிரையின் மீது எழுந்தருளினார். ஆண்டவன் நடுவிலும் மற்றோர் அவரைச் சூழ்ந்தும் அதிவேகமாக மதுரையை நோக்கி வந்தார்கள். அவர்கள் மதுரையின் மதிற்புறத்தை அடைந்ததும் குதிரைகளெழுப்பிய தூசு புகைபோல நகரெங்கும் நிறைந்தது. அவர்கள் முழக்கிக்கொண்டுவந்த வாத்தியங்களின் ஓசை பட்டணமெல்லாங் கேட்டது.

அப்போது குதிரைக் கூட்டத்தைக் கண்ட மக்கள் திருவாதவூரருடைய துயரம் நீங்கியதென்று நினைத்தார்கள். குதிரைகள் வந்ததை அறிந்த அரசன் அன்று மூலநாளாயிருந்தது கண்டு அச்சமுற்றான்; தாம் வாதவூரரைச் சிறையிலிட்டது குற்றமென்று உணர்ந்தான்; வாதவூரரை அழைத்து, தம்மை மன்னிக்குமாறு வேண்டிக்கொண்டு குதிரைகளைப் பார்க்க வர வேண்டுமென்று கூப்பிட்டான். பிறகு வேந்தன் தம்மை அலங்கரித்துக்கொண்டு யாவரும் சூழ நகரத்திலுள்ள பெரிய வெளியிலேபோய் அழகு பொருந்திய ஆசனத்தில் அமர்ந்தான்.

குதிரைவர்த்தகராய சிவபெருமான் குதிரைக் கூட்டங்களைக் கொண்டுவந்து வரிசைவரிசையாக வேந்தனுக்கு எதிரில் நிறுத்தினார். குதிரைகளின் அழகைக்கண்டு மகிழ்ந்த மன்னன் குதிரைகளை நடத்திக் காட்டவேண்டுமென்று வாதவூரருக்குச் சொன்னான். வர்த்தகனாக வந்தவர் சிவபெருமானென்று உணர்ந்த வாதவூரர் அவர் அருகே

நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாய் பெட்டாங் கொழுகு பவர்.

சென்று வணங்கித் துதித்துப் பாண்டியனுடைய விருப்பத்தை விண்ணப்பித்தார்.

அடியவர்க் கெளியவனாகிய சிவபெருமான் அசுவ சாத்திரத்திற் கூறியவாறு அக்குதிரைகளை அநேக வகையாக நடத்திக் காட்டினார்; மன்னனும் மகிழ்ச்சியடைந்து விலைமதிக்க முடியாத வஸ்திரம் ஒன்றைப் பரிசாகக் கொடுத்தான். சிவபெருமானும் முறைப்படி அதைப் பெற்றுக் கொண்டார். மறுபடியும் மன்னன் குதிரைகளுடைய இலக்ஷணங்களை அறிய விரும்பினான். ஐயன் அதற்கும் இசைந்து குதிரைகளுடைய இலக்ஷணங்களையெல்லாம் தெளிவாக விளக்கியருளினார். பின் ஆண்டவன் தம்முடைய வேதக்குதிரையைத் தவிர மற்றக் குதிரைகளின் கயிற்றை மாற்றி அரசனுடைய ஆட்கள்கையில் ஒப்புவித்துவிட்டுக் குதிரைவீரர்களோடு வந்த வழியே திரும்பிச் சென்று மறைந்தருளினார்.

பிறகு, வேந்தனுடைய வேலைக்காரர்கள் குதிரைகளைக் கொண்டுபோய்ப் புதிய கட்டுத் தறிகளிற் கட்டினார்கள். அரசன் வாதவூரருக்குப் பல வெகுமதிகள் கொடுத்துவிட்டு அரண்மனைக்குப் போனான். வாதவூரரும் பிறரும் தங்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்றார்கள். சிவபெருமான் தாம் கொண்டுவந்த குதிரைகளெல்லாம் முன்போலவே நரிகளாகவேண்டுமென்று அன்றிரவே நினைத்தருளினார். அப்போதே கட்டுத் தறிகளில் கட்டப்பட்ட பரிகளெல்லாம் நரிகளாயின. அவைகள் நரிகளானதும் கயிற்றை அறுத்துக் கொண்டு ஓடி, வீடுகளிலும் சோலைகளிலுமாக நகரமெங்கும் நிறைந்தன. அவைகள் ஊளையிடுவதைக் கேட்டுக் குதிரைவீரர்களும் நகரமாந்தர்களும் விழித்துக்கொண்டார்கள். குதிரைவீரர்கள் எழுந்து பழைய குதிரைகளும் நரிகளால் நாசமாயிருப்பதைக் கண்டு நடுங்கினார்கள். விடியுமுன் வேந்தனுக்கு இச்செய்தி எட்டியது.

அதுகேட்ட பாண்டியன் பதை பதைத்து மிகவுங் கோபங்கொண்டு திருவாதவூரரை அழைத்து வரும்படி ஏவலாளரை அனுப்பினான். இதற்குள் திருவாதவூரர் அது இறைவன் திருவிளையாடலென்று உணர்ந்து தாமே சென்று பாண்டியன் பக்கத்தில் நின்றார். சுவாமிகளைப் பார்த்ததும் அரசன் கண்கள் சிவக்க அவரை நோக்கி, "அந்தணராய்ப் பிறந்து அடாத காரியங்களைச் செய்யும் ஐய! உம்மைப்போல அரசகாரியத்தைக் கவனிப்பவர்கள் எந்த உலகத்தில் இருக்கின்றார்கள். எம்முடைய பொருளைக் கொள்ளையடித்தது மல்லாமல், மாயவித்தைகள் செய்து எமக்கு மேலும் மேலும் இடர் செய்கிறீர். ஆகலின் அந்தப் பொருளை இப்போதே வைத்துவிட்டு அப்புறம் போம்" என்றான். மணிவாசகர் என்ன செய்வதென்று தெரியாமல் பேசாமலிருந்தார். அப்போது அரசன் ஏவலாளரை நோக்கி, "இவனைத் தண்டித்துத் தனத்தை வாங்குங்கள்" என்றான். ஏவலாளர்கள் உடனே சுவாமிகளை அழைத்துக் கொண்டுபோய், வெய்யிலிலே நிறுத்தி அவர்மீது பெரிய கற்களைச் சுமத்தி வருத்தினார்கள்.

மாணிக்கவாசக சுவாமிகள் அரசனுடைய தண்டனையைப் பொறுக்கமாட்டாமல் அழுதார். அன்பர்களுடைய துன்பத்தைக் காணச் சகியாத சிவபெருமான் வாதவூரருடைய துன்பத்தை நீக்கவும் அவருடைய பெருமையை அரசனுக்கு உணர்த்தவும் திருவுளங்கொண்டு வைகையாற்றைப் பெருகச் செய்தார். வைகையாறு பெருக்கெடுத்து அழகுள்ள மதுரையை அழிக்கத் தொடங்கியபோது ஜனங்கள், "நேற்றுப் பரிகள் நரிகளாயின. இன்று பெருகாத ஆறு பெருகியது. காரணம் என்னவோ தெரியவில்லை." என்று பேசிக்கொண்டு அங்குமிங்கும் ஓடினார்கள். திருவாதவூரரைக் காத்துக் கொண்டிருந்தவர்களும் போய்விட்டபடியால் வாதவூரர் சோமசுந்தரருடைய கோயிலுக்குப் போய்ச் சிவபெருமானைத் தியானித்துக்கொண்டு தம்மை மறந்து இருந்தார்.

அரசன் ஆற்றுநீர் பெருகுவதைப் பார்த்து மனம் நொந்து, ஊரார் யாவரும் வந்து கரையை உயர்த்தவேண்டுமென்று பறை அறைவித்தான். உடனே ஜனங்கள் வந்து கரையை அடைக்கத் தொடங்கினார்கள். தனியே வசித்திருந்த வந்தி என்னுங் கிழவிமாத்திரம் தன் பங்கை அடைக்க ஆள்கிடைக்காமல் வருந்தினாள். அவ்வம்மையார் சிவபெருமானிடத்துப் பேரன்புடையவளாகலின் இப்போதும் ஆள்வேண்டுமென்று சிவபெருமானையே சிந்தித்திருந்தாள். பரமன் அந்தக் கிழவிக்குத் தாமே கூலியாளாகச் செல்ல நினைத்து அரையிலே பழந்துணியைக் கட்டிக்கொண்டும், தலையிலே கூடையையுந் தோளிலே மண்வெட்டியையுஞ் சுமந்து கொண்டும் வந்தியின் வீட்டு வழியே வந்து, "கூலி கொடுத்து என் வேலை கொள்வாருண்டோ?" என்று கூவினார். அப்

அறவினையு மான்ற பொருளும் பிறவினையும் பெண்ணேவல் செய்வார்க ணில்.

போது பிட்டு விற்கின்ற வந்தி வெளியேவந்து அவரை அழைத்து, "ஐயா! வைகைக்கரையில் என்னுடைய பங்கை அடைத்துத்தர வருகிறீரா? நான் அதற்குக் கூலியாகப் பிட்டுத் தருகிறேன்" என்றாள். பெருமான் அதற்கு இசைந்து, அப்போதே பிட்டைப் பெற்றுக்கொண்டு, அன்போடு சிறிது அமுது செய்து, மிகுதியைத் துணியில் முடிந்துகொண்டு போனார்.

ஆண்டவன் ஆற்றங்கரையை அடைந்து தாம் வந்தியின் ஆள் என்று எழுதிவைத்து விட்டுக் கரையை அடைக்கத் தொடங்கினார். அவர் மண்ணை வெட்டுவார்; கூடையிலிடுவார்; தலையில் வைத்துக் கூத்தாடுவார்; பாடுவார்; மண்ணைக்கொட்டிப் பிட்டைத் தின்பார்; பிறர்க்குங் கொடுப்பார்; இவ்வாறு சிவபெருமான் திருவிளையாடல் செய்துகொண் டிருந்தார்.

சுவாமிகள் விளையாடிக் கொண்டிருந்தபோது வேந்தனுடைய வேலைக்காரர்கள் அவரவர்கள் கட்டிய கரையைக் கண்டு வந்தார்கள் அவர்கள் வந்தியின் பங்கு அடைக்கப்படாமல் இருப்பதைப் பார்த்து, அது ஏன் அடைக்கப்படவில்லையென்று வந்தியினுடைய ஆளைக் கேட்டார்கள். அதற்குக் கூலி ஆளாய பெருமான் ஒன்றும் பேசவில்லை. உடனே அவர்கள் கட்டப்படாத கரையால் கட்டிய கரையுங் கரைந்து போகுமென்று நினைத்து அரசனுக்குத் தெரிவித்தார்கள். அப்போது மன்னன் மந்திரிமாரோடு வந்து பார்த்து வந்தியின்பங்கு ஒன்று மாத்திரம் அடைபடாதிருக்கக் கண்டு கோபங்கொண்டு கையிலிருந்த பிரம்பினால் வந்தியாளாய் வந்த சிவபெருமானுடைய முதுகிலடித்தான். சிவபெருமான் உடனே தலையிலிருந்த மண்கூடையைக் கரையிலே எறிந்து மறைந்தார். கரை மலைபோல் உயர்ந்தது. எல்லா உயிர்கட்கும் உயிராயுள்ள சிவபெருமான்மேல் பட்ட அடி, அப்போதே தேவர் மனிதர் நரகர் பறவை மிருகங்கள் முதலிய எல்லாச் சீவராசிகள் மீதும்பட்டது. அந்த அடி அதனை அடித்த அரசன் முதுகிலும், அங்கே இருந்த மற்றவர்கள் முதுகிலும் படவே அவர்கள் எல்லோரும் ஆச்சரிய மடைந்து ஒன்றுந் தோன்றாமல் மயங்கி நின்றார்கள். அப்போது பாண்டியன் சிவபெருமானே வந்தியாளாக வந்தாரென்று தெளிந்து வருத்தப்படும்போது சிவபெருமான் அசரீரியாக நின்று, "பாண்டியனே! உன்னுடைய பொருள் எம்மையே சேர்ந்தது. அதற்காக நீ வாதவூரனை வருத்தியதால் நாம் நரிகளைப் பரிகளாக்கியும் நதியைப் பெருகச் செய்தும் அவனுடைய வருத்தத்தைக் களைந்தோம் உனக்கு நல்லது செய்த அந்த உத்தமனுடைய பெருமையை, நீ இதுவரை அறியாவிட்டாலும் இப்போதாவது அறிந்துகொள்" என்றார். உடனே, அரசன் மணிவாசகப் பெருமானைப் பார்ப்பதற்காக வைகைக்கரையிலிருந்து புறப்பட்டுச் சென்றான்.

பாண்டியன் வைகைக்கரையிலிருந்து போகும்போது வாதவூரர் சிவபெருமானுடைய கோயிலில் இருக்கின்றாரென்றும், வந்தியம்மையாரை வானவர் வந்து விமானத்தில் ஏற்றிக்கொண்டு போனார்களென்றும் கேள்விப்பட்டான். அரசன் கோயிலுக்குச் சென்று சுவாமிகளைக் கண்டதும் அவருடைய திருவடிகளில் விழுந்து வணங்கி, "சுவாமி! அடியேன் செய்த அபராதங்களை மன்னித்து இந்த நாட்டை அரசாள எழுந்தருள வேண்டும்" என்று வேண்டினான். சுவாமிகள் புன்னகை செய்து "அடியேனைப் பெருந்துறைக்கு அனுப்புவதே இவ்வுலகைக் கொடுப்பதாகும்" என்றார். அரசனும் அவருடைய பாதங்களை வணங்கி, "தேவரீருடைய சித்தத்தின்படியாகுக" என்றான். உடனே மாணிக்கவாசகர் சோமசுந்தரக் கடவுளைத் துதித்து வணங்கித் தவவேடந் தாங்கித் திருப்பெருந்துறைக்கு எழுந்தருளினார்.

வாதவூரர் வழியிலுள்ள தலங்களை வணங்கிக்கொண்டே சென்று திருப்பெருந்துறையைச் சேர்ந்தார். தம்மை ஆண்டு அருளிய பரமகுருவைப்பார்க்க விரும்பிப் பல இனிய பாடல்களை மனம் உருகிப் பாடினார். ஆண்டவனும் அந்தக் கோலத்தை அவருக்குக் காட்டியருளித் தம்முடைய திருவடியாகிய செல்வத்தைச் சிதம்பரத்திலே கொடுப்பதாகத் திருவாய் மலர்ந்து மறைந்தார். உடனே சுவாமிகள் கடவுள் மறைந்ததற்காக வருந்தி, பிறகு தெளிந்து,

"தேவர்கோ வறியாத தேவ தேவன்
 செழும் பொழில்கள் பயந்து காத்தழிக்கு மற்றை
மூவர்கோனாய் நின்ற முதல்வன் மூர்த்தி
 மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோ னென்னையும் வந்தாண்டு கொண்டான்
 யாமார்க்குங் குடியல்லோம் யாதுமஞ்சோம்
மேவினோ மவனடியா ரடியாரோடு
மேன்மேலுங் குடைந்தாடி யாடுவோமே"

எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும் பெண்சேர்ந்தாம் பேதைமை யில்.

என்பதுபோன்ற பல பாடல்களைப் பாடி ஆடி, அடியவரோடு சிலநாள் அமர்ந்திருந்தார்

பிறகு சுவாமிகள் பெருந்துறையிலிருந்து பக்கத்திலுள்ள சிவாலயங்களை வணங்கிவந்தார். அவர் எங்கே போனாலும் தம்மை அடிமை கொண்ட ஆசிரியகோலத்தைக் காணாமல் திருத்தியடைவதில்லை. சுவாமிகள் திருவுத்தரகோச மங்கைக்குச் சென்றபோது அங்கே தம்முடைய குருமூர்த்தத்தைக் காணக்கூடாமல் பாடல்களைப் பாடிப் புலம்பினார். உடனே பரமன் தம் பழைய திருவுருவைக் காட்டச் சுவாமிகள் தரிசித்து மகிழ்ந்து அவ்விடத்திலேயே சில நாளிருந்தார். சுவாமிகள் அங்கிருந்தும் புறப்பட்டுத் திருவிடைமருதூர், திருவாரூர், சீகாழி முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு திருவண்ணாமலையை அடைந்தார்.

சுவாமிகள் அண்ணாமலையிலே தமது குருநாதரைத் தரிசித்து விட்டுக் காஞ்சீபுரத்திற்குச் சென்று கழுக்குன்றத்தை யடைந்தார். அங்கே, அவர் சுவாமி தெரிசனஞ் செய்து,

"பிட்டு நேர்பட மண்சுமந்த
பெருந்துறைப் பெரும் பித்தனே
சட்ட நேர்பட வந்திலாத
சழக்கனேனுனைச் சார்ந்திலேன்
சிட்டனே சிவலோகனே
சிறு நாயினுங் கடையாயவெங்
கட்டனேனையு மாட்கொள்வான்வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே"

என்பது முதலாய பாடல்களைத் திருவாய் மலர்ந்து சிலநாளிருந்த பிறகு கயிலையை யொத்த தில்லையை யெய்தினார். சுவாமிகள் சிதம்பரத்திலே வீதிகள்தோறும் வீழ்ந்து வீழ்ந்து வணங்கினார். கோயிலுக்குள்ளே சென்று பொன்னம்பலத்திலுள்ள சபாநாதனைத் தரிசித்து அனலிடைப் பட்ட வெண்ணெயைப்போல உருகினார்; அளவிறந்த பாடல்களைப் பாடித் துதித்தார். ஒரு செயலு மில்லாமல் அசைவற்ற சித்திரத்தைப் போல அமர்ந்தார். பிறகு சுவாமிகள் சிவபெருமானுடைய திருவருளினாலே தெளிந்து பக்கத்திலுள்ள சோலையிலே தங்கியிருந்தார். வாதவூரர் அத்தோட்டத்திலே தும்பி, குயில், கிளி முதலியவைகளைப் பார்த்துத் தம்முடைய மணிவாசகத்தைச் சொல்லிக்கொண்டும் நாள்தோறும் நடேசனைத் தரிசித்துக்கொண்டும் இருந்தார்.

அப்போது, இலங்கையென்று சொல்லப்படுகிற ஈழநாட்டிலே ஒரு தவசி யிருந்தார். அவர் இருக்கும்போதும் எழும்போதும் உண்ணும் போதும் உறங்கும்போதும், "பொன்னம்பலம் வாழ்க" என்று சொல்லிக்கொண்டிருந்தார். அந்த நாட்டிலுள்ள புத்தர்கள் அதைக்கேட்டுத் தங்கள் அரசனுக்கு அறிவித்தார்கள். அரசன் தன்னுடைய சபைக்கு அத்தவசியை அழைத்தான். அவர் சபைக்கு வந்தபோதும் அரசனுந் திடுக்கிட 'பொன்னம்பலம் வாழ்க' என்று சொல்லிக் கொண்டே அவன் பக்கத்தில் உட்கார்ந்தார். அரசன் தவசியைப் பார்த்துப் 'பொன்னம்பலம் வாழ்க" என்று சொல்லுவதேன்?" என்றான். அதற்கு அப்பெரியார் "பொன்னம்பலம்" சோழ நாட்டிலுள்ளது; அதன் மற்றொரு பெயர் சிதம்பரம்; அங்கே உருவில்லாத கடவுள் உருக்கொண்டு ஆடி எல்லா உயிர்களையும் இயங்கும்படிச் செய்கின்றார். அப்பதியின் பெருமையும் அங்குள்ள தீர்த்தத்தின் மகிமையும் அளவிடற்கரியதாகும்" என்று சொன்னார்.

அப்போது அங்கிருந்த புத்தகுரு "புத்தனைத் தவிர வேறு தெய்வமுண்டோ? யான் தில்லைக்குச் சென்று புத்தனைத் தவிர வேறு தெய்வமில்லையென்று சாதித்து அந்தக் கோயிலையும் புத்தன் கோயிலாக்குவேன்" என்று சொல்லிப் புறப்பட்டான். அரசனும் தன்னுடைய ஊமைப் பெண்ணை அழைத்துக்கொண்டு புத்தர்களோடு தில்லையை அடைந்தான். தில்லைச் சைவர்கள் சோழ மன்னனுக்கு அச்செய்தியை அறிவித்து, வாதத்திற்கு ஒருநாளைக் குறிப்பிட்டு யாவரும் வரவேண்டுமென்று ஓலையனுப்பினார்கள். குறித்த நாளைக்கு முன்னாள் இரவு தில்லை அந்தணர்கள் நடராஜப் பெருமானை நினைத்து நித்திரை செய்தார்கள். சிவபெருமான் விடியுமுன்னே அவர்கள் கனவில் தோன்றி "வாதவூரரை அழைத்து வாதஞ் செய்யச்சொல்லுங்கள்" என்று சொல்லிவிட்டு மறைந்தருளினார். மறுநாள் அந்தணர்கள் மாணிக்கவாசகரிடஞ் சென்று நடேசப்பெருமான் கூறியதைக் கூறி அழைத்தார்கள். சுவாமிகளும் அதற்கு உடன்பட்டு வந்து சபையிலே அமர்ந்தார். சபையிலே புத்த முனிவர் கடவுளைப்பற்றி ஒன்றுஞ் சொல்லாமல் மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்று மாத்திரம் சொன்னார். மணிவாசகர் பாவ புண்ணியமறிந்து பயன் தருங் கடவுள் இல்லையானால் நன்மை செய்தும் பய

னில்லை என்று கூறி அவரை மறுத்தார். மறுபடியும் புத்த முனிவர் திருநீறு உருத்திராக்ஷம் முதலிய பொருள்களின் அவசியத்தை அறிய விரும்பினர். அவற்றிற்குச் சுவாமிகள் தெளிவாகப் பதில் கூறியதைக் கேட்ட புத்த முனிவர் ஒன்றுந்தோன்ருது விழித்து ஊமையைப்போலிருந்தார்.

அப்போது இலங்கை மன்னன் எழுந்து மணிவாசகரை நோக்கி, "சுவாமி! பேசுகின்றவரைப் பேசாமலிருக்கச் செய்தீர்; பேசாமலிருக்கின்ற என்னுடைய பெண்ணைப் பேசவைத்தால் நாங்கள் சைவசமயப் பெருமையைக் கண் கூடாகக் கண்டு தங்கள் கடவுளுக்கு அடியவராவோம்" என்று சொல்லி அப்பெண்ணைக் கொண்டுவந்து சபையில் நிறுத்தினன். சுவாமிகள் சிவபெருமானைச் சிந்தித்து, அப்பெண்ணைப் பார்த்து, "பெண்ணே! இதோ இருக்கின்ற இப்புத்த முனிவர் சிவபெருமானைப்பற்றிக் கேட்ட கேள்விகளுக்கு நீயே பதில் கூறுவாயாக" என்று சொல்லிக் கேள்விகளைக் கேட்டார். அந்தப் பெண்ணும் அப்படியே விடை கூறினள். அந்த அற்புத நிகழ்ச்சியைச் சுவாமிகள்,

" பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதுந் திருவாயான் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங்கொண்டென்னை
ஈசனவ னெவ்வுயிர்க்கும் இயல்பானன் சாழலோ "

என்று தொடங்கும் திருச்சாழல் பாடல்களிலே கேள்வியை முதல் இரண்டடிகளிலும், பதிலைப் பின் இரண்டடிகளிலும் அமைத்துப் பாடியருளினர். பின்பு புத்தர்களெல்லாம் அச்சபையிலேயே திருநீறுபூசி உருத்திராக்ஷம் தரித்துச் சைவரானர்கள். மற்றவர்களெல்லாம் மாணிக்கவாசகரை வணங்கி விடைப்பெற்றுப் போனர்கள்.

பிறகு மாணிக்கவாசகர் தம்மிடத்தே வந்தவர்கட்கு அருள் உபதேசங்களைச் செய்துகொண்டும் தமக்குச் சிவபெருமான் அருள் செய்ததைப் பல பாடல்களால் விளக்கிக்கொண்டும் சிதம்பரத்திலேயே இருந்தார். ஒருநாள் திருவாதவூரருடைய மணிவாசகத்தை விருப்பிய நடேசப் பெருமான் ஓர் அந்தணராக வந்து திருவாசகத்தை எழுதிக்கொண்டு மறைந்தருளினர். வந்தவர் சிவபெருமானென்று அறிந்த சுவாமிகள் ஆனந்தக் கண்ணீர்சொரிய ஆண்டவனை வணங்கித் தம்முடைய வாசகங்களை எழுதிக்கொண்டு போன காரணத்தை யறியாது திகைத்து இருந்தார். சுவாமிகள் பெருமையை உலகத்தார்க்கு அறிவிப்பதற்காகச் சிவபெருமான் தாம் எழுதிய ஏடுகளைக் கோயில் வாயிற்படியிலே வைத்தான். மாணிக்கவாசகருடைய திருவாசகமுள்ள ஏடுகளைக்கண்ட அந்தணர்கள், அவற்றை எடுத்துக்கொண்டு வாதவூரரிடத்திற்குச் சென்ருர்கள். பெருமான் ஏடுகள் வந்தவிதத்தைக் கேட்டுவிட்டுத் தாம் சொல்ல இறைவன் எழுதிய விதத்தையும் அவர்கட்குச் சொல்லியருளினர். பின்னர், அந்தணர்கள் திருவாசகத்திற்குப் பொருள் சொல்ல வேண்டுமென்று சுவாமிகளைக் கேட்டார்கள். அவர், உடனே, அவர்களை யழைத்துக்கொண்டு பொன்னம்பலத்திற்கு எதிரே போய் அங்கு எழுந்தருளியுள்ள நடராஜப்பெருமானைச் சுட்டிக் காட்டி "இப்பாடல்களுக்குப் பொருள் இவர் தாம்" என்று திருவாய் மலர்ந்து அச்சபையிலே மறைந்தருளினர். அது கண்ட அந்தணர்கள் மகிழ்ந்து, மனம் உருகிக் கண்ணீர்பொழிந்து, நடராஜப்பெருமானைப் பலமுறையும் தொழுது, துதித்துநின்றுர்கள்.

மாணிக்கவாசக சுவாமிகள்

திருப்பெருந்துறையி லருளிய

திருவெண்பா

முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்னின்றான்
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன்—தென்னன்
பெருந்துறையின் மேய பெருங்கருணை யாளன்
வருந்துயரந் தீர்க்கு மருந்து.

யாவர்க்கு மேலா மளவிலாச் சீருடையான்
யாவர்க்குங் கீழாம் அடியேனை—யாவரும்
பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்க்கென்
னெம்பெருமான்
மற்றறியேன் செய்யும் வகை.

மூவரு முப்பத்து மூவரு மற்றொழிந்த
தேவருங் காணுச் சிவபெருமான்—மாவேறி
வையகத்தே வந்திழிந்த வார்கழல்கள் வந்திக்க
மெய்யகத்தேம் இன்ப மிகு.

இரஞ்சிதம்

[ஸ்ரீமான் ஆ. இராமசாமி முதலியார், பி. ஏ.]

(189 - பக்கத் தொடர்ச்சி.)

"தற்சமயம் உங்களுக்கு வேண்டியது எவ்வளவு ரூபாய்?" என்று அம்புஜம் கேட்டாள்.

இரத் :—கண்மணி! உன் விருப்பம்போலவே செய்யலாம். ஆனால், இப்பொழுது கொடுக்க வேண்டிய தொகை அதிகமானதினாலும், அப்பூமி அயலூரிலிருப்பதினாலும், அதிலிருந்து சரியான ஊதியம் வருகிறதில்லையாதலினாலும், தற்சமயம் செலவிற்குங் கொஞ்சம் பணம் வேண்டியிருப்பதினாலும் அந்நிலத்தை விற்றுவிடுவது சிறந்ததென்றே எனக்குத் தோன்றுகிறது. என்ன பிரதர்! தாம் என்ன சொல்லுகின்றீர்? என்று கேட்டான்.

கோபா.—தம்முடைய இஷ்டமெதுவோ அதைச் செய்யத் தயாராயிருக்கிறேன் என்று சொன்னான்.

இரத் :—அம்புஜம்! உன்னுடைய யோசனை என்ன? என்று கேட்டான்.

அம்பு :—என்னுடைய கருத்தைத்தான் முன்னமேயே சொல்லிவிட்டேனே. பின் தங்கள் இஷ்டம்போற் செய்யலாம் என்றாள்.

இரத் :—பிரதர்! தாம் அதை விற்பதற்குரிய வழியைப் பாரும். அத்துடன் நாடகத்தின் விஷயத்தையும் கவனிக்கவும் என்று சொல்லிக் கோபால பிள்ளையை அனுப்பினான்.

விடை பெற்றுச் சென்ற கோபாலபிள்ளை மதனகோபனிடம் சில சங்கதிகளைப்பற்றி ஆலோசனை செய்துகொண்டு திண்டுக்கல்லுக்குப் போய் நிலத்தைப் பன்னீராயிரம் ரூபாய்க்கு விற்பதென்று ஒருவரிடம் ஒப்பந்தம் பேசிவிட்டுத் திரும்பிவந்து பத்திரமெழுதுவித்து, அங்கேயே அதிகமான கட்டணங்கட்டி ரிஜிஸ்டர் செய்துகொண்டு மறுபடியும் திண்டுக்கல்லுக்குச் சென்று பத்திரத்தைக் கொடுத்து பணத்தைப் பெற்றுக்கொண்டு கடன்காரனுக்குக் கொடுக்கவேண்டியதைக் கொடுத்துவிட்டு இரண்டாயிரம் ரூபாயுடன் மதுரைக்குத் திரும்பிவந்தான். பிறகு நல்ல ஆக்டர்களாக இருவரைத் தந்தி கொடுத்து வரவழைத்து மொத்தக் குத்தகையாக மூன்று ஆட்டங்களை மூவாயிரம் ரூபாய்க்குப் பேசி முடித்து ஆட்டத்தைச் சரிவர நடத்தவே, எல்லாச் செலவும் போக இரண்டாயிரம் ரூபாய் இலாபம் நின்றது. இதனால் உற்சாகங்கொண்ட இரத்தினம் மறு ஆட்டத்தையும் குத்தகைக்கு எடுக்குமாறு தன் நண்பனுக்குச் சொல்ல அவனுமவ்வாறே செய்ய அதிலும் சொற்பலாபம் கிடைத்தது.

அதற்கடுத்த நாள் இரத்தினமும் அம்புஜமும் இதைப்பற்றி வார்த்தையாடிக் கொண்டிருக்கும் பொழுது கோபால பிள்ளையுமங்கு வந்தான். அச்சமயம் அக்கணிகை, "பிரபு! எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. அது தமக்குச் சரியென்று பட்டால் அங்கீகரித்துக்கொள்ளுங்கள். இல்லையெனில் தள்ளிவிடலாம். நாடகம் நடிப்பதிற் கைதேர்ந்த சிலரைச் சேர்த்துக்கொண்டு நாடக சாமான்களை விலைக்கு வாங்கி நாமே தனியாக ஒரு கம்பெனி ஏற்படுத்திச் சொந்தமாக நடத்தினால் நல்ல வரும்படி கிடைக்குமென்று எனக்குத் தோன்றுகிறது" எனக் கூறினாள்.

இரத் :—பிரியே, உன் யோசனை நலத்தைத்தருவதாக விருக்கிறதாதலின் அவ்வாறேசெய்யலாம். ஆனால் இதற்குக் கொஞ்சம் சிரம மெடுத்துக் கொண்டு வேலை செய்யவேண்டும். தவிர ஆட்களைச் சேகரிப்பதும் சுலபமான காரியமன்று. இதற்குத் தம்முடைய சகாயம் பெரிதும் வேண்டுமென்று கோபால பிள்ளையைப் பார்த்துச் சொன்னான்.

கோபா :—என்ன பிரதர்! அவ்வாறு சந்தேகமாகவும் வேறுபடுத்தியுங் கூறுகின்றீர். எக்காரியத்தையுஞ் சந்தோஷமாகச் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறேன். நிற்க; தனிக் கம்பெனி வைத்து நடத்துவதென்றால் அநேக விஷயங்களைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. அவைகளுக்குத் தாம் சம்மதப்படுவீரோ மாட்டீரோ; என்று சொன்னான்.

இரத் :—இதனால் எக்காரியம் இடையூறுபடினுஞ் சரியே. என் கண்மணியின் எண்ணம்போற் செய்யவேண்டுமென்பது என் கருத்து. ஆதலின் இது நடைபெறுவதற்காக வேண்டியவற்றைச் சொல்லுவீராக என்றுரைத்தான்.

கோபா :—'முயற்சி திருவினையாக்கும்' என்னும் மூதுரைக்கேற்ப எக்காரியத்தையும் முழு நோக்கத்துடன் செய்தால் அது கை கூடிவருமென்பது நிச்சயம். ஒருகாரியத்தைக் கையாண்டு வரும்பொழுது மற்றொன்றில் நுழைந்தால் இரண்டுங் கேடுறுமென்பது திண்ணம். ஆகவே, இப்பொழுது தம் விருப்பம்போல் சொந்தக் கம்பெனி வைத்து நடத்தவேண்டுமெனின் முதலா

வது மளிகையை மூடவேண்டும். இரண்டாவதாகச் சாமான்கள் வாங்குவதற்கும், ஆட்களைச் சேர்ப்பதற்குங் குறைந்தது ஐயாயிரம் ரூபாயாவது வேண்டிவரும். மூன்றாவதாகத் தாம் இந்நகரை விட்டு வெளிச் செல்ல வேண்டியிருக்கும் என்று சொன்னான்.

அம்பு:—ஐயா! தாம் கூறினவற்றில் முன்னதும் மூன்றாவதும் எனக்கு விளங்கவில்லை. அதை விவரித்துக் காரணத்துடன் சொல்லவும் என்று கேட்டாள்.

கோபா:—அம்மா! தாம் பெண்ணாதலின் இவ்வாறு கேட்டலியல்பே யாகும். நானுரைத்த மூன்று விஷயங்களிலிரண்டு ஒன்றற்கொன்று சம்பந்தப்பட்டதால் இரண்டு மெவ்வாறவசியமென்பதைத் தமக்குத் தெரிவிக்கிறேன். சிறிது நாட்களாக வியாபாரஞ் செவ்வனே நடந்தேறி வருகிறதில்லையென்பதும் கடன்காரர்களின் நிர்ப்பந்தம் பொறுக்கலாற்றாமற் சரக்குகளைக் குறைந்த விலைக்கு விற்றுவிட்ட விஷயமும் தமக்குத் தெரியுமென்று நினைக்கிறேன். நமது வர்த்தக மளிகை முன்னிருந்த நிலைமைக்கு வருவதெனின் வெளியூர்ச் சரக்குகளைக் கொண்டு வரவேண்டும். இதன்பொருட்டு ஒருவர் சென்றால் அன்னவர் அனுப்புஞ் சரக்குகளைக்கவனித்து வைப்பதற்கும் விற்பதற்கும் இங்கொருவரிருக்க வேண்டியது அவசியம். இவைகள் இரண்டையும் நாமே பார்க்க வேண்டி யிருக்கிறதேயன்றி வேலைக்காரரிடம் நம்பிவிடுவதற்கில்லை நம்முடைய மளிகைக்கு அடுத்தாற்போல் ஒருவர்,நான்முன் தெரிவித்துள்ள பிரகாரம், புதிய மளிகை யொன்றை வைத்து வெளிநாட்டுச் சரக்குகளைப் பிடித்துக் குறைந்த விலைக்கு விற்றுவருவதே நம் வர்த்தகம் முடக்கமானதற்குக் காரணமென்பதும் தமக்குத் தெரியும். ஆகவே நம் வர்த்தகம் நிலைபெற்று நிற்க வேண்டுமானால் நானிப்பொழுது சொன்னவாறு செய்யவேண்டும். இதுநிற்க. நாடகக்கம்பெனியை சொந்தமாக நடத்துவதற்கு வெளியூர் சென்று தக்க ஆசாமிகளைக் கண்டழைத்து வரவேண்டும். அவ்வாறு கூட்டிவந்தபின் இவ்வூரிலேயே ஆட்டம் நடத்திச் சரிவர நடைபெறாவிடில் வெளியூர் செல்ல வேண்டிவரும். அப்பொழுது வியாபாரத்தைக் கவனிக்க இயலாததாகும். ஏககாலத்தில் இரண்டையும் நடத்தினால் ஒன்றேனும் சரியாக நடந்தேறாதென்பதை நான் மறுபடியுஞ் சொல்ல வேண்டியதில்லை. இவைகளையெல்லாங் கருத்தில் வைத்துத்தான் அவ்விரண்டு விஷயங்களையுங் கூறினேனென்பது தங்களுக்கிப்பொழுது விளங்கியிருக்குமென்று நினைக்கிறேன் என வுரைத்தான்.

அம்பு:—என்னமோ தாம் சொன்ன காரணங்கள் சரியென்று என் புத்திக்குப் புலப்படவில்லை. நாடகத்திற்கு வேண்டின ஆட்களைப் பார்ப்பதற்கு வெளியூர் செல்லும்பொழுது அத்துடன் வியாபாரச் சரக்குகளையும் ஏன் சேகரிக்கமுடியா தென்பது எனக்கு விளங்கவில்லை என்று சொன்னாள்.

இரத்:—அம்புஜம்! அவர் சொல்வது முற்றும் பொருந்தும். ஒன்றற்கொன்று சம்பந்தமில்லா இரண்டு வியாபாரங்கட்கும், வேண்டின சரக்குகள் ஓரிடத்திலேயே கிடைத்த லியலாததேயாம். ஆதலின் இவ்விரண்டில் ஒன்றைச்செய்யக் கருதவேண்டுமே தவிர, இரண்டையும் நடத்த விரும்புவது இருவழியிலும் நஷ்டத்தை யுண்டு பண்ணும். எனக்கு மிப்பொழுது வியாபாரத்திற் சற்றே அருவருப் பேற்பட்டிருக்கிறது. அவ்வழியில் இனிமேல் ஊதியங் கிட்டுமென்று எனக்குப் புலப்படவில்லை. ஆதலின் புதியதொரு வியாபாரத்தை யாரம்பித்தல் சிறந்ததென்று எனக்குத் தோன்றுகிறது என்றான்.

அம்பு:—சரி. தம் இஷ்டம்போற் செய்யலாம் என்றாள்.

இரத்:—என்ன பிரதர்! இப்பொழுது மளிகையில் எவ்வளவு சரக்கிருக்கிறது என்று கேட்டான்.

கோபா:—அதிகமாகவில்லை. சுமார் ஆயிரம் ரூபாய்க்கிருக்குமென்று நினைக்கிறேன் என வுரைத்தான்.

இரத்:—பத்தாயிரம் ரூபாயுக்குக் குறைவாக எப்பொழுது மிருந்ததில்லை. இதுவே வியாபாரம் இனிமேற் செவ்வனே நடவாதென்பதற்குத் தகுந்த அறிகுறியாகும். இப்பொழுதிருக்கும் சரக்குகளை விற்றபின் மளிகையை மூடிவிடும். கடன் ஒன்று மிராதென நினைக்கிறேன் என்றான்.

கோபா:—நாம் கொடுக்க வேண்டியதும் நமக்கு வரவேண்டியதும் ஒன்றுமில்லை யென்றான்.

இரத்:—சரி; நம்முடைய நிலத்தின் மீது ஐயாயிரம் ரூபாய் கடனாக வாங்கி, ஆகவேண்டிய காரியங்களைச் செய்யுங்கள் என்று சொன்னான்.

பொருட்பொருளார் புன்னலந் தோயா ரருட்பொருள் ளாயு மறிவி னவர்.

கோபாலபிள்ளை அதற்குச் சம்மதித்து விடை பெற்றுக்கொண்டு சென்று மதனகோபனிடஞ் சங்கதியை தெரிவித்துவிட்டு, மளிகைக்குச் சென்று இருந்த சரக்குகளையெல்லாம் விலை பேசிக்கொடுத்ததில் இரண்டாயிரம் ரூபாய் கிடைத்தது. பிறகு, மாணிக்கவாசகம் பிள்ளை யால் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கப்பட்டதும், இருபதினாயிரம் ரூபாய் விலை பெறும்படியானது மான பூமியைக் கோபாலபிள்ளை இரத்தினத்தை ஐயாயிரம் ரூபாய்க்கு அடமானம் வைக்கும் படி செய்து, ரூபாயை வாங்கிக்கொண்டு நாடகத் திற்கு வேண்டிய உயர்தர ஆக்டர்களைச் சேகரிக் கச் சென்னைக்குச் செல்வதாகத் தன் நண்பனிட முரைத்து விடைபெற்றுக்கொண்டு மதனகோப னிடம் வந்து சங்கதியைத் தெரிவித்தான்.

மதனகோபன்:—ஆகவே காரியமெல்லாம் நம்மனம் போலவே நடந்து வருகின்றன. இனிச் செய்யவேண்டிய காரியங்களிரண்டிருக்கின்றன. இரத்தினத்தை இவ்வூரினின்று மகற்றிக் குறைந் தது இரண்டுமாதங்கட்கு இங்குவாராமலிருக்கும் படிச் செய்வதொன்று. இப்பொழுது அடகு வைத்திருக்கும் நிலத்தைக் கூடிய சீக்கிரத்தில் விற்றுவிடவேண்டியது மற்றொன்று என வுரைத்தான்.

கோபா:—தாம்இவ்விஷயத்திற் கவலைகொள்ள வேண்டியதில்லை. நான் கைதொட்ட காரியம் நிறைவேறாமற் போனது கிடையாது என் வலை யிற் சிக்கின ஆள் தப்பிப் பிழைப்பதுமில்லை என்றான்.

மதன:—அதை யுணர்ந்தன்றோ என் அந்த ரங்க இரகசியங்களையெல்லாம் உமக்குவெளியிட் டிருக்கிறேன். அந்த நிலத்தை விற்றுவிட்டால் இரத்தினத்திற்கு எஞ்சி நிற்பது வீடொன்றே யாகும். அப்பொழுது அவன் நானிருக்கும் நிலை மைக்கு வந்தவனாவான். எங்களிருவருக்கும் யாதொரு வித்தியாசமுமிராது. இரஞ்சிதத்திற் கும் அவன்மீது வெறுப்புண்டாகும். இரத்தி னம் இவ்வூரில் அச்சமயம் இருக்கப் போவதில்லை யாதலின், எவ்விதமேனும் என்னை அவள் மணஞ் செய்துகொள்ளும்படியான வழியைத் தேட லாம். அவளும் அநேகமாக அதற்கிணங்குவாள் என்று சொன்னான்.

கோபா:—தம் மனோபீஷ்டம் பூர்த்தியாவ தற்கு என்னாலியன்றமட்டும் எதை வேண்டு மெனினுஞ் செய்யக் காத்துக் கொண்டி ருக்கிறேன். ஆனால் எதையும் ஆத்திரப்படா மற் செய்யவேண்டும். தாங்கள் இவ்விஷயத்திற் கொஞ்சம் ஜாக்கிரதையாக விருக்கவேண்டும். தாம் முன்பொருமுறை என்னிடம் அப்பெண் ணைப்பற்றிச் சொன்னதிலிருந்து, அவள் இரத் தினத்தினிடம் காதற் கொண்டிருக்கிறாளென் பதையும், சற்றே புத்தி நுட்பமுடையவளென்ப தையும், வைராக்கியத்தைக் கொண்டவளென்ப தையும்அறிந்துகொண்டேன். இரத்தினமிருக்கு மிடம் அவளுக்குத் தெரிந்திருந்தால் எவ்வித மேனும் அவனைச் சந்தித்து அவனை நல்வழித் திருப்பி விட்டிருப்பாள். ஆனால் நமது நற்காலத் திற் கேற்ப அவளுக்கு அவனிருக்குமிடந் தெரிய வில்லை போலும். அல்லது தெரிந்தும் தக்க சம யத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாளோ என்னமோ அதையும் உறுதியாகச் சொல்வதற் கில்லை என்றான்.

மதன:—அதை யுத்தேசித்துத்தானே அவன் வீட்டிற்கு வராமலும், வெளியிலெங்குஞ் செல் லாமலும் அம்புஜத்தின் வீட்டிலேயே இருக்கவு மான ஏற்பாட்டைச் செய்யும்படி தம்மிடஞ் சொன்னேன். ஆம். அவளுக்கு இவ்விஷயமொரு சமயம் தெரிந்திருக்கலாமென்ற சந்தேகம் தமக்கு எப்படியுண்டாயிற்று? என்று கேட்டான்.

கோபா:—ஏதேனுங் காரணத்தைக்கொண்டு நான் அவ்வாறு சொல்லவில்லை. இக்காலத்திய பெண்களின் சாமர்த்தியம் ஆடவர்களுக்குங் கூடக் கிடையாது. அவர்கள் எக்காரியத்தையுஞ் செய்யவல்லார். அதிலும் இரஞ்சிதம் போன்ற கல்வியறிவுடைய பெண்கள் எத்தகைய நற்கரு மத்தையு மெதிரிகட்குத் தெரியாவண்ணம் தாம் எண்ணினதுபோற் செய்துமுடிப்பார்கள். இங்கு நடக்கும் ஒவ்வொரு சங்கதியும், நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் அவளுக் கெட்டுத லிய லும் என்று சொன்னான்.

மதன:—அவ்வாறு அவள் அறிந்துகொள் ளுவதற்கு மார்க்கமொன்றையுங் காணோம். நம் முடைய வேலையாள் சுப்பன்தான் அவளுடைய வீட்டிற்குப் போகக்கூடியவன். அவனோ வயதே றின கிழவன். காதுஞ் சரியாகக் கேட்காது. தெருத்திண்ணையை விட்டு, கூப்பிட்டா லொழிய உள்ளே அவன் வருவதில்லை. மற்றபடி, நமக்கு துரோகஞ் செய்யக் கூடியவர்கள் நம்மவர்களில் எவருமில்லை: ஆகவே இங்கு நடை பெறுவனவற்றில் அவளுக்கொன்றுந் தெரியா

தென்ற முழு நம்பிக்கையுடன் நாமிருக்கலா மென்று நினைக்கின்றேன் எனக் கூறினன்.

கோபா:—இவ்வாறு நம்பி மோசமடைந்தோர் பலருளர். நாற்புறமுங் கருங்கற் சுவர்களாற் கட்டுண்ட ஓரிடத்தில் நின்று வார்த்தை யாடினுலுங் கூடப் 'பகலிற் பக்கம்பார்த்துப் பேசு, இரவில் அதேனும் பேசாதே' என்ற உலக வழக்கச் சொல்லை யனுசரிக்க வேண்டும். 'சுவர்களுக்குங் காதுண்டு' என்னும் வாக்கியத்தை நம்போன்றார் நம்பி நடத்தல் அத்தியாவசியம். நம் சுப்பனே தூது நடந்தாலும் நடக்கக்கூடும் என்று சொன்னன்.

மதன:—அவன் அப்பேர்ப்பட்டவன் அல்ல. அவன் விஷயத்தில் நாம் சந்தேகிக்க வேண்டியதில்லை. வேண்டுமெனின், இனிமேல் அவன் அங்குச் செல்லாதிருக்கும்படி திட்டஞ்செய்கிறேன் என்றான்.

கோபா:—நான் தங்களுக்கு அதிகஞ் சொல்ல வேண்டியதில்லை. காலத்திற்கேற்ப நடப்பது தமக்குத் தெரியாததல்லவே என்றான்.

மதன:—இது இவ்வாருக, தாம் சென்னைக்கு எப்பொழுது போவதாக வுத்தேசித்திருக்கிறீர்? என்று கேட்டான்.

கோபா:—சென்னைக்கு எதற்கு? ஓகோ! மறந்துவிட்டேன் (சிரித்துக்கொண்டு) நம்மூரி லில்லாத ஆட்களா சென்னையில். முன்னடியே ஆட்களை நியமித்துவிட்டேன். இப்பொழுது நம்மூரில் நடக்கும் கம்பெனிகளிலிருந்தே சில ஆட்களைத் தயார்செய்துகொண்டேன். 'இராஜபார்ட்'டுக்கு மாத்திரம் ஓராள் வேண்டி யிருக்கிறது. அதற்கும் இன்றொரு கடிதம் எழுதிவிட்டேன். படுதாக்கள், சீன்கள் முதலியன இங்கேயே இருக்கின்றன. அவைகளை மூன்றுமாத வாடகைக்குப் பேசி முடிக்கலாமென்ற உத்தேசம். இவைகளெல்லாவற்றிற்கும் ஆயிரம் ரூபாயுக்கு மேற் செலவாகாது. நாலாயிரம் ரூபாய் நம்முடையதென்று முன்னமேயே உறுதிசெய்துவிட்டேன். இப்பொழுது திரிச்சிராப்பள்ளிக்குச் சென்று நாடக சாலையொன்றை வாடகைக்குப் பேசி முடிக்க வேண்டும். முதலில் சீன்களை ஏற்பாடு செய்துகொண்டு, பிறகு திரிச்சிக்குச் செல்லலா மென்றிருக்கிறேன். மற்றபடி தங்களுடைய உத்தரவை எதிர்பார்க்கிறேன் என்று சொன்னன்.

மதன:—நான் சொல்ல வேண்டியதொன்றுமில்லை. நமக்கு நன்மை பயக்குமாறு காரியத்தை நடத்தவேண்டும். அதைப்பற்றி நான் தமக்குச் சொல்லவேண்டுவதுமில்லை; என்றான்.

கோபா:—சரி. எனக்கு உத்தரவுதானே; என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு வெளியிற் சென்றான்.

அங்கு ஆகவேண்டியவைகளைப் பார்த்துக்கொண்டு, அன்றிரவு மெயிலிலேறின கோபால பிள்ளை மறுநாட் காலை திரிச்சிராப்பள்ளிக்கு வந்து நாடகசாலை யொன்றை மூன்றுமாத வாடகைக்குப் பேசி முடித்துக்கொண்டு, கூடிய சீக்கிரத்தில் புதிய கம்பெனி யொன்று வருவதாக நோடீசு மூலமாய் விளம்பரஞ் செய்துவிட்டு மதுரைக்குத் திரும்பிவந்து மதனகோபனிடஞ் சங்கதியைத் தெரிவித்தான். அவனும் சந்தோஷ சாகரத்திலாழ்ந்து ஆகாயக்கோட்டை கட்ட வாரம்பித்தான்.

இதற்கடுத்த எட்டாம் நாட் பகல், சுமார் பன்னிரண்டு மணிக்கு கோபாலப் பிள்ளை அம்புஜத்தின் வீட்டிற்குச் சென்று இரத்தினத்தைப் பார்த்து க்ஷேமம் விசாரித்தபின் 'போன காரியங்களெல்லாம் செவ்வனே முடிவுபெற்றன" என்று சொன்னன்.

இரத்:—தாம் சென்னைக்குச் சென்றவர் எப்பொழுது திரும்பி வந்தீர். தங்கள் தாயார், உடன்பிறந்தோர் எல்லோரும் க்ஷேமந்தானே? என்று கேட்டான்.

கோபா:—ஈசனருளால் எல்லோரும் க்ஷேமமே. இப்பொழுதுதான் மெயிலிலிருந்து இறங்கி நேராக இங்குவருகிறேன். சரியான ஆட்களுமகப்பட்டார்கள் வேண்டுமானசாமான்களுங் கிடைத்தன. நம்ம வூரில் இப்போதைக்குக் காலியாகக் கூடிய கொட்டகைகள் ஒன்றுமில்லையாதலின், வரும்வழியில் திரிச்சியிலிறங்கி நாடகசாலை யொன்றை மூன்றுமாத வாடகைக்குப் பேசி முடிவு படுத்திக்கொண்டு, நம் கம்பனி வருவதை நோடீசு மூலமாக விளம்பரமுஞ் செய்துவிட்டு வந்தேன். இதோ பாருங்கள் என்று சொல்லிப் பத்திரிகையைக் கொடுத்தான்.

இரத்:—அபிநய அம்புஜ விலாச நாடகக் கம்பெனியார்' பேஷ்! நல்ல பெயரையே வைத்திருக்கின்றீர். ஆகவே நாமெல்லோரும் திருச்சிராப்பள்ளிக்குச் செல்ல வேண்டும். எப்பொழுது போவதென வுத்தேசித்திருக்கிறீர்? தாம் நியமித்த ஆட்களுக்கு இச்சங்கதியை தெரிவித்து விட்டீரோ? என்று கேட்டான்.

கோபா :—திரிச்சிக்கு வரும்படி அவர்களுக்கு அங்கிருந்தபடியே தந்தி கொடுத்திருக்கிறேன். இன்று புதன் கிழமை. அடுத்த சனிக்கிழமை முதலாட்டம் வைக்கலாமென் றுத்தேசிக்கிறேன். இரண்டு நாட்கள் முன்னதாகவே நான் செல்ல வேண்டியிருக்கும். தாங்கள் சனிக்கிழமை அங்கு வந்தாற் போதுமானது என்று சொன்னான்.

இரத் :—அவ்வாறே செய்வோம். தாம் இன்னு மாகாரமொன்றுஞ் செய்துக் கொள்ளவில்லை போலிருக்கிறதே. எழுந்திருங்கள். ஸ்நானஞ் செய்து சாப்பிட்டபின் மற்ற சங்கதிகளைப் பற்றிப் பேசிக்கொள்வோம் என்று சொல்லி இருவரு மெழுந்து சென்றார்கள்.

ஐந்தாம் அத்தியாயம்.

இரஞ்சிதத்தின் கடிதம்

கோபால பிள்ளை இரத்தினத்திடம் வந்து சேர்ந்தநாள் முதல், பன்முறை இரத்தினத்தைத் தனியாகச் சந்தித்துப் பேசவேண்டுமென இரஞ்சிதம் முயன்றாளெனினும் பலன்பெறவில்லை. அவனைப் பார்க்கலாமென்று எப்பொழுது சென்றாலும் அவ்வப்பொழுதெல்லாம் அவன் யாவருடனேனும் பேசிக்கொண்டிருந்ததைக் கண்டாள். இதுகாறுமில்லாமல் இப்பொழுது திடீரென்று இவனுக்கு இவ்வளவு நண்பர்களேற்பட்ட தெவ்விதமென்று யோசித்தாள். ஒருவிதமான சந்தேகம் அவளுக்குண்டாயிற்று. அங்கு வருகிறவர்கள் யாவரெனப் பார்க்க வேண்டுமென்று முயன்றாள். அதுவும் முடியவில்லை. ஒரு நாள் அவனுடைய சமயற்காரனைக் கண்டு இதைப் பற்றிக் கேட்க அவன், "அம்மா! எனக்கொன்று மதிமாகத் தெரியாது. அவர்கள் பேசிக்கொண்டதிலிருந்து, யாரோ ஒருவர் சென்னையிலிருந்து வந்திருக்கிறாரென்றும், அவரும் இவரும் வியாபாரத்தைச் சேர்ந்து கூட்டாக நடத்துகிறார்களென்றுமறிந்தேன். அவருமிங்குதான் சாப்பிடுகிறார். இதைத்தவிர வேறொன்று மெனக்குத் தெரியா"தென்றான். இரஞ்சிதத்திற்கு முன்னிருந்த சந்தேகமதிகமாயிற்று. ஒன்றுஞ்செய்யத் தோன்றாதவளாய் இதைப்பற்றி ஏதோ நினைத்தவண்ணமாய்த் தன் வீட்டு மேன்மாடியிலுட்கார்ந்துகொண்டிருந்தவள் எழுந்து தற்செயலாகச் சாளரத்தின் வழியாகத் தெருவைப் பார்த்தபொழுது இரத்தினமும் கோபால பிள்ளையும் வீட்டிற்கு வந்து கொண்டிருந்ததைக் கண்டாள். கூடவருபவன் யாவனென உற்று நோக்கினாள். இன்னவனென்று அவளுக்குத் தெரியவில்லை. இருவரும் இரத்தினத்தின் வீட்டிற்குட் சென்றுவிட்டார்கள். அவனுடைய முகக் கூறுபாட்டைக் கவனிக்க, அவன்மீது இவளுக்குக் கொஞ்சஞ் சந்தேகமுண்டாயிற்று. அவன் தனித்து ஒரு சமயம் வெளியில் வரக்கூடுமென்று நினைத்து அங்கேயே நின்றுக்கொண்டிருந்தாள். அவள் எண்ணினது போலவே கோபால பிள்ளையும் வெளிக்கிளம்பி, திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே மதனகோபனின் வீட்டில் நுழைந்தான். அவ்விடையிலேயே அங்கிருந்து புறப்பட்டமற்றொருவன் இரத்தினத்தின்வீட்டிற்குட் போனான். இவைகளை யெல்லாம் நன்கு கவனித்த இரஞ்சிதம், இரத்தினத்தைக் கெடுப்பதற்கு மதனகோபன் ஏதோ செய்கிறானென்பதை மட்டும் அறிந்துகொண்டவளாய், இதன் இரகசியத்தை எவ்வாறேனுந் தெரிந்துவிட வேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டாள்.

மதனகோபனின் வீட்டு வேலையாள் சுப்பனென்பவன், இரஞ்சிதம் சிறு குழைந்தையாயிருந்தபொழுது அவளை யெடுத்துக்கொண்டு விளையாட்டுக்காட்டுவது வழக்கம். அவளும் (குழந்தைப் பருவத்தில்) அவனைக் கண்டவுடன் அழுகையை நிறுத்திச் சிரிப்பாள். அக்காலத்தில் அவனுக்கு அவள்மீது ஏற்பட்டபற்று நீங்காமல் இப்பொழுதும் அவளைத் தினந்தோறு மொருமுறையேனும் பார்த்துப் பேசிவிட்டுச் செல்வான். நாம் மேற்குறித்துள்ள தினமும், சுப்பன் வழக்கம் போல் இரஞ்சிதத்தின் வீட்டிற்குவர, நம் கதாநாயகியும் அவனை அன்புடன் வரவேற்றுச் சந்தோஷ வார்த்தைகள் சில பேசிப் பின் தன்மனதிலிருந்த சந்தேகத்தை அவனுக்குத் தெரிவித்து இரத்தினத்தின் விஷயமாய் மதனகோபன் வீட்டில் ஏதேனும் பேச்சுநடந்தால் அதைத்தனக்குத் தெரிவிக்கும்படி அவனைக் கேட்டுக்கொண்டாள். அவனும் அவள்மீதிருந்த, அன்பின் மிகுதியால் அதற்கிசைந்து தனக்குத் தெரிந்தவரைக்கும் தன் எஜமானன் வீட்டில் நடக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் இரஞ்சிதத்திற்குத் தெரிவித்து வந்தான்.

இங்ஙனம் இரஞ்சிதம் மதனகோபனின் கெட்ட எண்ணத்தையும், இரத்தினம் அவனுடைய வலையிற்சிக்கித் தாசிவீடடைந்து தனத்தை விரயஞ்செய்வதையு முணர்ந்தாளெனினும்

அதைத் தடுத்து இரத்தினத்தை நல்வழிப்படுத்த அவளால் முடியவில்லை. இரத்தினத்தை யொரு முறை சந்தித்தால் மதனகோபனின் எண்ணத்தை வீணாக்கி விடலாமென்று கருதினாள். ஆனால் அவனை ஒருமுறையேனுஞ் சந்திக்கக்கூடவில்லை. பிறகு அவன் தாசிவீடே தஞ்சமென்று அங்கேயே நின்றுவிடவே, அவளுக்கிருந்த நம்பிக்கையழிந்ததெனினும் ஒரு நாளாவது வரமாட்டானா என்று எதிர்பார்த்திருந்தாள். ஒருசமயம் அவன் இரவில் வீட்டிற்கு வந்து மறுபடியும் அப்பொழுதே திரும்பிச் சென்றுவிட்டால் பிரயோசனமற்றதாகுமே என்ற எண்ணத்தால் மதனகோபனின் செய்கைகளை யெல்லாம் ஒரு கடிதத்தில் எழுதி அதை இரத்தினத்தின் வேலைக்காரனிடம் அளித்து தன் எஜமானன் எப்பொழுதேனும் வீட்டிற்கு வந்தால் அதை அவனிடங் கொடுக்கும்படிக் குச் சொல்லிவைத்திருந்தாள்.

முன் அத்தியாயத்திற் குறித்த பிரகாரம் மதனகோபனுக்கும் கோபால பிள்ளைக்கும் நடந்த சம்பாஷணை முழுவதையும் ஒன்று விடாமற் கேட்டுக்கொண்டிருந்த சுப்பன் அவர்கள் பேசி முடித்த வினடியே இரஞ்சிதத்தின் வீட்டிற்கு வந்து அவளைக்கண்டு நிகழ்ந்த விஷயங்களைச் சொன்னான்.

இரஞ்சிதம்:—இவருக்கு இவ்வாறு புத்தி கெடுமென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. அவரைத் தாசியில்லஞ் சேர்த்துவைத்ததுமன்றி அவருடைய ஆஸ்தியையுமன்றோ துர்வினியோகஞ் செய்யத் துணிந்துவிட்டான். அத்துடன் நிற்காமல், அவரை இவ்வூரிலிருந் தகற்றுவதற்கும் வழியைத் தேடியிருக்கிறானே. இவைகளெல்லாமெதற்கு? என்னை மணஞ்செய்துகொள்ள. பேஷ்! நன்றாகவிருக்கிறது. அவர் இவ்வூரிலில்லாமற் போய்விடில் இவனை நான் கலியாணஞ் செய்து கொள்வேனென்றா கருதியிருக்கிறான்! ஐயோ! பாபம்! கற்பின் தன்மையை அறியான் போலும். அவர் செல்லுமிடத்தையறிந்து நானுமங்கு செல்வேனென்று இவனுடைய புத்திக்குப் படவில்லை. இத்தகைய எண்ணத்தைக்கொண்டிருப்பவன் காரணமேற்பட்டுச் சந்தர்ப்பம்வாய்த்தால் அவரைக்கொல்வதற்குங்கூட அஞ்சமாட்டானே மதனகோபன். பிறர்க்கு நினைக்குங் கேடு தனக்கே என்பதையுணராமலும், கலியுகப் பலன் கைமேல் என்பதைத் தெரிந்துகொள்ளாமலும், 'அரசன் அன்று கொன்றால் தெய்வம் நின்று கொல்லும்' என்னும் மூதுரையினுண்மையைக் கருதிப் பாராமலும் உன் மனதிற்குத் தோன்றினவாறெல்லாஞ் செய்யவாரம்பித்திருக்கிறாய். இறுதியில் நம்மிருவரில் எவருக்கு வெற்றியுண்டாகுமோ பார்ப்போம் என்று சொல்லி ஏதோ யோசித்துக் கொண்டிருந்தாள்.

சுப்பன்:—அம்மா இனிமேல் வழக்கம்போல் நான் இங்குவந்து போகமுடியாதென்று நினைக்கிறேன் என்றான்.

இரஞ்:—தினந்தோறும் வராவிடினும் சமயங் கிடைத்தபொழுது இங்குவந்து போகும்படி உன்னைக் கேட்டுக்கொள்ளுகிறேன் என்று சொன்னாள்.

சுப்பன்:—அம்மா! நீ இவ்விஷயத்தில் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறாய்?

இரஞ்:—நான் என்ன செய்யப் போகிறேனென்பதை இப்பொழுது என்னாற் சொல்ல முடியவில்லை. சுப்பா! உனக்கு இதில் ஏதேனும் எஜமானத் துரோகஞ் செய்கிறோமோ வென்ற சந்தேகமுண்டோ என்று கேட்டாள்.

சுப்பன்:—அவ்விதமான சந்தேகமெனக்குண்டாகவில்லை. ஏனெனில், இதில் என் எஜமானனுக்கு உண்டாகக்கூடிய கெடுதலொன்றுமில்லை. இதனால் அவருக்கே ஒரு சமயம் நன்மையுமுண்டாகலாம். எவ்வாறெனின், அவருடைய எண்ணங் கைகூடிவாராமற் போனால் அவர் இப்பொழுது கொண்டிருக்கும் கெட்ட சகவாசத்தை விலக்கி நன்மார்க்கத்தில் திரும்புதலையனும். தவிரவும், என்னால் பிறரொருவருக்கு நன்மையுண்டாக விருப்பதால் இக்காரியத்தைச் சந்தோஷத்துடன் செய்கிறேன். ஆனால் அவர் இனிமேல் இங்கு போகக்கூடாதென்று எனக்குத்தாவிடுவாராயின் அதை மீறிநடப்பேன் என்று உறுதியாகச் சொல்வதற்கில்லை. எனினும், எஜமானனுக்குத் துரோகஞ் செய்யவேண்டுமென்னு மெண்ணம் என்னிடத்திலில்லை யாதலின், அவருடைய உத்தரவைப் பெற்றுக்கொண்டு இங்கு வந்துபோவதற்கான மார்க்கத்தைத் தேடுகிறேன் என்று சொன்னான்.

இரஞ்:—சரி. அவ்வாறேசெய், என்றுரைத்து அவனுக்கு விடைகொடுத் தனுப்பினாள். இது நிற்க.

கடந்த அத்தியாயத்திற் சொன்னவாறு கோபாலபிள்ளை இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே திரிச்சிக்குச் சென்றுவிட்டான். இரத்தின

மும் போவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டு பயணம் புறப்படுவதற்குச்சற்று முன்னதாகத் தன் வீட்டைப்பார்த்துப் போகலாமென்ற விருப்பத்துடன் தன் இல்லத்திற்கு வந்தான். அங்கு தனக்கு வேண்டிய சில சாமான்களைத் தயார் செய்துகொண்டு சமயற்காரனையழைத்தான். அவன் வரவும் "சமயலாயிற்றா?" என்று கேட்டான். "சமயல்தயாராகவிருக்கிறது. சாப்பிடவரலாம் நம் இரஞ்சிதத்தம்மாள் தங்களிடம் அளிக்கும்படிக்கு என்பாலொருகடிதங் கொடுத்திருக்கிறார்கள். இதோ இதுதான் அக்கடிதம்" என்று சமயற்காரன் சொல்லிக் கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றான்.

ஆச்சரியத்துடன் கடிதத்தை வாங்கிக்கொண்ட இரத்தினம், நாற்காலியிலமர்ந்து "இரஞ்சிதம் நமக்குக் கடிதமூலமாகத்தெரிவிக்க வேண்டிய சமாசாரமென்னவிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே கடிதத்தைப் பிரித்துப் பார்த்தான், அதிற் பின்வருமாறு வரையப்பட்டிருந்தது :—

க்ஷேமம்.

அன்பார்ந்த அத்தானவர்களுக்கு,

ஏழை இரஞ்சிதம் எழுதிக்கொண்டவிண்ணப்பம். நான் கீழே குறிப்பிடும் விஷயங்களிற் சில, தங்களுக்கு மனவருத்தத்தை யுண்டாக்கலாம். மற்றுஞ்சில ஒரு சமயம் பொய்யாகத் தோன்றலாம். இருப்பினும், அக்காரணத்தை முன்னிட்டுக் கோபமேற்கொண்டு இதைக் கிழித்தெறிந்து விடாமல் முழுவதும் படிக்கும்படி மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். அத்தான்! தங்களுடைய தற்கால நிலைமையை நினைக்கும்பொழுதெல்லாம் எனக்கு ஆற்றொணாத் துக்கமுண்டாகிறது. தாங்கள் கற்ற கல்விமுற்றும் இவ்வாற கேடுறமென்று நான் கனவிலுங் கருதவில்லை. தங்களுக்கு இவ்விதம் உலகானுபவங் குன்றி, வெளி வேஷத்தில் மயக்குற்று, எவரையும் இவ்வளவு எளிதில் நம்பிவிடுவீர் என்பதை நான் அறிந்திருப்பின், தமக்கு முன்னதாகவே எச்சரிக்கை செய்திருப்பேன். கல்வி கேள்விகளிற் சிறந்தவரும், சதா பகவத்பக்தி பூண்டவரும், நன்மார்க்கத்தைக் கைக்கொண்டு நற்கருமங்களையே செய்துவந்தவருமான தாம், துர்ச்சனர் சகவாசத்தால் துன்மார்க்கத்திலீடுபட்டுத் தாசி வீடடைந்திருப்பதற்கு நானே முக்கிய காரணமாக நின்றேனென்பதை நினைக்குந்தோறும் சொல்லொணா விசனம் எனக்கேற்படுகின்றது. கணிகையரில்லம் தாம் சேருவதற்குக் காரணம் நானெவ்வாறென்பது தங்களுக்குத் தெரியாதாதலின் அதைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன் கேளுங்கள். அத்தான்! எனதன்னை உயிருடனிருந்த பொழுது, என்னை மதனகோபனுக்கே விவாகஞ் செய்து கொடுப்பதென்று அவர்கள் உறுதிசெய்திருந்ததும், அது தெய்வ சங்கற்பத்தால் நின்று விட்டதும் தமக்குத் தெரிந்திருக்குமென்று நினைக்கிறேன். என் பெற்றோர்கள் இறந்தபின், மதனகோபன் என்னிடம் வந்து தன் வீட்டிலேயே என்னையும் பாட்டியையும் வந்து வசிக்குமாறு பன்முறை கேட்டான். நான் அதற்குச் சம்மதிக்காததால், தங்கள்பால் நான் காதற் கொண்டிருப்பதாற்றான் அவனை நான் வெறுக்கிறேனென்றும், தம்மையும் தீயவழிக்குட்படுத்திவிட்டால்அப்பொழுதுநான் அவன்பால் விருப்பங்கொள்வேனென்றும் அம்மதியிலி - அக்கசடன்-அத்தாசிக் கள்வன்-அக்குலக்கேடன் - அறிவின் குறைவால் நினைத்துத் தம்மை வஞ்சித்துக் கெடுக்க வாரம்பித்தான். என் துர்வினையின்பலனாகத் தாமும்அவனுடைய வலையிற் சிக்கியிருக்கின்றீர். அது எவ்வாறென்பதும் தாமுணரீராதலின் அதையும் தெரிவிக்கிறேன் கேளுங்கள். சென்னையிலிருந்து வந்ததாகச் சொல்லித், தம்முடன் கூட்டுவியாபாரஞ் செய்கிறவன் உண்மையிற் சென்னை வாசியன்று. அவன் தம்மிடம் வந்து சேர்ந்தபின், தங்களுடன் சிநேகம் பூண்டிருப்பவர்கள் தாம் நினைத்திருப்பதுபோற் குணவான்களும், குலஸ்தர்களும், ஒழுக்கமுடையோருமன்று. இவர்களெல்லாரும் தம்மைக் கெடுத்துத் தாசிவீடு சேர்ப்பதன் பொருட்டு மதனகோபனால் அனுப்பப்பட்ட தீயோர்களேயாம். இது நான் என் கண்கூடாகக் கண்டதோருண்மையாகும். அத்தான்! இக்கடிதத்தைப் படித்த பிறகாவது தம்முடைய தற்கால நிலைமையின் இழிவு புலப்படுமென்று நினைக்கிறேன். மேற்குறித்துள்ளவைகளிலொவ்வொன்றும் வாய்மையானதென்று மீனாம்பிகையின் பாதசாட்சியாகக் கூறுகிறேன். தாம் ஒரு சிறிதும் சந்தேகிக்கவேண்டாம். அடியாளை வரவழைத்தால் நேரில் எல்லாவற்றையுஞ் சவிஸ்தாரமாகச் சொல்லுகிறேன். வெளி வேஷத்தைக் கண்டு மோசம் போகாதீர். இப்படிக்கு,

தங்களை என்றும் மறவாத ஏழை
இரஞ்சிதம்.

வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப் பூரியர்க ளாழு மளறு.

இரத்தினம் இக்கடிதத்தை முற்றும் வாசித்தானெனினும், அவனுடைய கண்கள் மாத்திரம் அதிவிரைவாகக் கடிதத்தின்மீது சென்றனவேயன்றி, அதில் வரையப்பட்டுள்ள விஷயங்களை அவன் தெரிந்துக்கொள்ள வில்லை. ஏனெனில் அவனுடைய மனமெல்லாம் அம்புஜத்தின்மீதேயிருந்தது. தவிரவும், கடிதத்தைப்படித்து முடிக்குஞ் சமயம், மாணிக்கம் பிள்ளை அங்கு வரவே கடிதத்தை மடித்துச் சட்டைப்பையில் வைத்துக்கொண்டு“ ஐயா வாருங்கள் தங்களைப்பார்த்து அதிக நாட்களாயின. க்ஷேமந்தானே?” என்று கேட்டான்.

மாணிக்கம் பிள்ளை:—எல்லோரும் க்ஷேமமே. தங்களைப்பார்க்கவேண்டுமென்ற விருப்பம் எனக்கிருந்த தெனினும் அவகாசமில்லாததால் தாமிருக்கு மிடந்தேடி வரமுடியாமற் போயிற்று. எனினும் தினந்தோறும் கோபாலனைக்கண்டு தங்கள் க்ஷேமத்தை விசாரித்துக்கொள்வது வழக்கம். நிற்க, தாம் இன்று திரிச்சிக்குப் போவதாகக் கேள்விப்பட்டேன். பார்த்துப் போகலாமென்று வந்தேன் என்று சொன்னான்.

இரத்:—ஆம்: மெயிலில் புறப்படுவதாக உத்தேசம். நேரமுமாகிவிட்டது. இன்னுஞ் சாப்பிடவில்லை. எழுந்திருங்கள் சாப்பிடலாம். தாமும் என்னுடன் வருவீர்களென்று நம்புகிறேன் என்றான்.

மாணி:—அவ்விதம் திடீரென்று புறப்படுவதற்கு முடியாது. வேண்டுமாயின் நாளையதினம் அங்கு வருகிறேன் என்று சொன்னான்.

இரத்:—தாம் கண்டிப்பாக இன்றே என்னுடன் வரவேண்டும். தயவு செய்து மறுக்கக்கூடாது என்று சொன்னான்.

மாணி:—இவ்வாறு தாம் சொன்னால் நான் என்ன செய்வது? வீட்டிற்குச் சென்று தெரிவித்துவிட்டாகிலும் வருகிறேன் என்றான்.

இரத்:—அதை நான் கூடாதென்று சொல்லவில்லை சாப்பிட்டபின்சென்று தெரிவித்துவிட்டு ஸ்டேஷனில் என்னைச் சந்திப்பீராக என்று சொன்னான்.

மாணி:—வீட்டிற்குச் சென்று அங்கேயே சாப்பிட்டுவிட்டு வரலாமென்று பார்த்தேன். தங்களுக்கு மனவருத்தமுண்டாகாதிருக்க இங்கேயே சாப்பிடுகிறேன் என்று சொன்னான்

பிறகு இருவருமெழுந்து சாப்பிட்டார்கள். மாணிக்கம் பிள்ளை ஸ்டேஷனுக்கு வருவதாகச் சொல்லி விடைபெற்றுச் சென்றான். இரத்தினமும் தனக்கு வேண்டியவைகளை யெடுத்துக்கொண்டு சமையற்காரனிடங்கூடச் சொல்லிக்கொள்ளாமல் அவசரமாக வெளிக்கிளம்பி அம்புஜத்தின் வீட்டிற்கு வந்து அவளை யழைத்துக்கொண்டு ரயில்வே ஸ்டேஷனுக்குப் போனான். இவர்களுக்கு முன்னதாகவே மாணிக்கம் பிள்ளை அங்கு வந்திருந்தான். இரத்தினம் அவனைக் கண்டவுடன் மிகச் சந்தோஷமடைந்தவனாய் முதல் வகுப்பு டிக்கட்டுகள் மூன்று வாங்கும்படி அவனிடம் ரூபாயைக் கொடுத்தான். டிக்கட்டுகள் வாங்கவும் ரயிலும் வந்தது மூவரும் ஏறிக்கொண்டனர். சற்று நேரத்தில் ரயிலும் புறப்பட்டது.

மறுநாட்காலை சூரியோதயத்திற்கு முன்னதாகவே யெழுந்த இரஞ்சிதம், வழக்கம்போல் இரத்தினத்தின் வீட்டிற்குச் சென்று சமயற்காரனைக்கண்டு, “நேற்றிரவு அவர் வந்திருக்க வேண்டுமே. கடிதத்தைக் கொடுத்தாயா”? என்று கேட்டாள்.

சமயற்காரன்:—அம்மா! நேற்று இரவு சுமார் எட்டு மணிக்கு அவர் இங்கு வந்தார். கடிதத்தையுங் கொடுத்தேன் என்றான்.

இரஞ்சிதம்:—அவர் வந்தும் ஏன் என்னிடம் தெரிவிக்கவில்லை. அவர் வந்தால் உடனே எனக்குத் தெரிவிக்கும்படி பன்முறை உன்னை வேண்டிக் கொண்டேனே. நேற்று அவர் வரக்கூடிய சங்கதி எனக்கு முன்னதாகவே தெரியும். இருப்பினும் நீ எனக்குத் தெரிவிக்காததால் ஒரு சமயம் வரவில்லை போலிருக்கின்றதல்லவோ உன்னை நம்பி ஏமாந்துவிட்டேன். இனி என்ன செய்வேன். அவர் நேற்றே திரிச்சிக்குச் சென்றிருப்பாரே. எல்லா விஷயங்களையும் நேரில் சொல்லலாமென்ற எண்ணத்தாலல்லவோ, முன் உன்னிடங் கொடுத்திருந்த கடிதத்தைத் திருப்பி வாங்கி வேறு கடிதமொன்றெழுதிக் கொடுக்காமலிருந்தேன். என் தீவினைப் பயனிவ்வாறிருக்க, பிறரை நொந்துகொள்வதில் என்ன பிரயோசனம்; என்று சொல்லித் துக்கித்தாள்.

சமயற்:—அம்மா! இவ்விதம் நேரிடுமென்று நான் நினைக்கவில்லை. அவர் வந்ததும் சமயல் தயராகவிருக்கிறதா என்று கேட்டார். நான் ‘ஆம்’ என்று சொல்லிக் கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றேன். இந்நேரத்தில் வந்திருக்கிறாரே. இங்கேயே சாப்பிடப் போவதால் ஒரு

சமயம் இரவு இங்கு தங்கிப்போவார். சாப்பிட்ட வுடன் தமக்குத் தெரிவிக்கலா மென்றெண்ணி யிருந்தேன். நான் கடிதத்தைக் கொடுத்து வந்த ஐந்து நிமிஷங்கட்குள் அவரும் இன்னொருவரும் சாப்பிடவந்தார்கள். இருவரும் சாப்பிட்டனர். பின் இரண்டொரு நிமிஷங் கடந்தபின் தமக்குத் தெரிவிக்கலாமென்று புறப்பட்டேன். அவர் சிறு மூட்டையொன்றைக் கையில் வைத்துக் கொண்டு வெளியிற் செல்வதைப் பார்த்தேன். இதைத் தங்களுக்கு அப்பொழுது தெரிவித்து ஆகவேண்டியதென்ன வென்று சும்மா விருந்துவிட்டேன்'' எனவுரைத்தான்.

இரஞ் :—அப்பொழுதே தெரிவித்திருந்தால் ஏதேனுஞ் செய்திருப்பேன். இனி அதை நினைத்து வருந்துவதிற் பலனில்லை. நீ சொல்வதைப் பார்த்தால் அவர் கடிதத்தைச் சரியாகப் படித்திருக்கமாட்டார் போலிருக்கிறது.

சமயற் :—அவருடைய எண்ண மெல்லாம் வேறிடத்தி லிருக்கும்பொழுது கடிதத்தைப் படிக்க நினைவெங்கு வரப்போகிறது என்று சொன்னான்.

"நீ சொல்வது முண்மையே'' என்று இரஞ்சிதங் கூறிவிட்டுத் தன் வீட்டிற்கு திரும்பிவந்து மனச்சோர்வுடன் படுத்துக்கொண்டு ஏதேதோ வெண்ணினாள். தான் இனிச் செய்யவேண்டியதென்ன வென்று யோசித்தாள். ஒன்றும் புலப்படாமற் றவித்தாள்.

இதற்கடுத்த எட்டாம் நாள்மாலை, சுமார் ஆறு மணிக்கு இரஞ்சிதம் ஏதோ சிந்தனையுடன் கூடத்திற் படுத்துக்கொண்டிருந்தாள். அவளுடைய பாட்டி கூடத்தின் மற்றொருபுறத்தி லுட்கார்ந்து ஏதோ வேலை செய்துகொண்டிருந்தாள். அப்பொழுது அங்குவந்த மதனகோபன், பாட்டி! சூரியாஸ்தமானமாகி அதிக நேரமாகி விட்டதே ஏன் இன்னும் விளக்கேற்றி வைக்காமலிருக்கிறீர்கள்? இரஞ்சிதம் ஏனோ படுத்துக்கொண்டிருக்கிறாளே. உடம்பிற் கென்ன? வென்று கேட்டுக்கொண்டே அங்கு போட்டிருந்த நாற்காலியி லுட்கார்ந்தான்.

பாட்டி:—குழந்தைக்கு உடம்பிற் கொன்றுமில்லை. சும்மாத்தான் படுத்துக்கொண்டிருக்கிறாள். என் கொஞ்சநாட்களாக நீ இங்கு வருவதில்லை? வேலை அதிகமோ? என்று கேட்டாள்.

மதனகோபன் :—எனக்கு வேலை என்ன விருக்கிறது ஒன்றுமில்லை. பாட்டி! தங்களை யொன்று கேட்கவேண்டு மென்று வந்திருக்கிறேன். இரஞ்சிதத்தின் விவாக விஷயமாக என்ன யோசித்திருக்கிறீர்கள்? அத்தையவர்க ளிருந்திருந்தால் இதற்குள் நடந்திருக்கும்; தாங்கள் இதைப்பற்றிக் கவனிக்க வேண்டியது தங்களுடைய கடமையல்லவா? என்று சொன்னான்.

பாட் :—ஆம். அவளுக்கு விவாகஞ் செய்து வைக்க வேண்டியது என் பொறுப்பேயாகும். எனினும் அவளுடைய இஷ்டத்தின்படி நடக்க வேண்டியதும் அவசியமேயாம். நான் இது விஷயமாகப் பன்முறை கேட்டும் 'அதற்கிப்பொழுதென்ன அவசரம்' என்று அவள் சொன்னதால் நானுஞ் சும்மாவிருக்கிறேன், எனவுரைத்தாள்.

மதன:—தாம் அவ்விதமிருப்பது கூடாது. புஷ்பவதியான பெண்களைக் கலியாணமின்றி அதிகநாட்கள் வீட்டில் வைத்துக்கொண்டிருப்பது கெடுதலையுண்டுபண்ணும். அது விஷயமாகப் பேசுவதற்கே நான் இன்று வந்திருக்கிறேன் என்று சொன்னான்.

இதுகாறும் ஒன்றும் பேசாமற் கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்த இரஞ்சிதம் எழுந்துட்கார்ந்து "தம்மைப்போற் பிறரையும் நினைப்பது இயல்பேயாகும். நற்குணமுடையோர் ஏனையோரையும் நல்லவர்களென்றே கருதுகிறார்கள். துர்க்குணமுடையோர் பிறரைத் தீயோரென்றே நினைக்கிறார்கள். புஷ்பவதியான பெண்கள் விவாகமின்றி வீட்டிலிருந்தால் என்ன கெடுதலுண்டாகுமென்று சொல்லுகிறீர்? அதைப் பற்றி என்ன பேசலாமென்று வந்திருக்கிறீர்? என்று கேட்டாள்.

மதன:—இரஞ்சிதம்! நீ தூங்குகிறாயென்றல்லவோ இருந்தேன். நான் பொதுப்படக் கூறினேனேயன்றி உன்னைக் குறித்தொன்றுஞ் சொல்லவில்லையே என்றான்.

இரஞ்:—இதுவே உம்முடைய தீச்குணத்தை நன்கு விளக்கிக் காட்டுகிறது. பொதுப்பட இங்கு வந்து கூறவேண்டிய காரண மொன்றுமில்லையே. சொன்னதை எதற்காக இல்லையென்று மறைக்கவேண்டும் என்றாள்.

மதன:—என்ன சொன்னாய்? நான் தீக்குணமுடையவனா? சொன்னதை மறைக்கிறேனா? என்னை எத்தகையோனென்று உன் [illegible]

நினைத்துக் கொண்டிருக்கிறாய்? என்று கேட்டான்.

இரஞ்:—உள்ளொன்றுவைத்துப்புறமொன்று பேசும் வழக்கம் என்னிடத்திலில்லை. தம்மைப் பற்றி என் அபிப்பிராயத்தை நீர் கேட்டால் என் மனதிலுள்ளதைச் சொல்ல வேண்டிவரும். அது தமக்கு மனவருத்தத்தை யுண்டுபண்ணுமே யொழியச் சந்தோஷத்தைத் தராது. ஆதலின் தாம் அதைக் கேட்காமல் வந்தவேலையைப் பார்த்துக்கொண்டு திரும்பிச்செல்வது நலம் என்றாள்.

மதன:—ஆகவே என் மீது உனக்கு நல்ல அபிப்பிராயங் கிடையாது. இருக்கட்டும்; நான் வந்த காரியத்தைத் தெரிவிக்கலாமோ என்று கேட்டான்.

இரஞ்:—என்னிடஞ் சொல்ல வேண்டிய தென்ன விருக்கிறது. எல்லாம் பாட்டியிடத்திலேயே தெரிவிக்கலாம் என்று சொன்னாள்.

மதன:—என்னிடத்திற் பேசுவதென்றால் உனக்கேன் அவ்வளவு கஷ்டம்? என்று வினவினான்.

இரஞ்:—அது தெரிந்திருந்தும் என்னுடன் ஏன் வார்த்தையாட வேண்டும் என்றாள்.

மதன:—இரத்தினத்துடன் சந்தோஷமாகப் பேசுகிறவள் என்னுடன் ஏன் பேசக்கூடாது? அவன்தான் பந்து. நான் சொந்தக்காரனல்லவோ? என்று கேட்டான்.

இரஞ்:—நீரும் உறவினர்தான்என்றுசொல்ல,

மதன:—பின் அவனுக்கு மெனக்கும் என்ன வித்தியாசம்? அவனைவிட நான் எந்த விஷயத்தில் கெட்டவன்? என்றான்.

இரஞ்:—அவரைவிட நீர் எந்த விஷயத்திற் கெட்டவரென்று கேட்கின்றீர்! உம்மை அவருடன் உவமித்துப் பேசுவதற்குங்கூட மனந் துணிந்ததா! அவர் யாரால் கெட்டா ரென்பது எனக்குத் தெரியாதென்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்போலும் என்றாள்.

மதன:—நீ சொல்வதில் எனக் கொன்றும் விளங்கவில்லையே என்று சொன்னான்.

இரஞ்:—தாம் பிறருக்குச்செய்யுங் கெடுதலைத் தாமே அறிவாராயின், தீயோரை உலகிற் பார்ப்பது அரிதேயாகும். குதிலகாய் விளங்கியிருந்த அவரைத் தாசி வீடு புகுத்தி விட்ட தமக்கு நான் சொல்வது எவ்வாறு விளங்கும். யாவரையும் எளிதில் நம்பிவிடுங் குணத்தாலன்றோ அவர் கெட்டார்.

நமது சிறு கதை

OUR SHORT STORY

நாடும் நகரமும்

"கண்ணே, கமலம், என்ன எப்பொழுது பார்த்தாலும் கோபமாகவே யிருக்கிறாய். நாளெல்லாம் வேலைசெய்து அலுத்து இங்கு வந்தேனானால் நீ முகமலர்ச்சியுடன் என்னை வரவேற்று என் சிரமங்களை ஒருவாறு தவிர்ப்பாய் என நான் நினைத்திருக்க, வீட்டுக்கு வரும்பொழுது கோபமும் கொடுமையுமாயிருந்தால், நான் கலியாணம் செய்துகொண்டு சுகமாய் வாழலாம் என நினைத்தது தப்பு எனத் தோன்றுகிறது. உனக்கு இங்கு என்ன குறைவு? எந்த விஷயத்தில் மனஸ்தாபத்துக்கு இடம் இருக்கிறது? சொன்னால் முடிந்தவரையில் அதைத் தீர்த்துவைக்கப் பாடுபடுவேன்" என மெதுவாய் உரைத்தான் கருணாகரன்.

அதற்குக் கமலம் "எனக்குந்தான் தெரியவில்லை கலியாணம் செய்துகொண்டதன் பலன். இந்தக் குக்கிராமத்துக்கு வந்து மாட்டையும் கன்றையும் பார்த்துக் கொண்டிருக்கவா இவ்வளவு பாடுபட்டு என் தாய் தகப்பன்மார் என்னைப் படிக்க வைத்தனர்? மாட்டையும் கன்றையும் பார்த்துக்கொள்ள வாசனையறியாத பெண்டாட்டி போதாதா? இந்தப் பட்டிக்காட்டிலிருந்து எப்படி என் ஜன்மம் கடைத்தேறும்? இதோ என்னுடன் கூடப் படித்த சுந்தரம் இருக்கிறாள். அவளுக்கு நான் படிப்பில் தாழ்ந்தவள் அல்ல. ஆயினும் அவள் புருஷன் தன் பெண்டாட்டிக்குக் கிராம வாழ்வு போதுமென்று நினையாமல் பட்டணத்துக்கு அழைத்துக்கொண்டு போயிருக்கிறான். அங்கு நல்ல வேலையில் ஒரு உபாத்தியாயராக அமர்ந்து சுகமாகக் காலம் கழிக்கிறாள். அவளுக்கும் எனக்கும் உள்ள வித்தியாசத்தை நினைக்கத்தான் என் மனம் பொங்குகிறது".

"சுந்தரமா? பத்து நாளைக்குமுன் உன்னைப் பார்க்க வந்திருந்தாளே. வாதமூர் விநாயக முதலியாரின் புத்திரி—அவளா? ஆமாம் பட்டணத்தில் வேலையிலிருந்த ஒருவனைக் கலியாணம் செய்துகொண்டாள். அவளும் வாத்திச்சியாய் விட்டாளோ? சரிதான் ஜாக்கெட் போட்டுக்கொண்டிருந்தாள். கீச்சுக்குரலில் என்னமோபோல் பேசினாள். அப்பொழுதே நினைத்தேன் இவள் தொழில்

என்னவா யிருக்கும் என்று. அவளைப் பார்த்தா உனக்கு இவ்வளவு அதிருப்தி யுண்டாயிற்று?" என்று சிறிது சிரித்தான் கருணாகரன்.

"அதிருப்தியென்ன? அவள் வந்தாள் அந்த வெள்ளிக்கிழமைகாலையில். அவளுக்கு நான் அழகில் குறைந்தவள் அல்ல. ஆயினும் அவள் நமது ஹாலில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தபொழுது எனக்கும் அவளுக்கும் உள்ள வித்தியாசம் நன்றாய்த் தெரிந்தது. அந்த வித்தியாசம் நன்றாய்ப் புலப்படும்படியாக நமது நிலைக்கண்ணாடியுமா எதிரிலிருக்கவேணும்? வீடெல்லாம் மெழுகிப்பெருக்கி, மாட்டுத் தொழுவத்தைச் சுத்தம் செய்துவிட்டு அப்பொழுதுதான் வந்தேன். என் இடையில் பழுக்காச்சேலை ஆங்காங்கு சிறிது சாயம் போயிருந்தது. உடம்பெல்லாம் பொட்டுப் பொட்டாய் அழுக்கும் சாணியும். அவசரமாய்த் துடைத்துக் கொண்டுதான் வந்தேன். ஆயினும் எல்லாம் போய் விடுகிறதா? திருடர் பயத்தால் என் முக்கிய நகைகளெல்லாம் பெட்டியில் வைத்துப் பூட்டப்பட்டிருக்கிறது. தகுந்த மனுஷ்யாளோடு பேசி நாளானதால் வார்த்தைகூடச் சரியாக வரவில்லை. அவளோ—"

"பச்சைப் பட்டுத் தாவணி உடுத்திருந்தாள். உயர்ந்த பனாரிஸ் ஸில்க் ஜாக்கெட் போட்டிருந்தாள். கையில் லாக்கெட்சங்கிலி அணிந்திருந்தாள். முகத்தில் ரோஸ் பௌடர் கூடத் தடவியிருந்தாள். இதெல்லாம் உனக்குக் கோபத்தை உண்டுபண்ணி விட்டாற் போலிருக்கின்றன."

"இதுதானா? உடம்பில் சிறிது அழுக்குக்கூட இல்லை. அவள் வீட்டு வேலையே செய்வதில்லையாம். வேலைக்காரி இருக்கின்றாளாம். என் கை அழுக்கு வேலை செய்து சொர சொரப்பாய் இருக்க அவள் என்ன பரிசுத்தமாக விருந்தாள். அவள் பேசினபேச்சுக் கூட—"

வெகு இலக்கணமா யிருந்ததல்லவா? அவள் உடம்பு இளைத்துக் காசநோய் கண்டவளைப் போலிருந்தாள். உன் கண்டத்வனி என்ன? அவள் கீச்சுக் கீச்சென்று கத்தின. அழகு என்ன? சுத்தமான காற்றை உட்கொண்டு நமது தோட்டத்தில் நாமே விளைவிக்கும் பதார்த்தங்களைப் புசித்து நாம் பிரியத்துடன் பாதுகாக்கும் பசுவின் பாலை அருந்தி வளரும் உனக்கு இயற்கையழகு போதாதா? செயற்கை அழகு வேறு வேண்டுமோ? அதெல்லாம் என்னத்துக்கு? என் மகிழ்ச்சிக்காக உன்னைக் கலியாணம் செய்துகொண்டேன். ஆயிரம் சுந்தரத்தைவிட நீ அதிசுந்திரம் என்றே நினைக்கிறேன். இப்பொழுது திருப்தியாய் விட்டதா? யோஜியாதே போ" என்று சொல்லி, கமலம்மாளை ஒருவாறு திருப்தி செய்ய எண்ணினான் அவள் அன்பன்.

II

சிலநாள் கழிந்தன. கமலத்துக்குப் பட்டணம் போகவேண்டும் என்னும் ஆசை குறையவில்லை. கருணாகரன் தன்னால் முடிந்தவளவு நல்ல வார்த்தை சொல்லிப்பார்த்தான். சற்று அதட்டிக்கூடப் பார்த்தான். ஆயினும் அவள் ஒன்றுக்கும் இணங்கவில்லை. பட்டணம்போனால் தனக்கு ஒரு வேலையும் பார்க்க முடியாதென்றும் தன்னுடைய சொற்ப ஐவேஜியிலிருந்து கிடைக்கும் லாபம் தங்களிருவருக்கும் பட்டணத்தில் செலவுக்குப் போதாதென்றும் சொல்லிப்பார்த்தான். அதற்குச் கமலம் தான் ஏதாவது ஒரு வேலை பார்த்துக் கொள்ளுவதாகவும் அதற்குச் சுந்தரம் ஒத்தாசை செய்வதாகச் சொல்லியிருப்பதாகவும் சொல்லிப் பிடிவாதம் செய்தாள். அதன்பேரில் அவன் இணங்குவதுபோல் காணப்பட்டான். பட்டணத்தில் அவளுக்குத் தகுந்த ஜாகை ஏற்படுத்திக் கொடுப்பதாகவும் ஆங்கு ஏற்படும் செலவில் தனக்குள்ள பாகத்தைத் தான் எப்படியாவது பார்த்துக்கொள்ளுவதாகவும் கமலம் தன் சொந்த சம்பாத்தியத்திலிருந்து அவளுடைய செலவைத் தீர்த்துக்கொள்ளவேண்டும் என்றும் சொன்னான். அவள் ஒப்புக்கொள்ள, ஒருநாள் பட்டணம் சென்று ஒரு வீடுபேசி வந்துசேர்ந்தான்.

கமலத்துக்கு ஏற்பட்ட சந்தோஷத்துக்கு அளவு இல்லை. பட்டணமே போய் உபாத்திமைத் தொழிலில் அமர்ந்து சீக்கிரத்தில் பெரிய வேலை தேடிக்கொள்ளலாம் என்று நினைத்தாள். சீக்கிரத்தில் ஏன் ஒருபெரிய பள்ளிக்கூடத்தில் தலைமை உபாத்தியாயராக வரக்கூடாது என்று சொல்லிக் கொண்டாள். அவள் குடித்த மனப்பாலுக்கு அளவு இல்லை. ஆரம்பத்தில் பெரிய வேலை கிடைக்குமென்று அவள் எதிர்பார்க்க வில்லையாயினும் தன் வேலையை கவனத்துடன் ஊக்கத்துடன் செய்வதால் தனக்குமேலிருப்பவரை எளிதில் திருப்திசெய்து சீக்கிரமே வேலை உயரச் சம்பளம் அதிகமாகக் கிடைக்கும் என நிச்சயத்துக்கு வந்தாள். அப்பொழுது மிஞ்சிய பணத்தைக் கொண்டு அலங்காரமாக நகை உடை முதலியன

'புதுமோஸ்தரில்' வாங்கிக் கொள்ள வேண்டுமெனத் தீர்மானித்தாள். பிரசித்திபெற்ற அவ் வூரிலுள்ள பலகாட்சிகளையும் விநோதங்களையும் பார்த்து புத்தி விசாலிக்கச் செய்து கொள்ள வேண்டும் என நினைத்தாள். இப்படிச் சிறிது காலஞ்செல்ல, நல்ல பெயரெடுத்து எல்லோருக்கும் தெரிந்தவளாகவே, ஸ்திரீகளுக்கு ஏற்பட்டிருக்கும் பெரிய சங்கங்களில் சேர்ந்து பலவிதத்திலும் ஏன் தன் பெயரை முன்னுக்குக் கொண்டு வரலாகாதென்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டாள். அப்புறம்—அப்புறம் எதுதான்முடியாது?

III

அன்று ரயிலேறி பட்டணத்துக்குப் புறப்படுங்கால் இந்த எண்ணங்களெல்லாம் திரும்பவும் மனதில் உதிக்க, கமலத்துக்குண்டான குதூஹலத்துக்கு அளவு இல்லை. அப்படியல்ல கருணாகரன். கிராமத்தில் தான் மானமாய்ச் செய்து வந்த குடும்பம் கலைந்து விடுகிறதே என்று ஒரு பக்கம் வருத்தப்பட்டான். ஆயினும் கமலத்துக்கு அனுபவத்தினால் பட்டண வாசத்திலுள்ள சுகமெல்லாம் தூரத்துப் பச்சை எனத் தெரியவந்தாலல்லது தங்களுடைய வாழ்நாள் சண்டையும் சச்சரவும் மனஸ்தாபமும் கூடின ஒரு பெரிய கஷ்டமாய் முடியுமென்று நினைத்தான். அவளுக்கு சுந்தரம் என்னும் வாத்திச்சியினிடத்தில் ஏற்பட்டிருந்த நம்பிக்கையை நினைத்து உலக வியவகாரம் தெரியாத இவளுக்கு நேரில் பட்டபிறகுதான் அந்த நம்பிக்கைப் போகுமென்று எண்ணினான். பெண். பள்ளிக்கூடங்கள் குறைவு என்றும் அதில் உத்தியோகம் தேடும் பெண்மக்கள் ஏராளமென்றும் நன்கு உணர்ந்தவனாதலால் இவளுக்கு எப்படி வேலை கிடைக்கும் என்று யோசித்துப்பார்த்தான். அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆதலால் அவர்கள் உட்கார்ந்து வந்த வண்டியில் ஒரு மூலையில் சாய்ந்துகொண்டு யோசனையிலேயே இருந்து விட்டான். அவன் சொன்னபடி கேட்கவில்லையென்று தன் புருஷன் வருந்துவதாக நினைத்துக் கமலமும் சும்மாயிருந்து விட்டாள்.

புகைவண்டி எழும்பூர் ஸ்டேஷன் வந்துசேர்ந்தது. பரபரவென்று கமலம்மாள் கீழேயிறங்கினாள். கூடவே கருணாகரனும் இறங்கி அவள் மூட்டை முடிச்சுகளையெல்லாம் ஒரு கூலியாள் தலைமேல் வைத்து வெளியில் நின்ற ஒரு ஒற்றை மாட்டு வண்டியில் கொண்டுபோய்ச் சேர்த்தனன். அவர்கள் ரயில்வே மேடை (Platform) யிலிருந்து கீழேயிறங்கி வருங்கால் அங்கு நின்ற 'கோச்சு' வண்டிக்காரர்கள் நன்றாய் அலங்கரித்துக் கொண்டிருந்த கமலம்மாளை நோக்கித் தமது வாடகை வண்டிகளில் ஏறும்படி மரியாதையுடன் கேட்டனர். அவளும் கருணாகரனை நோக்கினாள். அவன் அதை லக்ஷியம் செய்யவே இல்லை. ஜட்கா வண்டிக்காரர்கள் அவசரம் அவசரமாக ஓடிவந்து தங்கள் வண்டியில் ஏறும்படி மூட்டைகளைக் கூடப் பிடுங்கிபார்த்தனர். சுள்ளென்று கருணாகரன் அவர்களைக் கோபித்துக்கொண்ட வார்த்தைகள்தான் அவர்களுக்குப் பிரதிபலனாகக் கிடைத்தன. "சாமி, சாமி," என்று கூப்பிட்டுக்கொண்டு பின்னே ஓடிவந்த ரிக்ஷாக்காரர்கள்கூடத் தங்களுக்கு இவர்களிடமிருந்து கூலி கிடைக்காதென்று திரும்பிவிட்டனர்.

தனக்குப் பட்டணம் வரும்பொழுதே தகுந்த மரியாதைகள் கிடைக்குமென்று நினைத்த கமலம்மாள் மற்ற வண்டிகளையெல்லாம் விட்டு மூட்டைகளை நிரம்ப ஏற்றி உட்காருவதற்கே இடமில்லாமல் செய்த கருணாகரனிடம் சிறிது கோபமுற்றபோதிலும் அதை அடக்கிக்கொண்டு வண்டியில் ஏறினாள். அதில் உட்கார அவளுக்கு மாத்திரந்தானிடமிருந்தது. கருணாகரன் வண்டிக்காரனைக் கோமளீச்வரன் பேட்டையில் ஒரு சந்துக்கு வண்டியை ஓட்டும்படி சொல்லிவிட்டு அதன் பின்னாலே நடந்தனன்.

அவர்கள் அந்த ஒன்றே கால் மைலையும் கடந்து கருணாகரன் பார்த்திருந்த ஜாகைக்கு வர ஒரு மணிநேரம் சென்றது. ஒற்றை மாட்டு வண்டியின் வேகம் அவ்வளவு!

வந்ததும் மூட்டையெல்லாம் இறக்கி ஒரு அல்பமான வீட்டின் மூன்றாம் கட்டில் ஒரு சிறிய சமையல் அறையையும் மற்றெல்லா உபயோகத்துக்கும் வேறொரு அறையையுங் காட்டி, "இதுதான் நமது ஜாகை கமலம். இதற்குத்தான் மாதம் ஐந்தரை ரூபாய் வாடகை. உனக்கு நல்ல இடம் பார்த்துத்தரவேண்டும் என்றுதான் எனக்கும் எண்ணம். ஆயினும் பத்துப் பதினைந்து ரூபாய் இப்பொழுது நம்மால் கொடுக்கமுடியுமா? இந்த வாடகையே ஜாஸ்தி என்று நான் நினைக்கிறேன்" என்று முடித்தான்.

கமலம் சுற்றுமுற்றும் பார்த்தாள். காலடியில் ஒரு சிறிய ஜலதாரை. முதல் இரண்டாவது கட்டு

களில் குடியிருப்போருடைய ஜலம் அது வழியாக ஓடிற்று. கிணறு கிட்டத்தான். ஆயினும் அதில் அநேகர் அப்பொழுது குளித்துக் கொண்டிருந்தனர். புடவை தோய்க்கும் சத்தமும் எங்கு பார்த்தாலும் தெறிக்கும் தண்ணீர்த் திவிலையும் பெரியதாக ஓடும் அழுக்கு நிறைந்த சாக்கடையும் மனதுக்கு அறுவறுப்பைத் தந்தன. அந்தவீட்டு வேலைக்காரி குடியிருப்போரில் ஐந்தாறு சம்சாரங்களுடைய பத்துப் பாத்திரங்களையெல்லாம் அச் சாக்கடையின் ஓரமாக வைத்துத் தேய்த்துக் கொண்டிருந்தனள். எங்குப் பார்த்தாலும் ஈக் கூட்டம்.

பிறகு கமலம் தனக்கு ஏற்பட்ட அறைகளைப் பார்த்தனள். சமயல் அறை வெகு சிறிது. அதற்குள் சாமான் வைத்துக்கொள்ள ஒரு சிறு அலமாரியிருந்தது. இரண்டொரு குண்டு விரகு அடுக்க ஒரு சிறு பலகை போட்டிருந்தது. புகை ஓடு வழியாகத்தான் போகவேண்டும். கருணாகரன் அந்த விடத்தைச் சுத்தம் செய்து வைக்க வேலைக்காரிக்குச் சொல்லியிருந்ததாகச் சொன்னான். ஆயினும் சுவரெல்லாம் ஒரே கரி. கூரையெல்லாம் ஒரே புகையும் ஒட்டடையுமாக விருந்தது. மற்றொரு அறையைப் பார்த்தாள். அதுவும் திருப்திகரமாகவில்லை. ஆயினும் வாடகையைப் பார்த்தால் அதிகமாக விருந்தது. வேறு இடம் வேண்டும் என்று கேட்டால் "வேலை ஏற்படுமுன் பணம் எப்படி செலவழிக்கிறது? நல்ல சம்பளம் வந்தால் பார்த்துக் கொள்ளுவோம்" என்று சொன்னால் என்ன செய்கிற தென்று நினைத்தாள்.

செங்கல்பட்டில் தன் பிறந்தகம் ஞாபகம் அவளுக்கு அப்பொழுது வந்தது. அது எவ்வளவு சுத்தமாகவும் விஸ்தாரமாகவும் இருந்ததென்று நினைத்தாள். அவள் தகப்பனார் வைத்தினாதமுதலியார் ஒரு சாதாரண வியாபாரிதான். ஆயினும் படித்தவர். தன் வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொண்டு தன் பெண்சாதியையும் குழந்தைகளையும் நல்ல மாதிரியாகக் கொண்டுவரவேண்டும் என்பது அவர் எண்ணம். இந்த ஜாகையை அவர் வந்து பார்த்தால்— "ஏன்! அவர் வருமுன் நல்லவிடமாகப் பார்த்துக் கொண்டு போய் விடலாம்" என்று நினைத்தாள் கமலம். புதூரில் தங்கள் வீடும் அப்பொழுது ஞாபகத்துக்கு வந்தது. அது சிறியதுதான். ஆயினும் தானும் தன் புருஷனும் குடியிருக்கத் தாராளமா யிருந்தது. அது எவ்வளவு சுத்தமாக வைக்கப்பட்டிருந்தது என்று நினைக்க, "சரி. இதையும் முடிந்தவரையில் சுத்தமாக வைத்துக்கொள்ளுவோம்" என்று தீர்மானித்தாள்.

அப்பொழுது கருணாகரன், "கமலம் உனக்குத் தற்காலம் செலவுக்கென்று 25 ரூபாய் கொண்டு வந்தேன். அதிலிருந்து ஒரு மாத வாடகை கொடுத்து விட்டேன் ரயில் சார்ஜ் வண்டி வாடகை முதலியன 2 ரூபாய் ஆய்விட்டது. பாக்கி ரூபாய் இதோ இருக்கிறது. உனக்கு வேண்டிய சாமான்களைச் சொல். இதோ வாங்கித் தருகிறேன். பாக்கிப்பணத்தை வைத்துக் கொண்டு செட்டாகக் காலக்ஷேபம் செய். பட்டணத்தில் பணம் போகும் வழி தெரியாது" எனச் சொல்லி வேண்டிய சாமான்களை வாங்கிப்போட்டுக் கடைசியாக, "நீ கொடுத்த சுந்தரம்மாளின் விலாசத்துக்கு உன்னைக் கொண்டுபோய் விடும்படி வண்டி கொண்டுவரச் சொல்லியிருக்கிறேன். அரைமணி நேரத்தில் வரும். நான் அவசரமாய்த் திரும்பிப் புதூருக்குப் போகவேண்டும். இரவு எட்டு மணிக்கு உன்னை வந்து பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டு உடனே ரயிலுக்குப் புறப்பட்டுப் போய்விட்டான்.

IV

இரவு எட்டுமணி ஆயிற்று. வெகு உல்லாசமாகக் கருணாகரன் கமலம் இருக்குமிடம் வந்தான். என்ன கமலம். உன்னிடம் சொல்லிவிட்டுப் போனேனே. மத்தியானம் இரண்டரை மணிக்கே திரும்பி வந்துவிட்டேன். அப்பொழுதே இங்கு வந்திருப்பேன். ஆனால் நீ சுந்தரம்மாள் ஜாகையிலிருந்து திரும்பி வந்திருப்பாயோ இல்லையோ என்று சந்தேகம். ஆதலால் சற்று பட்டணம் பார்ப்போமென்று ரேவு பக்கம் போனேன். என்ன ஆச்சரியம்! என்ன வேடிக்கை! எங்கு பார்த்தாலும் பெரிய கட்டடங்கள். அதிலெல்லாம் துரைமார் உட்கார்திருந்தார்கள். வியாபாரத்துக்கென்று வருவாருக்கும் போவாருக்கும் கணக்கில்லை. கணக்கில்லாத மோட்டார்கார்கள் எங்கு பார்த்தாலும் போய்க் கொண்டிருந்தன. சமுத்திரக் கரைக்குப் போனேன். அப்பொழுது தான் ஒரு கப்பல் வந்து நின்றது. என்ன ஆச்சரியம்! எவ்வளவு அழகு! அங்குமிங்கும் ஓடி உடம்பு சலித்துப்போய் விட்டது. தூக்கம் என்னமோ பலமாக வருகிறது. என்ன? நீ போன காரியம் பழமா, காயா?" என்று கேட்டுப் பதில் வருமுன் தூங்க ஆரம்பித்துவிட்டான்.

கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து மெய்யறி யாமை கொளல்.

கமலத்தின் துக்கத்துக்கு அளவில்லை. அவள் சிநேகிதி சுந்தரம், தான் புதூரில் கமலத்துக்கு வேலை பார்த்துக் கொடுப்பதாகச் சொன்னதை மறந்துவிட்டாள். அவள் திடீரென்று வந்ததைக் கண்டு, "முன்னமே கடிதம் எழுதக்கூடாதா? வருஷ மத்தியில் இப்பொழுது எப்படி வேலை கிடைக்கும்? ஆயினும் பார்ப்போம் நாளையதினம் வா. எங்கள் பள்ளிக்கூடத்தில் ஒரு குமாஸ்தா தேவை அதையாவது உனக்குப் பார்த்துத் தருகிறேன்" என்று சொல்லி அனுப்பிவிட்டனள்.

மறுநாள் பொழுதுவிடியுமுன் கருணாகரன் தனக்கு வேலை இருக்கிறது என்று வெளியே போய்விட்டான். அவன் கமலத்தின் ஜாகையில் சாப்பிடவில்லை. எங்கு போனானென்று அவளுக்குத்தெரியாது. ஆனால் இரவில் தன்னைத் துணையின்றி விட்டுவிடமாட்டான் என்று மட்டும் உறுதியிருந்தது. அன்று மறுபடியும் சுந்தரம் வீடுபோய் அவளுடன் பள்ளிக்கூடத்துக்குப் போய்ச் சேர்ந்தனள். இருவரும் தலைமை உபாத்தியாயரம்மாளைப் பார்த்தபொழுது அவள் அந்த வேலைக்குப் பலரிடமிருந்து மனுக்கள் வந்திருப்பதாகவும், எல்லோரையும் ஒருவாரங் கழித்துத் தன்னை வந்து பார்க்கவேண்டும் என்று சொல்லியிருப்பதாகவும் கமலமும் மனுப்போட்டு அன்றையதினம் நடக்கப்போகும் போட்டிப் பரீக்ஷைக்கு வந்தால், யார் கெட்டிக்காரரோ அந்த மனுதாரருக்கு வேலை கொடுப்பதாக நிச்சயித்திருப்பதாகவும் சொன்னாள். கமலம் ஒரு மனு எழுதிக் கொடுத்துவிட்டு வீடு வந்துசேர்ந்தாள். சுந்தரமும் வேறு இடங்களில் விசாரித்து வேலை இருக்கிறதாவென்று பார்ப்பதாகச் சொல்லினள்.

அன்றும் கருணாகரன் எட்டுமணிக்கே வந்தனன். முதல்நாள் போலவே தான் பார்த்த அதிசயங்களை யெல்லாம் சொல்லிக்கொண்டு, "ஏதாவது வேலை கிடைத்ததா?" எனக் கேட்டான். கமலம் தான் மனுப்போட்டிருந்த விஷயத்தைப்பற்றிச் சொன்னாள். அப்படியா என்று சொல்லிவிட்டு மறுபடியும் தூங்கப்போய்விட்டான்.

வாரம் ஒன்றாகியது. போட்டிப் பரீக்ஷை தினமும் வந்தது. வெகு கவலையுடன் கமலம் பள்ளிக்கூடம் போய்ச் சேர்ந்தாள். அங்கு பரீக்ஷைக்கு வந்தவர்களைப் பார்க்கத் தனக்கு வேலை கிடைக்குமோ என்னும் சந்தேகம் உதித்தது. அவர்களில் அநேகர் கமலத்தைவிடப் பெரியவர்களாகவும் அதிகம் தெரிந்தவர்கள் போலும் தோன்றினர். ஆயினும் கமலமும் பரீக்ஷைக்கு உட்கார்ந்தாள். ஆனால் அப்பொழுது கொடுத்த காகிதத்தில் அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. எழுதும் விதம் கூடத் தெரியாது. சிறிது நேரங்கழித்து அதிகமாய் ஒன்றும் எழுதாமல் பதில் பத்திரத்தைக் கொடுத்துவிட்டு வீடு வந்துசேர்ந்தாள். மற்றவரெல்லாம் காகிதத்திலிருந்து கண்ணை யெடுக்காமல் எழுதிக்கொண்டிருந்ததைப்பார்க்கத் தனக்கு அந்த வேலை கிடைக்காது என நிச்சயித்துவிட்டாள். அடிக்கடி சுந்தரத்தைப் போய்ப்பார்க்க ஆரம்பித்தாள். வெகு செட்டாய்க் காலக்ஷேபம் செய்தும் கையிலிருந்த பணம் சீக்கிரமாய்ச் செலவழிந்துவிட்டதால் வண்டி முதலியன கூட வைத்துக்கொள்ளவில்லை. தன் ஜாகையிலிருந்து சுந்தரம் வீட்டுக்கு ஒரு மைலும் நடந்து போனாள். பிறகு அவளுடன் அவள் அழைத்துக் கொண்டு போகுமிடமெல்லாம் போய்ப்பார்த்தாள். அடிக்கடி சாப்பாடு இல்லாமல் பசியுடன் இருக்கவேண்டி வந்தது. அதையும் கமலம் கவனிக்கவில்லை. கையிலிருந்த பணம் செலவழிந்தவுடன் மறுபடி கருணாகரனைப் பணம் கேட்கவில்லை. என்ன பாடுபட்டாலும் அவனை ஒரு காசுகூட கேட்பதில்லை எனத் தீர்மானித்தனள். சுந்தரத்துக்கும் கேட்டபொழுது பணம் கொடுக்கும்படியான அளவு பணமில்லை. ஆகையால் நல்ல காலம் வந்து ஒரு வேலை கிடைக்கும் வரையில் ஏதாவது சிறிது சம்பாதிக்க வழி தேடினாள்.

கமலத்தின் வீட்டிலிருந்து கூப்பிடு தூரத்தில் ஒரு தையல் கடை இருந்தது. அது ஒரு பெண்பிள்ளை வைத்திருந்த கடை. ஒரு நாள் அதன் உள்ளே புகுந்து தனக்கு நன்றாகக் கையாலும் மெஷினிலும் தைக்கத் தெரியுமென்றும் ஒரு வேலைகொடுத்தால் அதை நன்றாய்ச் செய்வதாகவும் அந்தக் கடை யஜமானியை வெகு வினயமாய்க் கேட்டுக்கொண்டாள்.

கடைக்காரி நல்லவள். சாதாரணமாய் அவளிடம் வேலைசெய்கிறவர்களைப்போலக் கமலம் இல்லை. மேலான அந்தஸ்துடையவள் எனத் தெரிந்தது. ஆயினும் அவள் தீனமுகத்தைப் பார்த்து, "என்ன கஷ்டமோ பாவம்" என நினைத்து அவளை வேலைக்கு வைத்துக்கொண்டாள்.

ஆனால் அதில் கிடைக்கக்கூடிய வரும்படி சொற்பமே. அதற்காக நாள்முழுதும்வேலைசெய்ய

துஞ்சினர் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்று நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.

வேண்டி யிருந்தது. ஆயினும் கமலம் என்ன செய்வாள்? தினம் கருணாகரன் வீட்டைவிட்டுப் போனதும் ஏதோ சிறிது சாப்பிட்டு விட்டுத் தையற்கடைக்குப் போவாள். திரும்பி வரும்பொழுது அஸ்தமனமாகிவிடும். வந்தவுடனே சமயல் செய்து சாப்பாடு முடித்துக்கொள்ள, அப்பொழுது கருணாகரன் வந்துசேருவான். அவன் தான் பட்டணத்தில் பார்த்த விநோதங்களைச் சொல்லும்பொழுது அவளுக்குத் தீராக்கோபம் வந்தது. ஆயினும் என்ன செய்யலாம்? தன்னுடைய கஷ்டத்தைச் சொல்லிக்கொண்டால், "அதற்கு யார் பிணி?" என்று கேட்டால் என்ன செய்வது? தான் செய்துகொண்ட காரியத்துக்குத் தானே தான் மருந்து தேடவேண்டும்'' என்று சும்மா யிருந்து விடுவாள்.

ஆயினும் ஒன்று மாத்திரம் அவள் துக்கத்தை விருத்தி செய்தது. கருணாகரன் தான் அனுபவித்த தமாஷைச் சொல்லி முடித்தவுடன் உடனே தூங்கி விடுகிறானே. அவனுக்குத் தூக்கம் என்னமாக வரும்? தன்னைப்பற்றி ஒரு வார்த்தை கேட்கக்கூடாதா என நினைக்க அவளுக்கு அநேக நாள் இரவு முழுவதும் தூக்கம் வருவதில்லை.

V

கமலம் பட்டணம் வந்து மாதம் இரண்டுக்கு மேலாயிற்று. பட்டணத்திலுள்ள பெண்பாடசாலை ஒவ்வொன்றுக்கும் வேலைக்காகப் போய்ப் பார்த்து வந்து விட்டாள். ஓரிடமும் வேலையில்லை. சிறிது காலம் கழித்தாவது ஒரு காலி ஏற்படுமோ என நினைக்கவும் வழியில்லை. தையற் கடையில்இடுப்பு ஒடியப் பாடுபட்டாலும் கிடைக்கும் வரும்படியின் அளவு கொஞ்சம்தான். இரண்டாவது மாதத்தில் வீட்டுவாடகை கொடுத்தது போச பாக்கி சாப்பாட்டுக்கே காணவில்லை அநேக நாள் இரவில் பட்டினியா யிருக்கவேண்டி வந்தது. அவள் தன் கஷ்டத்தைத் தன் புருஷனுடன் ஒருதரம் கூடச் சொல்லவில்லை. அப்படிச் சொல்லுவதைவிட இறப்பதே நலம் எனக் கருதினாள். ஆயினும் அவன் தன்னிடம் அன்பில்லாதவன் என்று சொல்ல முடியவில்லை. அநேகநாள் அவள் அவனுடன் முகங்கொடுத்துக்கூடப் பேசுவதில்லை. அதை அவன் அப்பொழுதெல்லாம் கவனியாதவன்போ லிருந்து விடுவான்.

மூன்றாவது மாதத்தில் தையல் கடையில் வேலை குறைவுபட்டது. கடைக்காரி ஒருநாள் "அம்மா, கமலம்! கடையில் வேலை குறைவாக இருப்பதைப் பார்த்தாயா, ஏற்கனவே வேலைசெய்யும் எங்களுக்கே வரும்படி போதாமலிருக்கிறது. இப்பொழுது உன்னையும் இவ்வேலைக்கு வைத்துக்கொள்ளுவதில் எல்லோரும் கஷ்டப்பட வேண்டிவருமேயன்றி வேறு பிரயோஜனம் காணேம். இந்த மாதக் கடைசியோடு வேலைக்கு வரவேண்டாம்'' என்று நயமாகச் சொல்லினள்.

அதைக் கேட்டவுடன் கமலத்தின் முகம் கறுத்துப்போயிற்று. ஏக்கம் பிடித்தவள் போல் திகைத்துச் சிறிது நேரம் நின்றனள். அன்று அவளுக்குச் சாப்பாடு பிடிக்கவேயில்லை. சமயல் கூடச் செய்யாது படுத்துக்கொண்டனள்.

அன்றிரவு கருணாகரன்! "கண்ணே கமலம் என்ன ஒரு மாதிரியாக இருக்கிறாய். உன்னுடைய சந்துஷ்டி எல்லாம் எங்கே போய்விட்டது. ஐயோ பாவம், உடம்பு எவ்வளவு இளைத்துப்போயிருக்கிறது. வெகுநாள் சாப்பிடாதவள்போல் காண்கிறாயே. பட்டணம் ஒத்துக்கொள்ளவில்லை போலிருக்கிறது. கிராமத்தில் நமது வீட்டையும் அங்கு அடிக்கும் காற்றையும் பார்த்து இந்த ஜாகையையும் பார்த்தால் மலைக்கும் மடுவுக்கும் உள்ள தாரதம்மியம் ஏற்படுகிறது. ஆனால் என்ன? உனக்குச் சம்பளம் ஜாஸ்தியானவுடன் சொல்லு. நல்ல ஜாகையாக ஒன்று பார்த்து விடுவோம்'' என உரைத்தான்.

கமலத்துக்கிருந்த துக்கம் முன்னிலும் பதின் மடங்கதிகமாகியது. ஓவென்று அவள் அலறவில்லை யாயினும், அவள் அன்றிரவு விட்ட கண்ணீருக்கு அளவில்லை.

மாதம் முடிய இன்னும் ஒருவார மிருக்கின்றது. கமலம் சென்ற ஒருவாரமாக பட்டணத்தில் மேல்செய்யக்கூடிய காரியத்தைப் பற்றி விடாது யோசித்தாள். ஒருவழியும் தோன்றவில்லை. அப்பொழுது கிராமத்தில் தானிருந்த சுகத்தையும் தன்னைச் சுற்றியுள்ளோர் தன்னிடமும் தன் காரியங்களிலும் காட்டிய பிரியமும் அடிக்கடி மனதிலுதித்தது. இப்பொழுதோ ஐந்து லக்ஷம் ஜனமுள்ள பட்டணம் என்னும் பாலைவனத்தில் தன்னிடம் பிரியம் வைத்தவர்கள் ஒருவருமில்லை. தனது யோகக்ஷேமத்தைப் பற்றி அக்கரைப்படுவோருமில்லை. தான் ஒருநாள் இறந்தால் அதைப்பற்றி யாராவது கவனிப்பவர் இருக்கின்றாரா என்று நினைத்து ஆச்சரியப்பட்டாள்.

இந்தப் பாடெல்லாம் தன்னுடைய அறியாமையினாலும் பிடிவாதத்தினாலும் ஏற்பட்டது என உணர்ந்தாள். திரும்பிப்போனால் எல்லோரும் பார்த்து நகைப்பரே! எனப் பயந்தாள். ஆயினும் பசி பெரிய உபாத்தியாயரன்றோ? அவளுக்குள்ள அகங்காரத்தை அது சீக்கிரமே யடக்கிவிட்டது. கையில் பணமில்லாது சாமானு மில்லாது போய் விட்டால் என்ன செய்வோம், எனத் திகைப்பும் பயமும் அவள் மனதில் குடிகொண்டன. அதற்கு முன்னமேயே ஊருக்குத் திரும்பிப்போய் விட வேண்டுமென்ற எண்ணம் அடிக்கடி வர ஆரம்பித்தது. ''யார் என்ன சொன்னால் என்ன? உயிரை விட்டுவிடலாமா?'' என அடிக்கடி தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

தன் புருஷன் ஒருவேளை கோபித்தால் என்ன செய்வது எனச் சந்தேகமும் அவளுக்கு வந்தது ஆயினும் கருணாகரன் இம் மூன்று மாத காலமாக ஒரு நிமிஷம் கூடத் தன்னிடம் முகத்தைச் சுளிக்கவில்லை என்பதை நினைத்துப் பார்த்தாள். அப்படிக் கோபித்துக் கொண்டால் தான் என்ன? தான் செய்த தப்பிதத்துக்கு அது தகுந்த தண்டனைதான் எனப் பரிகாரத்தையும் நினைத்துக்கொண்டாள்.

மாதமுடிய இரண்டு நாள்தான் பாக்கி. கமலத்தின் மனம் பட்ட பாட்டுக் களவில்லை. கடைசி வரையும் இந்தக் கஷ்டத்தையா அனுபவிப்பது? என நொந்தாள். கடைசியாக மனதை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு அவள் ஒரு காரியம் செய்தாள். தையற்கடையில் தன் கணக்கைத் தீர்த்து அங்கு கிடைத்த ஒரு ரூபாயையும் எடுத்துக் கொண்டு தன்னுடைய ஜாகைக்குவந்து தனக்கு அவசியமான சில சாமான்களை மாத்திரம் ஒரு மூட்டையாகக் கட்டினாள்.

அப்பொழுது மணி இரண்டுதான். மூட்டையைத் தூக்கி தலையில் வைத்துக்கொண்டு நேரே எழும்பூர் ஸ்டேஷன் போய்ச்சேர்ந்தாள் வண்டி புறப்படும் சமயமாயிருந்தது. உடனே டிக்கெட் வாங்கிக்கொண்டு ஊர்வந்து சேர்ந்தாள். ஸ்டேஷனைவிட்டு இறங்கி ஒருவரையும் பாராது நேராக வீடு போனபொழுது, வீட்டுச் சாவி எங்கு இருக்குமோ எனச் சந்தேகம் ஏற்பட்டது. ஆயினும் வீடு திறந்திருக்கக் கண்டு, ''இதுவும் நற்காலந்தான்'' என்று உள்ளே நுழைந்தாள். மூட்டையைத் தாழ்வாரத்தில் வைத்து விட்டுச் சற்று உட்கார்ந்தாள். வீடெல்லாம் வெகு சுத்தமாயிருந்தது. தான் மூன்றுமாதமாகஇல்லாமலிருந்தும் தான் இருக்கும்பொழுது எப்படியிருந்ததோ அதேமாதிரியாக இருக்கிறது என்று ஆச்சரியப்பட்டாள். பிறகு எழுந்து சமையல் அறையை நோக்கிப் போக அங்கு வெளிச்சக் குறைவில் ஒரு புருஷன் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தனள். அவனும் திரும்பி, ''கண்ணே கமலம் இது உன்னுடைய கிருகம் அல்லவா, நீ எப்பொழுதும் சந்தோஷமாய் வரலாம்.'' என உரைத்தான்

கமலத்தின் ஆச்சரியத்துக் களவில்லை. தனக்கு அதிகமாக அவமானம் நேரிடும் என்று நினைத்து வந்தபொழுது தன் புருஷன் இனிய குரலுடன் உபசாரமாகத் தன்னை அழைத்தது ஓர் அளவு ஆநந்தத்தையும் மிகுந்த துக்கத்தையும் தந்தது. ஆதலால் இதுவரையில் அடக்கிக் கொண்டிருந்த துக்கம் தாங்கமாட்டாமல் அவள் வெகுநேரம் கதறினாள்.....

அன்றிரவு கருணாகரன் அம்மூன்று மாதமும் தான் வீட்டிலிருந்து சகல காரியத்தையும் பார்த்து வந்ததாகச் சொன்னான். ''நீ பட்ட கஷ்டம் எனக்கு அளவற்ற வருத்தத்தைத் தந்தது. ஆயினும் நான் என்ன செய்வது? அந்நகர வாழ்வைவிட இந்நாடு சிறந்தது என நீ அறிந்துகொள்ளும் வரையில் நான் ஒன்றும் சொல்லுவதில்லை எனப் பிரதிக்ஞை செய்துவிட்டேன். உன் தேகம் மெலிவதையும் உன் அடங்காத் துன்பத்தையும் கண்ட எனக்கு அந்தப் பிரதிக்ஞையைக் காப்பாற்றுவது ஒரோர் வேளையில் வெகு கஷ்டமாயிருந்தது.—ஆயினும் என்ன? அதையெல்லாம் மறந்து விடுவோம்'' என முடித்தனன்.

முற்றிற்று.

அஹோபிலம்.—கிராமம். சென்னை ராஜதானி கர்னூல் ஜில்லா. ஸிர்வேல் தாலூகா, நல்லமலை மீதுள்ளது. பிரபல விஷ்ணு ஆலயம். இது மலையடிவாரத்திலுள்ள கீழை அஹோபிலம், 4-மைல் மேலேயுள்ள மேலே அஹோபிலம், மலையுச்சியிலுள்ள சிகரக்கோயில் என மூன்று பிரிவானது. முதல் கோவிலில் இராமாயணக் கதை கற்சுவற்றில் சித்திரிக்கப்பட்டுள்ளது. பங்குனி மாதத்தில் இங்கு வார்ஷீக உற்சவம் நிகழும் கோயிலுக்கு ஏராளமான பூஸ்திதியுண்டு. இதைச்சேர்ந்த பிரபலமான ஸ்ரீ வைஷ்ணவ மடமானது இப்போது காரைக்குரிச்சி என்னும் கிராமத்து சீலமும் வித்யையும் பொருந்திய ஒரு சன்னியாசியின் ஆதீனத்தில் இருக்கிறது.

சிறுத்தொண்டர்

அப்பனீ அம்மைநீ ஐயனுநீ
அன்புடைய மாமனு மாமியுநீ
ஒப்புடைய மாதரு மொண் பொருளுநீ
ஒரு குலமும் சுற்றமு மோரூருநீ
துப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய்நீ
துணையாய் என் நெஞ்சந் துறப்பிப்பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்துநீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

அங்கம் III

காட்சி 2

இடம்:—சிறுத்தொண்டன் மனை.

(திருவெண்காட்டு நங்கை வருதல்.)

தி. வெ:—விதியின் விசேஷத்தை என்னவென்று சொல்லுவது! கைக்கெட்டியது வாய்க்கெட்டாமலும், வாய்க்கெட்டியது வயிற்றுக் கெட்டாமலும், வயிற்றுக் கெட்டியது இந்த சடத்துக் கெட்டாமலும் போய்விடுகின்றதே — அருள்வள்ளலாகிய ஆனந்தக் கூத்தரின் திருவிளையாடல் தானே இது? அதிர்ஷ்டவசத்தால் அடைந்த அதி யோகியரும், ஆளனில்லா வீட்டில் அன்னமுண்பதில்லையென அகன்றார். அவரை அழைத்துவரப்போன என் நாதரோ நெடுநேரமாகியும் இன்னும் வரவில்லை. இதென்ன என் வலக்கண் துடிக்கின்றதே! துர்க்குறியாச்சுதே! அம்பிகே! நீதான் எங்களைக் காத்தருளவேண்டும். போனவிடத்தில் என் நாதருக்குப் பொல்லாங் கேதேனும் விளைந்ததோ தெரியவில்லையே. அன்பே உருவாக வாய்ந்த என் ப்ராணேசருக்கு ஒரு குறையும் நேராதிருக்கவேண்டும். அருட்பெருங்கடலே! அநாதை ரக்ஷகா! தீனதயாபரா! இதோ என் நாயகர் வந்துவிட்டார்.

[சிறுத்தொண்டர் வருதல்]

நாதா! என்ன மனவாட்டத்தோடு வருகின்றீர்கள்? என் வலக்கண் துடித்ததே. என்ன விபரீதம் சம்பவித்தது? அலர்ந்த செந்தாமரை போல் வேதமணம் வீசும் தங்கள் திருமுகம் வாட்டமெய்தக் காரணமென்ன?

(சேருமாயிரஞ் சிங்காரமண்டபம்-மெட்டு)

காயோ பழமோ நீர் போய் வந்தகாரியம்
தூயவ ராகிய வைரவர் தம்மோடு
காணாத காரணமே—நெஞ்சில்மிக
தோணுது விசனமே.

நாதா அழைத்து வருவதாகச் சொன்ன அந்த வைரவர் எங்கே?

சிறு:—கண்மணி? நான் என்னவென்று சொல்வது? இன்று ஏதோ பொல்லாத வேளை என்றே எனக்குத் தெரிகிறது. நான்போய் விஷயத்தை—

(ஷை மெட்டு)

பேசிற் பயனென்ன நேசியே நம்பர
தேசியி னாசையைக் கேட்பா யவர்க்கோராண்
பிள்ளைக் கறிவேண்டுமோம்—வேறு ஞாயம்
தள்ளிவிட வேண்டுமோம்.

அவர்க்கு நாமுண்ணும் மரக்கறிகளின்மேல் விருப்பமில்லையாம். அவர்க்கோர் ஆண் பிள்ளையைக் கறி சமைத்துப் படைக்கவேண்டுமாம்.

திரு:—என்ன இது?

(ஷை மெட்டு)

கள்ளமில்லா ஞான உள்ளச் சந்யாசிகள்
பிள்ளைக்கறியுண்ப தில்லையிதுவென்ன
காலப் பிசகு தானோ—நம்மருமைச்
சீலப் பிசகு தானோ.

மகா தபஸ்விகளாகிய ஸந்யாஸிகள்காமக்குரோத லோப மோகம் மதம் மாற்சர்யம் கொலை களவு முதலிய கொடும் பாதகங்களை அறவே விட்டொழிக்கவும், அவைகளின் வாசனையும் கூடாதென்றுமல்லவா அவர்கள் இவ்வுலகத்தை விட்டுத் துறவறம் பூண்டு காட்டை யடைந்து கடுந்தவம் புரிகின்றார்கள். அவர்கள் உயிர்களுக்கெல்லாம் உத்தமத் தோழர்களல்லவா? அப்படியிருக்க இப்புண்ணிய தவசி இவ்வாறு கொலையை எண்ணியதென்ன? காலந்தான் வக்கரித்ததோ அல்லது நாம் செய்யும் திருத்தொண்டில் பிசகேதேனும் ஏற்பட்டதோ!

சிறு:—பெண்ணே! அப்படிக்கொன்று மில்லை. உண்மை இதுவாக்கும்.

(ஷை மெட்டு)

ஆறு மாதத்திற்கோர் வேளைப் பொழுதுதான்
கூறுமடியவர்—நேரும் அமுதுண்பார்
ஆக்கிப் படைக்கவேணும்—இல்லையென்றால்
பேர்க்குப் பழிகள் பூணும்.

கண்மணி! நமது அடியார் ஒவ்வொரு நாளும் அமுதுண்பவரல்லர். அவர் கொடிய உபாசகர் போல் தெரிகின்றது. ஆறு மாதத்திற்கோர் வேளைதான் அமுதுண்பாராம். அது காரணத்தால் தான் ஆண்பிள்ளைக் கறி வேண்டுமென்கிறார்.

திரு:—ஏதோ அவருடைய விரதம் அப்படியிருக்கும். அல்லது அவர் செய்யும் தவத்திற் கனுசரணையான உணவாக இருக்கலாம். நமக்கென்ன தெரியும்? தாங்கள் கூறியவண்ணம் எப்படியேனும் அவர் கோரிய கறியைப் படைக்கத்தான் வேண்டும்.

சிறு:—ஹா! என் அருமைக் காதலி! அவர் கூறிய ஆண்பிள்ளைகளின் லக்ஷணங்களை நீ தெரிந்து

களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க் குளித்தானைத் தீத்துரீஇ யற்று.

ஆனி. 5.

கொள்ளாமல் பேசுகின்றனை. கொஞ்சம் கவனித்துக் கேள். கும்பி கொதித்துக் குழைந் தழுந்திப் பெருமூச்சு விடுவாய். கேள் சொல்லுகிறேன்.

எண்சீர்க்கழி நெடிலடியா சிரிய விருத்தம்.

அவயவங்கள் ஊனமில்லாக் குழந்தையாக
ஐந்துவய துடையவனும் அரியவேதம்
எவைகளுமாய்ந் தறிந்தவனுந் தாய்க்கோர்பிள்ளை
எனவிருக்கு மொருவனையே கொண்டு வந்து
பவமகலத் திருமஞ்சள் நீரா லாட்டி
பக்தியுடன் அவன்தாய்தன் மடியில் வைத்துக்
கவலையில்லா தவன்தந்தை அறுத்துச் சேயைக்
கறிசமைத்தால் தாம்புசிக்கக்கருத்தாமென்றார்.

திரு:—ஹா தெய்வமே!

சிறு:—கண்மணி! கேட்டனையோ ஆண்பிள்ளையின் அருமை லக்ஷணத்தை? நாம் என்ன செய்வது? சாமான்ய ஆண்பிள்ளை யென்றாலும் எங்கேனுந் தேடிக்கொண்டு வாலாம். இத்தகைய உத்தமப் பிள்ளையைத் தேடுவதென்றால் சாத்தியமோ?

திரு:—(பெருமூச்செறிந்து) என்ன விபரீதமிது! ஆண்பிள்ளை யொருவன் ஐந்து வயதாய் அங்கஹீனமில்லாமல் இருக்கவேண்டுமோம். அரிய கல்வியாம். போகட்டும். இவையெல்லா மிருக்க, தாயின் மடியில் படுத்திருக்கத் தந்தையறுக்க வேண்டுமாமே.

சிறு:—உள்ளத்திற் கவலை யொன்றுமில்லாமல் அறுக்க வேண்டுமோம். அதையேன் மறந்துவிட்டாய்?

திரு:—ஹா! கயிலைவாசா! இதுவும் நின் திருவிளையாடலோ! எங்களைப் பரிசோதிக்கின்றீரோ என்ன? அற்ப அறிவையுடைய நாங்களோ நின் திருவுள்ளத்தை அறியவல்லவர்? நாங்கள்தானே தங்களுக் கெதிரிகளாகக் கிடைத்தவர்கள். (யோசித்தல்) சரி. இருக்கட்டும் நாதா! தாங்கள் இப்பொழுது என்ன செய்யப் போகின்றீர்? அடியாரிடம் என்ன சொல்லிவந்தீர்கள்?

சிறு:—கண்மணி! அந்த அநியாயத்தை என் கேட்கின்றாய்? ஊழ்வினையின் சம்பந்தத்தை நான் என்னவென்று சொல்லுவது; அடியவர் இவ்வாறு குறிப்பிட்டுக் கேட்கு முந்தியே, நான் வரப்போவதை யறியாமல் ஆணவ மிகுதியால் அவர் கேட்குங் கறியானது எதுவாயினுஞ் சரி, தடையில்லாமல் தாமதமில்லாமல் எங்கிருந்தேனுங் கொண்டு வந்து சமைத்துப் படைப்பேன் என்று உறுதி மொழி கூறிவிட்டேன். அந்தோ. நான் என் செய்வேன்! எங்கேனுந் தேடிக்கொண்டு வருவேன் என்றேனே.

[எங்கே தேடுவேன் தங்கையானை—மெட்டு]
செஞ்சுருட்டி—ஏகதாளம்

பல்லவி.

எங்கே தேடுவேன்—பிள்ளையை நான்
எங்கே தேடுவேன்.

[அநுபல்லவி]

தங்கம் பொன்னைக் கொண்டு—
அங்குமிங்குஞ் சென்று
தையலே இவ்வையமதில் ஐயர் சொன்ன
பையனை வாங்க—எங்கே

திரு:—நாதா! தாங்கள் கேட்பது யுக்தமாகத் தோன்றவில்லையே - மனங்கலங்கி யிருப்பதனால் இவ்வாறு கூறுகின்றீர்களோ?

[ஷை மெட்டு]
[அநுபல்லவி]

சுந்திரப் பொன் தந்தால் தந்திடுவாரென்றே
தூய தவங்கள் ஆயும் பெரியோர்
கூறுஞ் சேயனைத் தேடப் போகிறீர்

[பல்லவி]

தந்திடுவரோ—பிள்ளையினைத்
தந்திடுவாரோ—பெற்றவர்கள் தந்திடுவாரோ

ஆயிரமாயிரமாக அரும்பொன்னைக் கொட்டினாலும் அடியார் சொன்ன அமைதிப்படி அரும்பாலகனொருவனை அவன் தாய் தந்தையர்கள் கொடுக்கச் சம்மதிப்பார்களோ?

[ஷை மெட்டு]
[அநுபல்லவி]

சிறு:—என்ன செய்வேன்—கண்ணே
பின்னம் வருஞ் சொன்னேன்
ஏழையின் மொழி போலச் செய்வதற்
கானவழியைக் காணேனே ஐயோ—எங்கே

ஹா! என் காதலி! என் வாக்கை நிலைநிறுத்த ஒரு ஏற்பாடு செய்யவேண்டுமே! இதை விட்டால் வேறு புகல் நமக்கில்லையே?

திரு:— [ஷை மெட்டு]
[அநுபல்லவி]

மூவுலகுஞ் சென்று தாவென விரந்து
முடித்துப் பொன்னையே கொடுத்துக் கேட்பினும்
துடிக்க மகனை யறுத்தே வுமக்குத்—தந்

தாங்கள் இந்த லோகமல்ல, இந்த மூன்று லோகங்களிலும் சென்று பையையாய்ப் பொன்னைக் கை மெய்யாய்க் கொடுத்தாலும், கொஞ்சுஞ் சிறுகுதலைக் கிங்கிணிக்கால் பொன்மகனைத் துடிக்கத் துடிக்கத் தண்டித்துத் தங்களிடம் கொடுப்பார்களென்று கனவு காண்கின்றீர்களா என்ன? தாங்கள் இவ்வாறு நினைப்பது தங்கள் பேரறிவுக்குச் சம்மதமாகுமோ?

சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

CHILDREN'S AND LADIES' PAGES

ஸ்ரீ வாமனாவதாரம்

பரம பாகவத உத்தமனான பிரகலாதனுடைய புத்திரன் விரோசனன். அவனுக்குப் பலி என்னும் புதல்வனுண்டானான். இவன் மகா பராக்கிரமசாலி. நமுசி, சம்பரன், பாணன், மயன், அரிஷ்டநேமி, காலநேமி முதலான அஸுரத் தலைவர்களால் வணங்கப்பட்டு, அஸுர ஸைனியத்துக்கு ஸேனாபதியாய் விளங்கிவந்தான். க்ஷீர ஸாகரத்தைக் கடைந்து எடுக்கப்பட்ட அமிருதத்தை விஷ்ணுவின் ஸகாயத்தால் தேவர்களே புஜித்து, அளவற்ற பலம் அடைந்து மேன்மையுடன் விளங்கலானார்கள். அஸுரர்கள், தாங்கள் எவ்வளவோ சிரமப்பட்டும் தங்களுக்கு அமிருதம் கிடையாமற் போனதுபற்றி வெகுவாறு துக்கித்து, பொருமைகொண்டு தேவாதிகளைத் தாக்கியடிக்கத் தொடங்கினர். தேவாஸுரர்களுக்குக் கொடும்போர் விளைந்தது. பலிச் சக்கரவர்த்தியானவன், இஷ்டப்படி எங்கும் ஸஞ்சரிக்கத்தக்க **வைஹாயஸம்** என்னும் விமானத்தில் ஏறி, மற்ற தானவ சிரேஷ்டர்களால் சூழப்பட்டவனாய், தேவஸைனியத்தைத் துன்புறுத்தி அழித்து வந்தான். இதுகண்ட தேவேந்திரன், ஐராவதத்தின் மீதேறி, திக்பாலகர்களுடன் கூடி, அஸுரர்களைத் தாக்கியடிக்க ஆரம்பித்தான். தேவாஸுரத் தலைவர்களுக்குள் துவந்த யுத்தங்களும் நேர்ந்தன. அப்போது கணக்கற்ற தேவாஸுரர்கள் மாண்டழிந்தனர். இரணகளத்தில் கபந்தங்கள் கூத்தாட ஆரம்பித்தன.

அப்போது மகாபலி தேவேந்திரனை எதிர்த்து, அவன் மீதும், ஐராவதத்தின் மீதும் சரமாரி பெய்தான். இவை இந்திரனால் வீணாக்கப்பட்டதைக் கண்டு, ஒரு பெரும் சக்தி ஆயுதத்தை எடுத்து அவன் மீதெறிந்தான். இதுவும் வியர்த்தமாயிற்று. உடனே மகாபலி உயரக்கிளம்பி, தனது மாயாசக்தியைக் காட்டலானான். ஆகாயத்தில் தேவஸைன்யத்துக்கு மேலே, ஒரு பர்வதமுண்டாயிற்று. அதிலுள்ள பல விருக்ஷங்கள், காட்டுத் தீப்பற்றி எரிந்து, தேவர்கள்மீது விழுந்தன. கற்பாறைகள் சிதறி விழுந்து, அவர்களைச் சூர்ணமாக்கின; கொடிய ஸர்ப்பங்களும் மற்ற விஷ ஜந்துக்களும் எங்கும் கிளம்பி அவர்களை இம்சித்தன. சிங்கங்கள், புலிகள், காட்டுப்பன்றிகள் உற்பத்தியாகி தேவர்களின் யானைகள் முதலியவற்றை அழித்தன. கணக்கற்ற பிசாசங்கள் எங்கும் கிளம்பி, "இடி, குத்து, வெட்டு" என்ற கூக்குரலுடன் தேவஸைனியத்தைத் துன்புறுத்தின. பிரளயகாலாக்கினி போன்ற பெருந் தீயானது கிளம்பித் தகிக்க ஆரம்பித்தது. எங்கும் பெரும் காற்றுகள் உண்டாகி, சமுத்திரமே கொதிப்பெடுத்துக் கரைபுரண்டு தத்தளித்தது. இவ்வித மாயைகளின் கொடுமை தாங்காமல், தேவர்கள் தவித்து வாடினர். யாது செய்வதென்று தெரியாமல் வருந்தினர். திருமாலைத்தவிர வேறு சரணமில்லையென்று உணர்ந்து, வைகுண்டநாதனை மனமுருகித் துதித்துப் பிரார்த்தித்தனர். அப்போது சரணாகதவத்ஸலனான பகவான் உத்தமரூபத்துடன் கருடவாகனாரூடராய் அங்கு எழுந்தருளினார். தூங்குவோனுக்கு எவ்வாறு விழிப்பு வந்ததும் அவனது சொப்பனமானது தக்ஷணமே நீங்குமோ, அவ்வாறே ஸர்வ ஆபத்துக்களை நீக்கவல்ல பகவான் எப்போது அங்குப் பிரஸன்னரானாரோ அக்கணமே பலியின் மாயைகள் நசித்தன.

அச்சமயம் காலநேமியானவன், ஒரு யானை மீதேறி, ஒரு சூலாயுதத்தைக் கைக்கொண்டு கருடன் தலைமீது அடித்தான். அப்போது பகவான் அதைப்பிடுங்கி, அவனையும் யானையையும் அடித்துக் கொன்றார். இதுகண்டு மாலீ, ஸுமாலீ, மால்யவான் என்னும் பலிஷ்டர்கள் பகவானை எதிர்த்து, அவரது சக்கராயுதத்தால் தலையறுபட்டு மாண்டனர். இதற்குள் தேவர்கள் திருமாலின் கிருபாகடாக்ஷத்தால் பிரஞ்ஞை தெளிந்து எழுந்து, தானவர்களைத் தகைந்து அழிக்கத் தொடங்கினர். தேவேந்திரன் வஜ்ராயுதத்தைக் கையிலேந்தி, மகாபலியை நோக்கி, 'கண்கட்டிவித்தைக்காரன்போல், ஏதோ மாயைகளைச் செய்து காட்டிய உனது வீரியமும் ஒரு வீரியமா? அற்பர்கள் செய்யும் காரியமல்லவா இது! இதோ என் வஜ்ராயுதத்தால் உன் தலையை சேதிக்கப் போகிறேன்' என்று கூறினான். இதுகேட்ட பலியும் 'யுத்தத்தில் ஜயம், அபஜயம், கீர்த்தி, மரணம் முதலியன நேரிடுவது ஸம்பாவிதமே; இது விஷயத்தில் அஞ்ஞர்களான உங்களைப்போல்,

வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉந் தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.

நாங்கள் களிப்படைவதுமில்லை, சோகமுறுவது மில்லை. இதோ உன் வார்த்தைக்குப் பதிலளிக்கிறேன்' என்றுகூறி கூர்மையான நாராச பாணங்களை இந்திரன்மீது தொடுத்து வருத்தினான். அமரேசனும் சினங்கொண்டு, தனது குலிசத்தால் பலியை அடித்து, உயிரற்று விழச்செய்தான். இதுகண்ட ஜம்பன் என்னும் அஸுரன் தனது கதையால் ஐராவதத்தை அடித்து வீழ்த்தினான். உடனே இந்திரன் மாதலியால் செலுத்தப்பட்ட ரதத்திலேறிக்கொண்டு, ஜம்பனை எதிர்த்து அவனது சிரத்தையறுத்துத் தள்ளினான். நாரதரால் இச்செய்தி கேள்வியுற்ற நமுசி, பலன், பாகன் முதலானோர் ஒன்றுசேர்ந்து இந்திரனைச் சூழ்ந்து தகைந்து கொடும்போர்புரிந்தனர். தேவராஜனும் வெகு விசித்திரமாய்ப் போராடி, பலபாகர்களின் சிரத்தைப் பிளந்தார். நமுசியோ கோரயுத்தஞ் செய்தான். அவன்மீது எறியப்பட்ட வஜ்ராயுதத்தால் அவன் தேகத்தில் யாதொரு விரணமும் ஏற்படவில்லை. இந்திரன் இதுகண்டு வியந்தான். அப்போது ஏற்பட்ட ஒரு அசரீரி வாக்கால் மர்மமறிந்து,அதிக கடினமும் அதிக மிருதுவுமல்லாத கடல் நுரையைக்கொண்டு, அவன் சிரத்தையறுத்துத் தள்ளினான். நமுசியைக் கொன்றதற்காக தேவாதிகள் அவனைப் புகழ்ந்து கொண்டாடினார்கள். வருணாதி லோகபாலகர்களும் மற்றைய அஸுரசிரேஷ்டர்களை எதிர்த்து வருத்தினார்கள். தானவர்கள் நடுநடுங்கினார்கள். அச்சமயம் பிரம்ம தேவன் நாரதரைத் தேவேந்திரனிடமனுப்பி மேன்மேலும் தேவர்கள் தானவர்களை இம்சித்து அழிக்காம லிருக்கும்படி நியமித்தார். உடனே யுத்தம் நிறுத்தப்பட்டது.

மிகுதியிருந்த அஸுரர்கள் பலியின் சரீரத்தை எடுத்துக்கொண்டு அஸ்தகிரியை அடைந்தனர். அங்கு அஸுரகுருவான சுக்ராசாரியர், தான் கற்றுள்ள ஸஞ்ஜீவினீ என்னும் மந்திரப் பிரயோகஞ்செய்து, பலியின் சரீரத்தைத் தடவிக் கொடுத்தார். உடனே அவன் உயிர் பிழைத்தெழுந்தான்; தத்வஞானம் பொருந்தியவனாதலால், தனக்கு நேர்ந்த அபஜயத்தைக் குறித்துச் சிறிதும் வருந்தாமலிருந்தான்; இவ்வாறு தன்னைக் காப்பாற்றியருளின பார்க்கவரைப் பரமகுருவாகவும் முக்கிய மந்திரியாகவும் நியமித்து, அவர் சொற்படி நடந்துவந்தான்; அவரிட மிருந்து அரிய தத்வார்த்தங்களையும் அறிந்து வந்தான். அவரும் அவரைச்சார்ந்த மற்ற விப்ரர்களும் மகாபலிக்கு யதோக்தமாய் முடிசூட்டி, அவனது ஐசுவரியமும் பராக்கிரமும் செழித்தோங்குவற்கு வேண்டிய வழியைத் தேடலானார்கள்; விச்வஜித் என்னும் வேள்வியைச் செய்து வைத்தனர். அக்கினி குண்டத்திலிருந்து தங்கமயமான உத்தம ரதமும், ஜாத்யசுவங்களும், சிங்கக்கொடியும் உண்டாயின. பிரம்மதேவன், திவ்விய தனுஸும், பாணம் வற்றாத அம்புறாத்தூணியும், உத்தம கவசமும் அவனுக்களித்தார். சுக்கிராசாரியர் எப்போதும் வாடாத புஷ்பமாலையும், உயர்ந்த சங்கமும் கொடுத்தார். பலி இவ்வாறு தனக்குதவிய அந்தணர்களைக் கௌரவித்து வணங்கினான். பின்னர் தன் பாட்டனை பிரகலாதனை நமஸ்கரித்து, விடைபெற்று, திவ்வியரதத்திலேறி, அஸுர ஸைநியத்தால் சூழப்பட்டவனாய் பெரும் ஆரவாரத்துடன் திக்குவிஜயம் செய்யப் புறப்பட்டான். இந்திரலோகத்தை நோக்கிச்சென்று, அமராவதி பட்டணத்தை முற்றுகைபோட்டுத் தகைந்தான். சுக்கிராசாரியர்அளித்துள்ள சங்கத்தைபேரொலி போல் சப்தித்து, இந்திராதிகள் திடுக்கிடும்படி செய்தான். இதுகண்டு, அமரேசனும் நடுநடுங்கி, தேவர்களுடன் புறப்பட்டு, பிருகஸ்பதி பகவானை யடைந்து, மகாபலிக்கு அவ்வாறு திடீரென்று அதிக பலமும் ச்ரேயஸ்ஸும் ஏற்படக் காரணம் யாது எனக் கேட்டான். அதற்குத் தேவகுரு, 'தேவராஜனே, இப்போது பலிக்கு ஏற்பட்டுள்ள விபவம் பிரம்மஞானம் நிரம்பிய சுக்கிராசார்யர் கிருபையாலுண்டானது. ஸாக்ஷாத் விஷ்ணுவைத் தவிர, வேறொருவரும் இச்சமயம் பலியை எதிர்த்து நிற்கமுடியாது. நீங்கள் உங்கள் ஸ்தானங்களை விட்டு கொஞ்சகாலம் எங்கேயாவது வசிப்பது உசிதம். அந்தணர் பலத்தால் இவ்வளவு மகிமை பெற்றுள்ள மகாபலியானவன் அவர்களை அவமதித்து சீக்கிரம் ஸகுடும்பமாய் நசிக்கப்போகிறான்" என்று பதிலளித்தார்.

இதைச் செவியுற்ற இந்திராதிகள், யதேச்சையான ரூபங்கள் எடுத்து, தேவலோகத்திலிருந்து வெளியேறி மறைந்தனர். உடனே பலி அமராவதிக்குட் பிரவேசித்து, தேவலோகத்தைக் கைப்பற்றினான். பின்னர் பார்க்கவர்களைக் கொண்டு இடைவிடாது நூறு அசுவமேத யாகங்கள் செய்து முடித்து, அளவற்ற கீர்த்தியும், மூவுலக ஐசுவரியங்களையும் பெற்று மகிழ்ந்துவந்தான்.

இவ்வாறிருக்கையில், தனது புத்திரர்களான தேவர்கள் தங்கள் ஸ்தானங்களிழந்து, ஒளிந்து

வசித்து வரும்படி நேர்ந்ததை யறிந்த அதிதி தேவியானவள் பெரும் சோகமுற்ருள்; மிக்க வாட்டமுற்ருள். ஒரு சமயம் காசியபர் தனது பத்தினியின் ஆசிரமத்துக்கு எழுந்தருளி, அவளது துக்க காரணத்தை வினவினர். அதிதிதேவியும், "பிரபோ, எனது சக்களத்தி புத்திரர்களான தானவாதிகள் எனது புதல்வர்களின் ஸ்தானங்களைக் கைப்பற்றி, அவர்களைத் துரத்தியடித்து, நிகரற்ற ஐசுவரியாதிகளை அனுபவித்து வருகிருர்கள். தேவர்கள் மீண்டும் தங்கள் இடங்களையும், மேன்மையையும் பெறும்படி அனுக்கிரகிக்கவேண்டும்" என வேண்டினள். இது கேட்ட காசியபரும் புன்னகை செய்து, 'அதிதி தேவியே, இதெல்லாம் விஷ்ணுவின் மாயையாலுண்டான வீண்மோகம். யாருக்கு யார் புத்திரன்? பிரகிருதி சம்பந்தமற்ற ஆத்மா எங்கே? பஞ்ச பூதங்களாலுண்டாய சரீரம் எங்கே? பிறராவது, சுற்றத்தாராவது? இது மதிமயக்கம். எனினும், உனது விருப்பம் நிறைவேற வேண்டுமாளுல், ஜனர்த்தன பகவானிடம் பக்தி பண்ணு. அவர்தான் உன் அபீஷ்டத்தை ஈடேற்றி வைக்கக்கூடும்" என்று கூறி, அவரை உபாஸிக்க வேண்டிய விரதாதி நியமங்களை அவளுக்கு உபதேசித்தருளினர்.

அதிதியும் அவரது நியமனப்படி, ஸ்நானதிகள் செய்து, பயோவிருதத்தை அனுஷ்டித்து, தியானத்திலாழ்ந்து, ஏகமனத்துடன் திருமாலைத் துதித்துவந்தாள். அவளது விரதானுஷ்டானத்தில் மகிழ்வடைந்த ஆதிபுருஷனும், சங்கு சக்ர பீதாம்பரதாரியாய், ஸர்வாபரணங்கள் அணிந்து, சதுர்ப்புஜராய் அவள் முன் பிரஸன்னரானர். அவ்வித அற்புத ஸேவையைக் கண்ணுற்ற அதிதியும், திடுக்கிட்டு எழுந்து, பூமியில் ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்தாள்; அவள் உடல் பூரித்தது. ஆனந்தக் கண்ணீர் வடிந்தது. கண்டம் தழதழத்தது. பின்னர் அவள் பகவானை ச்ருதிகளில் சொல்லப்பட்ட அர்த்தங்களை அனுசரித்துப் பலவிதமாய்த் துதித்துக் கொண்டாடினள். மோக்ஷம் என்னும் பரமானந்தம் அளிக்கவல்ல தேவரீருக்கு என் விருப்பத்தைப் பூர்த்தி செய்வது கஷ்டமா? என்று பிரார்த்தித்தாள். அதற்குப் பகவானும் 'தேவமாதாவே, உனது விருப்பம் நானறிவேன். தேவர்கள் மீண்டும் தங்கள் பதவிகளைப் பெற்றுக் களிக்கவேண்டுமென்பதுதானே உனது கோரிக்கை. தற்சமயம் அவர்கள் கஷ்டப்படவேண்டியதுதான். அஸுரர்களின் மேன்மை இப்போது தடுக்க முடியாதது. இருந்தாலும், நீ கஷ்டவிரதமனுஷ்டித்து என்னைப் பஜித்ததும் வீண்போகக்கூடாது. நானே உனக்குப் புத்திரனப் அவதரித்து, உனது புத்திரர்களைக் காப்பாற்றி, ஏற்றமடையச் செய்கிறேன். ஆகையால் நீ என்னை மனத்தில் தியானித்துக்கொண்டு, உன் பர்த்தாவுடன் சேர்ந்து சுகிப்பாயாக! பின் ஏற்படக் கூடியது தேவரஹஸ்யம்" என்று அனுக்கிரஹித்து மறைந்தார். அவ்வாறே அதிதி காசியபரிடம் சென்ருள். அவரும் ஞானதிருஷ்டியால் விஷ்ணுவின் அம்சம் தம்மிடம் அனுப்பிரவேசித்ததை உணர்ந்து, பெருந்தேஜஸ் பொருந்திய புத்திரனுதிக்கும்படி அதிதிக்கு அருள்புரிந்தார். உடனே அவள் கர்ப்பந்தரித்தாள். அங்குப் பகவான் அவதரித்துள்ளதை அறிந்த பிரம்மதேவன் வந்து பலவாறு துதித்துப் புகழ்ந்தார். பிரஸவகாலம் நெருங்கியது. திக்குகள் தெளிவடைந்தன. எல்லோர் மனமும் களிப்படைந்தது. விருக்ஷாதிகள் ஆறு ருதுக்களின் பலன்களைப் பெற்றுச் சோபையுடன் விளங்கின. அச்சமயம் புரட்டாசி மாதம் சுக்கில பக்ஷத் துவாதசி தினத்தில், பகல் உச்சிவேளையில் அபிஜித் என்னும் உத்தமமுகூர்த்தத்தில், நக்ஷத்திராதிகள் உத்தம ஸ்தானங்களிலிருக்க, வைகுண்டநாதன் சதுர்ப்புஜராய், சங்குசக்ராதி அவரது அப்ராகிருத லக்ஷணங்களுடன் அவதரித்தார். அச்சமயம் தேவதுந்துபி வாத்தியங்கள் முழங்கின. அப்ஸரஸ்திரீகள் கீதம்பாடி நாட்டியமாடினர். மலர்மாரிகள் பொழிந்தன. ஸ்துதிவாக்கியங்கள் எங்கும் எழுந்தன. பிரம்மதேவன் பல்லாண்டு கூறி வாழ்த்தினர். இச்சந்தர்ப்பத்தில் எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே, பகவான் இரண்டடி உயரமுள்ள ஒரு வாமனனுக உருக்கொண்டார். இதைக்கண்டு, மகரிஷிகள் களித்து, பிரம்மனை முன்னிட்டு இவருக்கு ஸம்ஸ்கார பூர்வமாய் உபநயனம் செய்வித்து, காயத்ரீயை உபதேசித்தருளினர். பிரம்மஸூத்திரம், மேகலை, கமண்டலு, வஸ்திரம், அக்ஷமாலை முதலிய பிரமசாரிக்குரிய உபகரணங்களை பிரம்மாதிகள் அவருக்குக்கொடுத்தார்கள். இவ்வாறு உபநயனம் செய்விக்கப்பட்ட வாமனரூபியான பகவானுக்கு ஸாக்ஷாத் உமாதேவியே பிக்ஷையளித்தாள். அவரது பிரமதேஜஸ் வெகுவாறு விருத்தியடைந்து, மகரிஷிகளின் சோபையை அதிகரிக்க

லாயிற்று. பின்னர் வாமன மூர்த்தி அக்கினி ஹோத்திரம் செய்தார்.

இவ்வா றிருக்கையில், பலிசக்கரவர்த்தியானவன் நர்மதை நதியின் வடகரையில் ப்ருகுக்கச்சம் என்னுமிடத்தில் சுக்கிராசாரியார் முதலானோரின் உதவியைக்கொண்டு அசுவமேதயாகம் செய்துவந்தான். உத்தமபிரமசாரி வேஷத்துடன் குடைபிடித்துக்கொண்டு வாமனரும் அங்குச் சென்றார். அவரது நிகரற்ற தேஜஸைக்கண்டு, யாகசாலையிலுள்ளோர் யாவரும் பிரமித்து, ஸாக்ஷாத் ஸூர்யனோ, அக்கினியோ அல்லது ஸனத்குமாரரோ அவ்வுருவாய் எழுந்தருளினரென்று நினைத்தனர். அவரைக்கண்டதும் எல்லோரும் எழுந்து மரியாதை செய்தனர். பலியும் அவரது அதி திவ்ய ரூபத்தைக்கண்டு வியந்து, வணங்கி, நல்வரவேற்று தக்கதோர் ஆஸன மளித்தான்; அவரது பாதகமலங்களைக் கழுவி, ஸர்வ பாபத்தையும் போக்கவல்ல அந்தத் தீர்த்தத்தால் தன் சிரத்தைப் புரோக்ஷித்துக் கொண்டான்; அவர் அவ்வாறு அங்கு எழுந்தருளி யனுக்கிரகித்ததால் தான் மிகவும் தன்யனானதாகக்கூறி, அவரைப் பலவாறு துதித்தான். "பிராமணோத்தமரே! பிரமரிஷிகளின் தவமே இவ்வுருக்கொண்டதுபோல், நீர் இங்கு எழுந்தருளியது எனது பெரும் பாக்கியமே! இப்போதுதான் என் குலம் பரிசுத்தமாயிற்று; என் பித்ருக்கள் திருப்தியடைந்தனர். இப்பொழுதுதான் இந்தவேள்வி ஸபலமாயிற்று. நீர் எதையோ அபேக்ஷித்து இங்கு வந்திருக்கிறீர் என்று நினைக்கிறேன். யாதொரு ஆலோசனையுமில்லாமல் உமது விருப்பத்தை வெளியிடுவீராக, அதைப் பூர்த்தி செய்துவைக்கச் சித்தமாயிருக்கிறேன். சற்றும் சந்தேகப்படவேண்டாம். பூமியோ, தனமோ, பசுக்களோ, நல்ல சாப்பாடோ, மணக்கத்தக்க விப்ர கன்னிகைகளோ, ரதங்களோ எது வேண்டுமானாலும் கொடுக்கிறேன்" என்று பலி வேண்டிக்கொண்டான்.

பலியின் இவ்வித வார்த்தையைக் கேட்ட பகவான், அவனது தர்மபுத்தியையும் ஔதார்யத்தையும் மெச்சி, 'தானவசக்ரவர்த்தியே, நீர் கூறியது உமது குலத்துக்கும், தர்மத்துக்கும், பார்க்கவர்களின் சிஷ்யஸ்வபாவத்துக்கும் மிகவும் ஒத்ததே! இக்குலத்தோர் பராக்கிரமமும், நிகரற்ற ஐசுவரியமும் பொருந்தியவர்கள். யாசகர்களின் எவ்வித விருப்பங்களையும் பூர்த்தி செய்யக்கூடிய வல்லமையும், மனமும் உடையவர்கள். உமது முன்னோர்களான ஹிரண்யாக்ஷன், ஹிரண்யகசிபு இவர்களின் பராக்கிரமம் வர்ணிக்க வொண்ணாதது. மஹாவிஷ்ணுவையும் வருந்தித் தவிக்கச் செய்தவர்கள். உமது பாட்டனான பிரகலாதன் பரமபாகவதோத்தமன். உம் பிதா விரோசனனும் தத்வஞானம் நிறைந்தவன், த்விஜ வத்ஸலன்; நீரும் எல்லாத் தருமசாஸ்திரங்களு மறிந்து, விப்ரர்கள் போல், கிருஹஸ்த தர்மம் தவறாமல் ஒழுகும் சீலமுடையவர். அர்த்திகளின் மனோரதத்தை ஈடேற்றி வைப்பவர். உம்மிடமிருந்து நான் யாசிப்பது ஒன்றே. என் காலால் மூன்று அடி வைக்கக்கூடிய பூமியை எனக்குத் தானம் பண்ணியருள்வீராக; எனக்கு வேறு யாதொன்றும் வேண்டாம்" என்று கேட்டார்.

இதைச் செவியுற்ற மகாபலி அவர் அவ்வளவு அற்பமான தானத்தை யாசித்ததுபற்றி நகைத்து, அவரது ஜீவனத்துக்குரிய பூமியை வேண்டியவாறு கேட்கும்படி கூறினான். அதற்கு வாமனரூபி, 'தைத்யேசனே, நீர் கொடுக்கக்கூடியதற்கு அளவேயில்லை. ஆனால் எம்போன்றவர்கள் அதிக ஆசைப்படக்கூடாது. ஆசைக்கு அளவே இல்லை. மூன்று அடி பூமியால் திருப்தியடையாதவன் ஸப்தத்வீபங்கள் கூடிய பூமி கிடைத்தாலும் மனச்சமாதானமடையான். ஸ்வர்க்கம் கிடைத்தாலும் அதன்மேலும் விரும்புவான். அவசியம் வேண்டியதை யாசித்துத் திருப்தியடைபவனுக்கு முக்தி கிடைக்குமென்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆகையால் நான் முன் கேட்டபடி, என் காலால் மூன்று அடி பூமியே போதும். வேறொன்றும் வேண்டாம்" என்று சொன்னார்.

இவ்வாறு வேண்டப்பட்ட மகாபலியானவன், பிரம்மசாரியின் பேதமைத்தனத்தைக் குறித்து புன்னகைசெய்து, ஜலபாத்திரத்தை எடுத்து பூமிதானம் செய்ய ஆரம்பித்தான். அச்சமயம் அவனது ஆப்தகுருவான சுக்கிராசாரியர், பகவான் அங்கு எழுந்தருளிய மர்மமறிந்தவராய், பலியைநோக்கி, "தானவேந்திரனே, இதோ நிற்கும் பிரம்மசாரி ஸாக்ஷாத் விஷ்ணுவின் அவதாரமே. அதிதிதேவியிடம் பிறந்து, தேவர்களின் ஐசுவரியத்தை மீட்டுக் கொடுப்பதற்காகவும், உன்னை அழிப்பதற்காகவும் இவ்வாறு யாசகம் கேட்க வந்திருக்கிறார். மேற்கூறியவாறு இவருக்குத் தானமளிப்பது சரியல்ல; பெரும் அனர்த்தம் விளையும்; ஏற்கெனவே செய்துள்ள வாக்கை

ஈடேற்றிவைப்பது நியாயமே. என்றாலும், ஆபத் காலங்களில், ஒருவன் தான் செய்த பிரதிஞ் ஞையைப் பூர்த்தி செய்யாமல் விடுவதும் தர்மசம் மதமாகுமென்று நான் கேட்டிருக்கிறேன். ஸ்திரீ கள்,இரகசிய விவாகம்,ஜீவனம், பிராணசங்கடம், பசு, விப்ரர்களின் ஹிதம், இவ்வித விஷயங்களில் பொய்யுரைப்பது நிந்திக்கத்தக்கதல்ல'' என்று கூறி, தானஞ்செய்வதைத் தடுத்தார்

இது செவியுற்ற மகாபலி, "பரம குருவே, நீர் சொல்வது சாதாரண கிருஹஸ்த தர்மம். ஆனால், பிரகலாத வம்சத்திலுதித்துள்ள நான் முன்செய்துள்ள பிரதிஞ்ஞையையெவ்வாறு மறப் பேன்? இது தர்மமறியாத அயோக்கியன் செய் யும் காரியமல்லவா? அஸத்யத்தைக் காட்டிலும் இழிவான அதர்மமுண்டா? ஆகையால் என்ன கேடு வந்தாலும் வரட்டும். நரகமோ, பெருங்கஷ் டங்களோ, பதவி நாசமோ எது நேர்ந்தாலும் நான் பயப்படப்போவதில்லை.அபகீர்த்தியைக்காட் டிலும் துக்ககரமானது வேறில்லை.ஐசுவரியாதி சுக ங்கள் நீடித்து நிற்கா.இவ்வித பிரம்மசாரி விஷயத் தில் பொய்யுரைத்து, எனது சுகத்தைத்தேடுவது வீண் பிரயத்தினம். எந்த பரம புருஷனைக் குறித்து யாகாதிகள் செய்யப்படுகின்றனவோ, அவரே நேரில் வந்து யாசகம் பண்ணுவதானல் எனக்கு இதைவிடமிகுந்த பாக்கியம் வேறுஎன்ன இருக்கக்கூடும். நான் இவருக்குத் தானம் செய்தே தீருவேன். அவர் தர்மத்தைக் கடந்து என்னை இம்சித்து அழித்தாலும் அழிக்கட்டும்'' என்று பதில் அளித்தான். சுக்கிராசாரியர், இதுகேட்டுக் கடுஞ்சினங்கொண்டார். 'நீ ஸூக்ஷ்மதத்வமறிந்த வனாக உன்னை நினைத்து, மதங்கொண்டு நான் சொல்லும் ஹிதோபதேசத்தை அவமதித்தாய். என் கட்டளையை மீறி நடப்பதால், நீ உனது ஐசுவரியாதிகளை இழந்து தவிப்பாய்' என்று சபித்தார். இவ்வாறு சபிக்கப்பட்டும், மகாபலி சற்றும் மனஞ்சலியாது, வாமனருக்குத் தானஞ் செய்யக்கருதினன். அவனது பத்தினியான விந் யாவளி என்பவள் தங்கக் கலசத்தில் சுத்த ஜலம் கொண்டுவந்து தாரை வார்த்தாள். பலியும் அந்த ஜலத்தால் அவரது பாதங்களைச் சுத்தி செய்து, அந்தப் பாத தீர்த்தத்தால் புரோக்ஷித்துக் கொண்டான். அவனது பாக்கியம் என்னே! ஆகாச கங்கையின் உற்பத்தி ஸ்தானமா கிற திவ்விய சரண தீர்த்தத்தால் மிகப் பரிசுத்த னனன். அச்சமயம் தேவகணங்கள், அவனது ஸத்தியஸந்தத்தன்மையைக் கொண்டாடி, மலர் மாரி பொழிந்தனர். தேவவாத்தியங்கள் முழங் கின.

உடனே வாமனரது ரூபம் விருத்தியடைந் தது. பூமி, ஆகாயம், திசைகள், ஸ்வர்க்கம், சமுத்திரங்கள் முதலியன அங்கு காணப்பட் டன. ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற குணங்க ளும் நிறைந்துள்ள எல்லாப் பிரபஞ்சமும் தோன்றிற்று. சங்கு சக்ராதி திவ்ய லக்ஷ ணங்கள் கூடிய விச்வமூர்த்தியின் பக்கலில் ஸுநந்தாதி பார்ஷதர்கள் வந்துகூடினர். உடனே பகவான் தமது ஒரு அடியால் பூமியையும், மற் ருெரு அடியால் ஆகாயத்தையும் அளந்தார். ஆகாயத்திலுள்ள பாதத்தை பிரம்மாதி தேவ கணங்கள் நமஸ்கரித்துப் பூஜித்தனர். அப்பெரு மானது மகிமையைப் பலவாறு துதித்தனர்.

பகவான் முதலில் வாமனரூபியாயிருந்து யாசித்து, பின்னர் விச்வரூபமெடுத்து, பலியை மோசஞ்செய்ததைக் கண்ணுற்ற பலியின் அனுச ரர்கள் கண்டு சினங்கொண்டு, ஆயுதங்களைஎடுத்து பகவானைத்தகைந்து கொல்ல ஆரம்பித்தனர். அப் போது ஜயந்தன் முதலான விஷ்ணு கிங்கரர்கள் அவர்களைச் சின்னபின்னப்படுத்தி அழித்தனர். அச்சமயம் பலிசக்கரவர்த்தி, தனது கிங்கரர்களை நோக்கி அவ்வித ஸாகஸம் செய்யக்கூடாதென்று தடுத்தான். "பிரபஞ்சத்திலுள்ள ஸர்வஸுக துக் கங்களுக்கும் ஈசுவரனை பரமபுருஷனைவெல்வது அசாத்தியம். இவரது ஸகாயத்தால் இப்போது தேவர்களுக்கு நல்லகாலம் ஏற்பட்டிருக்கிறது. நாம் பொறுப்பதேகடமை'' எனக்கூறினன்.

பின்னர் பகவானது எண்ணமறிந்து கருடன் வருணபாசங்களைக்கொண்டு மகாபலியைக் கட்டி னன். அப்போது திருமால், ஸத்யவிரதத்தால் ஸர்வ ஐசுவரியமு மிழந்துள்ள பலியை நோக்கி, தமது மூன்றாவது அடிவைக்க இடம் எங்கே என்று கேட்டார். இவ்வாறு வஞ்சிக்கப்பட்டும், மனம் சலியாது, பலியானவன் "பரமபுருஷனே! நான் உமக்கு அளித்த வாக்கைப் பொய்யாக் கேன். மூன்றாவது அடியை என் தலைமீதுவைத்து அனுக்கிரகிப்பீராக! எனக்கு ஏற்பட்டுள்ள நரக வாஸமோ, ஐசுவரிய நாசமோ, மற்றைய கஷ்டங் களோ இவற்றால் நான் துக்கமடையேன். எனது வாக்கு ஸத்தியமாக வேண்டியதுதான் எனது அபீஷ்டம். முக்தியளிக்கவல்ல உமது பாதார விந்த ஸ்பரிசம் கிடைக்க நான் என்ன பாக்கியம்

பெற்றிருக்கவேண்டும்! எனது பாட்டனை பிரகலாதன் உமது பாதங்களில் அசஞ்சலமான பக்தி செய்து மேன்மை யடையவில்லையா ?'' என்று பரம பக்திபூர்வமாய்ப் பதிலளித்தான். அச்சமயம் பிரகலாதனும், பகவானை வணங்கி, "ஆதி புருஷனே, பூர்வம் நீரே இவனுக்கு இந்திரபதவி யளித்துள்ளீர். இவன் மோகங்கொண்டு மதோன்மத்தனானபொழுது, இவனது ஐசுவரியத்தைப் போக்கி யருளினதும் ஒரு பெரிய அனுக்கிரகமே'' என்று புகழ்ந்து துதித்தான். இச்சமயம் சதுர்முகப் பிரம்மனும் மதுஸூதனனை நமஸ்கரித்து, தேவதேவனே, இவன்மீது கருணைகூர்ந்து, இவனைக் கட்டவிழ்த்துவிட்டு அனுக்கிரகிப்பீராக! இவன் தனது ஐசுவரியம், கர்மார்ஜிதமான லோகங்கள், ஆத்மா எல்லாவற்றையும் உமக்கு அர்ப்பணம் செய்துவிட்டான். உமது பாதோதகஸ்பரிசம் பெற்றுள்ளான். இனிமேல் இவனுக்குத் துர்க்கதி நேரிடுவது உசிதமாகுமா? உத்தமகதியே இவனுக்கு எற்கும்' என வேண்டிக்கொண்டார்.

இதுகேட்ட பகவானும் 'பிரமனே, ஐசுவரியாதிகள் புருஷருக்கு மதத்தையுண்டுபண்ணி, என்னையும், லோகமரியாதையையும் அவமதிக்கச் செய்யக்கூடும். எவனை நான் அனுக்கிரகித்து நற்கதியடைவிக்கக் கருதுகிறேனோ, அவனது ஐசுவரியத்தை அபகரித்து, அகத்தை அடக்குவேன். இவன் தானவர்களுள் பரம சிரேஷ்டன்; பெருங்கீர்த்தியுள்ளவன். பிரபலமான மாயையும் கடந்தவன். குரு முதலானோர் தடுத்தும், ஸத்தியந்தவறாது நடந்தவன். தேவர்களும் அடையக்கூடாத பதவியை இவனுக்கு அளித்துள்ளேன். அடுத்த மன்வந்திரத்தில் இவன் தேவேந்திரன் ஆகப் போகிறான். அதுவரையில் விச்வகர்மாவால் நிர்மாணிக்கப்பெற்ற ஸுதல லோகத்தில், இவன் பந்து மித்திர வர்க்கங்களுடன், யாதொரு வியாதி, மனக்குறைவுமில்லாமல் சுகமாய் வாழ்ந்துவருவான். இவனை லோகபாலர்களும் எதிர்த்து இம்சிக்க முடியாது. எனது சக்ராயுதம் இவனைச் சதா காத்துக்கொண்டிருக்கும். நானும் என் பரிவாரங்களுடன் அங்கு ஸான்னித்தியம் செய்வேன். இதனால் இவனது அஸுரஸ்வபாவம் முற்றும் நீங்கி, இவன் தர்மிஷ்டனாய்ப் பரிபாலித்து வருவான்'' என்று அனுக்கிரகித்தருளினார்.

இதையெல்லாம் கைகுவித்து வணங்கி நின்ற செவியுற்ற மகாபலி, "பருமபுருஷனே, உமது கருணையை எவ்வாறு வர்ணிப்பேன். லோகபாலர்களும் அடைவதற்கரிய பதவியை எனக்களித்த உமது பக்த வாத்ஸல்யம் என்னே! உமக்கு அநந்த கோடி நமஸ்காரம்'' என்று கூறி, பக்திபரவசனானான்.

பின்னர் மகாபலி, கட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டு, ஸுதலலோகம் சென்று, ஸுகமாய் வாழ்ந்து வந்தான். பகவானது விருப்பத்துக் கேற்ப, சுக்கிராசாரியர் மகாபலியின் யாகத்தைப் பூர்த்தி செய்வித்து, அதன் பலம் முழுமையும் சித்திக்கும்படி பண்ணினார்.

பகவான் இந்திரனுக்குத் தேவலோகத்தைத் திரும்ப அளித்து, அதிதியின் மனோரதத்தை ஈடேற்றி வைத்தார். பிறகு தேவாதிகள் வாமன ரூபியை உபேந்திரனாக முடிசூட்டி, உத்ஸவம் கொண்டாடினர்.

வாமன திருவிக்ரமர்களின் திருவடிகளே சரணம்!

வர்த்தமானக் குறிப்புகள்

NEWS AND NOTES

ஆங்கில நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம்:—16,99000-பேர் ஆங்கில நாட்டில் வேலையில்லாது திண்டாடுகின்றனராம்.

* * *

சமஸ்கிருதக் கல்வி:—சேக்௳ளரி சங்கர கோரங்கா என்பார் சமஸ்கிருதக் கல்வியின் அபிவிருத்திக்காக 5½-லக்ஷம் ரூபாய் நன்கொடையளித்துள்ளார். * * *

திருப்பதி மலைமீது மின்சார விளக்கு.—திருப்பதி மலைமீது செல்லும் ஏழு மைல் ரஸ்தாவுக்கும் மின்சார தீபம் போட ஏற்பாடு முடிந்துவிட்டது. இது அங்குச் செல்லும் யாத்திரிகர்களுக்கு மிகுந்த சௌகர்யத்தை உண்டு பண்ணுமென்பதில் தடையில்லை. * * *

பாட்னாவில் ஆயுர்வேத கலாசாலைகள்:—பொது ஜனங்களின் வேண்டுகோளின்படி ஆயுர்வேதம், திப்பி இரண்டையும் அனுபவ பூர்வமாகப் போதித்து உள் நாட்டு வைத்திய முறையை அபிவிருத்தி செய்வதற்காக கவர்ன்மெண்டார் பாட்னாவில் இரண்டு கலாசாலைகளை ஏற்படுத்த முடிவு செய்துவிட்டனர். அனடமி, பிஸியாலஜி, பேதாலஜி, பார்மகாலஜி; பாக்டிரியாலஜி, ஸர்ஜெரி, மிட்வைபரி முதலியவற்றின் ஆரம்ப வழிகளும் போதிக்கப்படும்.

24377.

1926 அமிருதாஞ்சனம் காலண்டர்கள் 1926

அழகிய மூன்று கலர்களில் ஸ்ரீ கிருஷ்ணன், மோஹினி ஆகியவர்களின் படங்கள், பிரபல சித்திரக்காரர்களால் எழுதப்பட்டவை.

ஒன்று விலை ரூ *0—2—0*; டஜன் ரூ. *1—4—0*; *100* ரூ. *9—12—0*.

தினசரி கிழிக்கக்கூடிய ஆபீஸ் காலண்டர் **1**-க்கு அ **4**. (தபால் பாக்கிங் சார்ஜ் வேறு.)

அமிருதாஞ்சனம்

ஸர்வ நோய்களுக்கும் ஸித்த ஔஷதம்

அமிருதாஞ்சனம் அபூர்வமான மூலிகைகளிலிருந்து செய்யப்படுகிறது. எல்லா நோய்களுக்கும், தோலைப்பற்றிய சொறி சிரங்குகளுக்கும், வெட்டுக்காயம், இறுமல் முதலிய உபத்திரவங்களுக்கும் கைகண்ட மருந்து (விலை அணா பத்து). அமிருதாஞ்சனம் எல்லாவிடத்திலும் கிடைக்கும்.

இதர அமிருதாஞ்சனம் ஔஷதங்கள்

படைத்தைலம். — இது எல்லா விதமான படைகளையும் போக்கும் இரண்டு தடவை உபயோகித்தவுடன். எவ்வித படையும் போய்விடும். விலை டப்பி ஒன்றுக்கு அணா ஆறு.

தந்தசூரணம்.—பல்துலக்க இது நல்ல தூள். பல் வியாதி, ஈறுவலி முதலியநோய்கள் நீங்கும். தினந்தோறும் உபயோகித்தால் பல் வெண்மையாகிமுகவசீகரமுண்டாகும். விலை டப்பி ஒன்று அணா 2.

அமிருதாஞ்சனம் டிப்போ,
நெ. 7, தம்புசெட்டி தெருவு, ஜார்ஜ் டவுன்,
சென்னைப்பட்டணம்.

THE QUEEN OF HAIR OILS

KAMINIA OIL (Registered)

கூந்தல் வளர் எண்ணெய்களுள் ராணி

காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்)

இந்தக் காமினியா எண்ணெய் அதிக விலை உயர்ந்த சாமான்களடங்கியது. இது மயிர் உதிர்வதையும் மண்டை குடைச்சலையும் நிறுத்தி, பொடுகைப் போக்கிப் புது மயிர் வளர்ச்சியை விருத்திசெய்து வர்ணம் மாறிய கூந்தலை சுபாவ வர்ணத்திற்குத் திருப்பும். இது வியாபாரிகளுக்கும், மூளை சம்பந்தமாய் உழைப்புள்ளவர்களுக்கும, மாணுக்கர்களுக்கும், மூளையைக் குளிரச்செய்து ஞாபக சக்தியை விருத்திசெய்து தலையின் அடிப்பாகத்தைச் சுத்திசெய்யும். இதுவும் தவிர, காமினியா ஆயில், அதிக வாசனையுமுடையது.

நற்சாக்ஷி பத்திரம்

மூவத்துப்புழையி லிருக்கும் மிஸ்டர் பன்லோஸ் எழுதுகிறார் :—காமினியா தைலத்தை நான் மிகவும் சந்தோஷத்துடன் உபயோகித்தேன். அதின் அபூர்வமான குணங்களைப் பற்றி உங்களுக்கு வந்தனம் செய்யப் போதுமான காரணத்தைக் கண்டேன். இந்தத் தைலம் அதிக குளிர்ச்சியைக் கொடுப்பதும் தவிர, கொடிய தலைவலியை துரத்துகின்ற நிபுண "டாக்டர்". தயவுசெய்து ஒரு புட்டி காமினியா ஆயில் வி. பி-யில் சீக்கிரம் அனுப்பவும்.

மைசூர் பொருட் காட்சியில் தங்கமெடலும், அலஹாபாத் பொருட்காட்சியில் நல்ல நற்சாக்ஷிப் பத்திரமும் பெற்றிருக்கிறது.

ஒரு தரம் உபயோகிக்கவும்

ஒரு புட்டியின் விலை ரூ.	1 0 0	வி. பி. தபால் செலவு ரூ.	0 5 0 பிரத்தியேகம்
4—புட்டிகள்	,, 2 10 0	,, ,,	,, 0 14 0 ,,

☞ எச்சரிக்கை :—காமினியா ஆயில் ஒவ்வொரு முக்கியமான பட்டணங்களிலும் கிராமங்களிலுமுள்ள கடைகளில் விற்கப்படுகிறது. உங்களுடைய சமீபத்தில் காமினியா ஆயில் விற்பவர் இல்லாவிடில், கீழ்க்கண்ட விலாசத்திற்கு நேராய் ஆர்டர் அனுப்பவும். ஆனால் உங்களூர் வியாபாரிகளிடம் வாங்கும்பொழுது, தங்களுக்கு அதிக லாபம் கிடைக்கும். வேறு மாதிரியான தெரியாத எண்ணெய்களை இதுதான் நல்ல எண்ணெய் என்று இந்தக் காமினியா ஆயிலுக்குப் பதிலாய்க் கொடுக்க முயற்சிசெய்வார்கள். காமினியா ஆயிலைத் தவிர நல்ல குணமுடைய வேறு எண்ணெய்கள் கிடையாததினுல், அவர்கள் முயற்சிக்கு ஏமாருமல் எப்பொழுதும் இக் காமினியா ஆயிலே வேண்டுமென்று சொல்லிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஸோல் ஏஜண்டுகள் :— ஆங்கிலோ இண்டியன் டிரக் அண்டு கெமிகல் கம்பெனி,
155, ஜும்மா மஸீத், பம்பாய்.

Printed at the B. N. Press & Published by V. Kuppuswami Aiyar, 69, Brodies' Road, Mylapore, Madras.